மாலை 47 மணி 12 டிசம்பர் 2005 விலை ரூ10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு

## நினைத்தாலே முத்திதரும் திருவண்ணாமலை



தியாக சமுத்திரம்
ஜடாயு

அம்மணி அம்மாள்
கோபுரம்

அரியணை தாங்கிய
அனுமன்

ஆறுமுகமங்கலம்
ஆயிரத்தெண் விநாயகர்





# அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை-5


தொலை பேசி:: 28442462

Web site : www.sriparthasarathyswamytemple.com

E.mail : parthasarathytemple@vsnl.net


## வைகுண்ட ஏகாதசி பரமபதவாசல் திறப்பு வைபவம்

''விற்பெருவிழவும் கஞ்சனும் மல்லும் வேழமும் பாகனும் வீழச்
செற்றவன் தன்னைப்புரமெரிசெய்த சிவனுறுதுயர்களை தேவை
பற்றலர்வீயக் கோல்கையில் கொண்டு பார்த்தன் தன் தேர் முன்நின்றானைச்
சிற்றவை பணியால் முடிதுறந்தானைத் திருவல்லிக்கேணி கண்டேனே''.

- திருமங்கையாழ்வார்.

திருமகள் கேள்வனான எம்பெருமான், இப்பூவுலகத்திலுள்ள உயிர்களை உய்விக்க வேண்டுமென்று திரு உள்ளம் கொண்டு, பின்னானார் வணங்கும்சோதி என்று கொண்டாடப்படும் வகையில் பல்வேறு திருக்கோலம் கொண்டு அருளுகிறார்.

மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களால் பாடல்கள் பெற்ற 108 திவ்ய தேசங்களில் தொண்டை மண்டலத்தில் ஒன்றான திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் ஸ்ரீ ருக்மணித் தாயாருடன் எழுந்தருளும் அருள்மிகு பார்த்தசாரதி சுவாமிக்கு முத்துடைத்தாமம் நிறை தாழ்ந்த பந்தல் கீழ், நம் திருமாமணி மண்டபத்தில் கோப்புடைய சீரிய சிங்காதனத்தின் மேல் நாமும் நம் நாச்சிமார்களும் என்கிற எம்பெருமான் திருஉள்ளப்படி பகல்பத்து, வைகுண்ட ஏகாதசி, இராப்பத்து கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது,

பகல்பத்து உற்சவம் 31.12.2005 முதல் 9.1.2006 வரை நடைபெறுகிறது. தினசரி மாலை 6.00 மணிக்கு உட்புறப்பாடு நடைபெறும்.

10.1.2006 வைகுண்டஏகாதசி - அதிகாலை 4.30 மணிக்குச் சொர்க்கவாசல் திறப்பு.

இராப்பத்து உற்சவம் 10.1.2006 முதல் 20.1.2006 வரை நடைபெறுகிறது. 11.1.2006 காலை 10.30 மணிக்கும், 12.1.2006 முதல் 18.1.2006வரை மாலை 6.00 மணிக்கும், 19.1.2006 அன்று காலை 9.30 மணிக்கும் சொர்க்கவாசல் திறக்கப்படும்.

அடியவர்கள் அனைவரும் தவறாது இப்பெருவிழாவில் கலந்து கொண்டு, அருள்மிகு ருக்மணி சமேத பார்த்தசாரதி சுவாமியின் திருவருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்,

**அன்னதானத் திட்டம்:**

மாண்புமிகு தமிழக முதல்வரால் அறிவிக்கப்பட்ட அன்னதானத் திட்டம் இத்திருக்கோயிலில் 23.3.2002 முதல் நன்கொடைதாரர்களால் சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது. நாள் ஒன்றுக்கு 100 நபர்களுக்கு அன்னதானம் வழங்கக் கட்டணம் ரூ. 1200/-ம். ஆண்டுதோறும் குறிப்பிட்ட தினத்தில் அன்னதானம் வழங்க வைப்புத் தொகையாக ரூ 15,000/- திருக்கோயிலில் செலுத்தி. மேற்படி திட்டத்தில் பங்கு பெற்று அருள்மிகு ருக்மணி சமேத பார்த்தசாரதி சுவாமியின் பேரருளுக்குப் பாத்திரராகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்,

ஆ.குப்புசுவாமி பி.ஏ.,பி.எல்.

துணை ஆணையாளர்/ செயல் அலுவலர்/தக்கார்.




# திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2036 பார்த்திப மார்கழி
மாலை 47 மணி 12 டிசம்பர் 2005


## அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

''வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்'' என்று நீரின்றி வாடிய பயிர்களுக்காகவும் பரிதாபப்பட்ட அருட்பிரகாசவள்ளலார்தம் ஜீவகாருண்ய நெறி போற்றும் நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கண்டுள்ள மகத்தான திட்டம்தான் **''யானைகள் நலவாழ்வுப் புத்துணர்வு முகாம்''** திட்டம் ஆகும்.

நம் சமய நம்பிக்கையின் அடையாளமாகவும், வழிபாட்டுச் சடங்குகளின் சிறப்பம்சமாகவும் திகழும் திருக்கோயில் யானைகள் உரிய முறையில் பேணிப் பராமரிக்கப்பட வேண்டி நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2003ஆம் ஆண்டு தொடங்கி வைத்த ஒப்பற்ற திட்டம் தான் **''யானைகள் நலவாழ்வுப் புத்துணர்வு முகாம்''** எனும் திட்டம் ஆகும்.

கடந்த 2003, 2004 ஆம் ஆண்டுகளில் சிறப்புற நிகழ்த்தப் பெற்ற **''யானைகள் நலவாழ்வுப் புத்துணர்வு முகாம்''**, இவ்வாண்டும் நவம்பர் 21ஆம் நாள் முதுமலையில் சிறப்புறத் தொடங்கப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு ஜனவரி 7ம் நாள் முடிய 48 நாட்கள் நடைபெறவுள்ள இந்த யானைகள் நலவாழ்வுப் புத்துணர்வு முகாமில் கோயில் யானைகளுடன் தனியார் யானைகளுமாக மொத்தம் 65 யானைகள் பங்கேற்றுப் பயன் பெற்று வருகின்றன.

இந்தியத் திருநாட்டில், நம் தமிழ்மாநிலத்தில்தான் இம்மகத்தான ஜீவகாருண்யத் திட்டம் நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் முதன் முதலாக தொடங்கப்பட்டு சீரிய முறையில் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகின்றது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடனும்பெருமையுடனும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த டிசம்பர் 2005 திருக்கோயில் இதழ் கார்த்திகைத் தீபச் சிறப்பிதழாய் மலர்ந்துள்ளது.

**''அண்ணாமலையை வலம் வருவேன் என்று ஓரடி எடுத்து வைக்கும் போதே எத்தகைய பலன் உண்டாகும்?'' '' மலைவலம் வாகனத்தில் வரலாமா ? கூடாதா?''** - இவற்றை எல்லாம் தெளிவாக இந்தத் **''திருக்கோயில்''** இதழ் வாசகர்களுக்குத் தெளிவுபடுத்துகின்றது.

**''திருவண்ணாமலையின் வடக்குக் கோபுரம் ஏன் அம்மணியம்மாள் கோபுரம் என அழைக்கப்படுகின்றது?''** என்பதன் விளக்கமும் இந்த இதழில் காணலாம்.

மேலும் **''தியாகசமுத்திரம் ஜடாயு'', ''அரியணை தாங்கும் அனுமன்''** போன்ற அரிய கட்டுரைகளும் இவ்விதழைப் பொலிவுபடுத்துகின்றன.

**''நாம ஜெபமே நடைமுறையில் மக்கள் மனதைக் குளிர்விக்கும்''** என்று தெளிவுபடுத்துகின்றார் ''எழுத்துச்சித்தர்'' பாலகுமாரன் அவர்கள்.

தவத்திரு ஞானியார் சுவாமிகள் கூறும் **''ஓரணாவும் மாம்பழமும்''** உங்கள் நெஞ்சைவிட்டு நீங்காது என்று நம்புகின்றேன்.

வழக்கமான அத்தனைச் சிறப்பம்சங்களுடனும் வெளிவரும் டிசம்பர் திருக்கோயில் இதழை, வழக்கம் போல் வரவேற்று விரும்பிப் படித்துப் பயன்பெறுமாறு மிக்க அன்புடன் வேண்டுகின்றேன்.

அன்புள்ள

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
ஆணையாளர்


இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.

மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர் அவர்களின் அறிக்கை :

# மேலும் 9 திருக்கோவில்களில் அன்னதானத் திட்டம்



தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு அத்திருக்கோவில்களிலேயே இலவசமதிய உணவு அளிக்கும் வகையில், அன்னதானத் திட்டத்தைக் கடந்த 2002-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 23-ந் தேதி சென்னை மைலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலில் நான் தொடங்கி வைத்தேன். தமிழ்நாட்டில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 63 திருக்கோவில்களில் முதல் கட்டமாக இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

தொடர்ந்து 2002-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 63 கோவில்களுக்கும், செப்டம்பர் மாதத்தில் 18 கோவில்களுக்கும், 2003-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18

## இதழின் உள்ளே ....


1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை : மேலும் 9 திருக்கோயில்களின் அன்னதானத்திட்டம் 2
2. நினைத்தாலே முத்திதரும் திருவண்ணாமலை - அருள்செல்வி 3
3. காலச்சுவடுகள் : அருள்நிறை அம்மணி அம்மாள் கட்டிய திருவண்ணாமலை வடக்குக் கோபுரம் - நிறைமதி பி.எல் 6
4. இறைவன் திருப்பெயரை இடையறாது கூறுங்கள் - ''எழுத்துச்சித்தர்'' பாலகுமாரன் 8
5. அரியணை தாங்கிய அனுமன் - பேராசிரியர் த.அகரமுதல்வன் 11
6. திருப்புகழில் மாருதி - திருப்புகழ் மணி மு. அருணகிரி 13
7. தியாகசமுத்திரம் ஜடாயு - முனைவர் டி, செல்வராஜ் 14
8. திருவிசலூர் கிணற்றில் பொங்கிய கங்கை - ஏ. கிருஷ்ணன் 17
9. கேள்வி - பதில் 19
10. மகாபாரதம் - முனைவர் த. அமிர்தலிங்கம் 20
11. ஓரணாவும் மாம்பழமும் - தவத்திரு ஞானியார் சுவாமிகள் 23
12. திருமந்திர உபதேசம் - திருமந்திரச் செல்வர் டி.வி. வெங்கட்ராமன் இ.ஆ.ப (ஓய்வு) 24
13. பாம்பன் சுவாமிகள் வாழ்வில் நடைபெற்ற சில அற்புதங்கள் - தா. சந்திரசேகரன் இ.ஆ.ப. 26
14. தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை - கடுவெளிச் சித்தர் - முனைவர் இரா. செல்வக்கணபதி 28
15. திருவரங்கனைக் கண்ட திருக்கண்கள் - திருமதி பத்மாவதி பிஎஸ்.சி; எம்.எட். 30
16. வைகுண்ட ஏகாதசி - எம்.என். இராஜா 32
17. திருவிளையாடல் புராணம் - இரா.அரங்கசாமி 35
18. ஆறுமுகமங்கலம் அருள்மிகு ஆயிரத்தெண் விநாயகர் 36
19. கார்த்திகை தீபச் சிறப்பு - திருமிகு டாக்டர் பு.ஏ. இராமையா, இ.ஆ.ப. 37
20. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை : ஓதுவார்கள், பூசாரிகள், அர்ச்சகர்கள் ஓய்வூதியம் ரூ. 750 ஆக உயர்வு 40

கோவில்களுக்கும், 2004-ம் ஆண்டு ஜுன் மாதத்தில் 9 கோவில்களுக்கும் இந்தத் திட்டம் விரிவு படுத்தப்பட்டு, தற்போது மொத்தம் 171 திருக்கோவில்களில் அன்னதானத்திட்டம் மிக சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் மட்டுமின்றி மற்ற மாநிலங்களில் இருந்து தமிழகத்திற்கு வருகை தருகின்ற பக்தர்களின் ஏகோபித்த பாராட்டையும், வரவேற்பையும் பெற்றுள்ள இந்தத் திட்டத்தை மேலும் 9 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்த நான் தற்போது ஆணையிட்டு உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி,

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிநகர், அருள்மிகு ஏகாம்பரநாதர் கோவில்.

காஞ்சிபுரம் மாவட்டம், திருவிடந்தை, அருள்மிகு நித்ய கல்யாண சுவாமி கோவில்.

விழுப்புரம் மாவட்டம், பூவரசகுப்பம் அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி கோவில்.

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம் காளிப்பட்டி அருள்மிகு கந்தசாமி கோவில்.

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப் பேட்டை, அருள்மிகு மாரியம்மன் கோவில்.

ஈரோடு மாவட்டம், ஈரோடு நகர், அருள்மிகு ஆருத்ராகபாலீஸ்வரர் கோவில்.

தஞ்சைமாவட்டம், கும்பகோணம் அருள்மிகு ஆதி கும்பேஸ்வரர் கோவில்.

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம் அய்யர்மலை சிவாயம், அருள்மிகு ரத்தினகிரீஸ்வரர் கோவில்.

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீ வைகுண்டம் வட்டம், ஆழ்வார் திருநகரி, அருள்மிகு ஆதிநாத ஆழ்வார் கோவில்.

ஆகிய 9 கோவில்களில் கூடுதலாக அன்னதானத் திட்டத்தை 6-11-2005 அன்று முதல் செயல்படுத்திட நான் தற்போது ஆணையிட்டு உள்ளேன்.

இதன் மூலம், அன்னதானத்திட்டம் செயல் படுத்தப்படும் திருக்கோவில்களின் எண்ணிக்கை மொத்தம் 180 ஆக உயர்ந்து உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



# நினைத்தாலே முத்தி தரும் திருவண்ணாமலை

- அருள்செல்வி

கிருதயுகத்தில் நெருப்புமலை, திரேதா யுகத்தில் மாணிக்கமலை, துவாபரயுகத்தில் பொன்மலை, கலியுகத்தில் கல்மலை.

அதுதான் ஞானத்தபோதனர்களை வா என்று அழைக்கும் திருவண்ணாமலை.

தில்லையைத் தரிசிப்பதாலும், காசியில் இறப்பதாலும், திருவாரூரில் பிறப்பதாலும் முத்தியுண்டாகும்.

நேரில் சென்று தில்லையை வணங்குவது எல்லோராலும் இயலாது, காசியில் இறப்பதற்கும் எல்லோருக்கும் வாய்க்காது. திருவாரூரில் பிறப்பதும் நம் செயல் அன்று.

ஆனால் அண்ணாமலையை ஒன்றியிருந்து ஒரு முறை நினைத்தால் யாவர்க்கும் எளிது, அவ்வாறு ஒரு முறை நினைத்தாலும் முத்தி எளிதில் வாய்க்கும்.

ஆகவேதான் திருத்தலங்கள் யாவற்றிலும் சிறந்த ஒப்பற்ற திருத்தலம் திருவண்ணாமலையே என்று நந்திதேவரும் மார்க்கண்டேய முனிவருக்கு

# அண்ணாமலையை வலம் வர உண்டாகும் பலன்கள்



திருவண்ணாமலையை வலம்செய்தல். பிறவிப் பெருங்கடலைத் தாண்டுவதற்குரிய தெப்பம் ஆகும்,

ஏழுநரகம் புகாமல் வீட்டுலகு ஏறுதற்கு உரிய ஏணியாகும்.

காசி முதலான புண்ணிய திருத்தலங்களைக் கற்பகாலம் பூசைசெய்யும் பலனை அண்ணாமலையை ஒரு முறை வலம் வந்தாலே பெற்றுவிடலாம்,

திருமலையை வலம் வருவேன் என்று ஓரடி எடுத்துரைத்தால் யாகம் செய்தபலன் கிடைக்கும். இரண்டடி எடுத்துவைத்தால் இராசசூயயாகம் செய்தபலன்கிடைக்கும்,

மூன்றடி எடுத்துவைத்தால் எல்லாவித யாகமும் செய்த பலன் கிடைக்கும். நான்கடி எடுத்து வைத்தால் கோடி விமானம், தூபிகளையுடைய கோயில் கட்டிய புண்ணியம் கிடைக்கும்.

எடுத்துரைப்பதாக அருணாசலப் புராணம் கூறுகின்றது.

ஒரு முறை படைப்புக்கடவுளான பிரம்மாவிற்கும், காக்கும் கடவுளான திருமாலுக்கும் தம்முள் உயர்ந்தவர் யார் என்ற தருக்கம் உண்டானது.

''பதினான்கு உலகங்களையும், ஏழு மேகங்களையும், ஏழுகுல பருவதங்களையும், அசையும் பொருள், அசையாப் பொருள் அனைத்தையும் நானே உண்டாக்கினேன். ஆகவே நானே உயர்ந்தவன்'' என்று தருக்கினார் பிரம்மா.

மேலும் பிரம்மா திருமாலை நோக்கி ''நான் உலகத்தைப் படைக்கவில்லையானால் நீஎப்படிக் காப்பாற்றுவாய்?''என்றும் வினா கொடுத்தார்.

இத்தோடு நிற்கவில்லை பிரம்மா, ''திருமாலே! நீபிருகு முனிவர் இட்ட சாபத்தினால் பூமியில் பலமுறை பிறந்தாய். நீபிறந்த போதெல்லாம் உனக்குரிய பெரிய உடல்களைப் படைத்துப் படைத்து என் கைகள் கறுத்துவிட்டன''.

''நம் உந்தியில் தானே இவன் பிறந்தான் என்று இறுமாப்பு வேண்டாம். நீமுன்னொருகால் ஒரு தூணின்கண் பிறந்தாய். ஆகவே அத்தூணை உன்தகப்பன் என்று கூற முடியுமா?'' என்று திருமாலை ஏளனமும் செய்தார் பிரம்மா.

பிரம்மன் கூறியவற்றைக் கேட்க கேட்க திருமாலுக்குச்சினம் மூண்டது.

''பிரம்மனே! நீவந்த வழியை மறந்து பேசுகிறாய். எனது கொப்பூழ் உனது தாய் என்று நினைக்கவில்லை''.

''மது என்பவனும், கைடவன் என்பவனும் என் பிள்ளைகளே. ஆயின் என்னை இகழ்ந்த அவர்களை நானே கொன்று போட்டேன். அதைப் போல் உன்னையும் கொன்றொழிக்கத் தயங்க மாட்டேன்''.

''சிவபெருமான் உன் ஐந்து தலைகளில் ஒன்றைப் பறித்து எறிந்தாரே! அந்தத் தலையை மறுபடியும் படைத்துக் கொள்ள முடியாத நீயா படைப்புக் கடவுள் என்று ஆணவம் கொண்டு அலைகின்றாய்?''

''சோமுகாசூரன் உன் வேதங்களைப் பறித்து மறைந்த போது நான்தானே மச்சாவதாரம் கொண்டு அவனைக் கொன்று மறைகளை மீட்டுத்தந்தேன். பற்பல அசுரர்களைக் கொன்றொழித்த எனக்கு உன்னை அழிப்பது ஒரு காரியமா?'' என்று பிரம்மன்மேல் சீறினார் திருமால்

இவ்வாறு பிரம்மாவிற்கும், திருமாலுக்கும் இடையே வாதம் வளர்ந்து போரும் மூண்டது. போரினால் அண்டகோடிகள் அனைத்தும் அதிர்ந்தன.

தேவர்கள் யாவரும் இப்போரினால் அச்சமுற்று முழுமுதற் பரம் பொருளாகிய சிவபெருமானைச் சென்று தஞ்சம் அடைந்தனர்.

தேவர்கள் முனிவர்கள் நடுக்கம் தீர, திருமாலும் பிரம்மனும் பகைமை நீங்க, அண்ட கோடிகள் எல்லாம் அழியாமல் தடுக்கத் திருவுளம் கொண்ட சிவபெருமான் நெருப்புருவோடு கூடிய ஒரு பெருமலையாக அவ்விருவருக்கும் நடுவே தோன்றினார்.

ஒளிமயமாகத் தோன்றிய நெருப்பு மலையைப் பார்த்து வியப்புற்ற திருமாலும், பிரம்மாவும் தமது யுத்தத்தை நிறுத்திக்

கொண்டார்கள். இந்த மலையினது அடியையாவது, முடியையாவது அறிகின்றவரே பெரியவர் என்று அவர்களாக ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

''இந்த மலையின் அடியை நான் அறிந்து வருவேன்''

என்ற திருமால் வராக வடிவம் பூண்டார்.

இந்த மலையின் முடியைக் காண்பேன் என்ற பிரம்மா அன்னப் பறவையாக வானில் பறந்தார்.

அரைவினாடியில் பிரம்ம தேவர் ஆயிரம் காத வழி மேலே பறந்தார். ஆயிரம் காதம் பறந்தும் முடியைக் காணமுடியவில்லை. இவ்வாறு ஆயிர வருட காலம் பறந்து கோடான கோடி காத தூரம் பறந்தும் பிரம்மாவால் முடியை எட்ட முடியவில்லை.

திருமாலும் வராக வடிவில் நொடிக்கு ஆயிரம் காதம் கீழாகப் போனார். அவரும் ஆயிர வருடம் பூமிக்குக் கீழாகக் கோடான கோடி காத தூரம் போய் அவரால் அடியைக் காணமுடியவில்லை.

நூறுதேவ ஆண்டுக்காலம் அடியைத் தேட முயன்று முடியாமல் போன திருமால், இது சிவனருட்செயல் எனத் தெளிந்து தாம் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்ந்து, சிவபெருமானைப் பலமுறையும் பணிந்து வணங்கிப் போற்றினார்.

ஆனால் பிரம்மாவோ, நூறு தேவ ஆண்டுக்காலம் வானில் பறந்து ஜோதியின் முடியைக் காண முடியாமல் துன்புற்றபோது, தாழம்பூவின் மடல் ஒன்று மேலிருந்து இறங்கிவரப் பார்த்தான்.

''தாழம்பூவே! நில், நீஎங்கேயிருந்து வருகிறாய்?'' என்று பிரம்மா வினவத் தாழம்பூவும் பிரம்மனாலும், திருமாலாலும் அறிய முடியாத சிவபெருமானுடைய திருமுடியிலிருந்து தவறி விழுந்து நாற்பதினாயிரம் ஆண்டுகளாகக் கீழ்நோக்கி வந்து கொண்டுள்ளேன். நான் இன்னும் உலகை அடைய முடியவில்லை'' என்று கூறியது.

''நான் தான் பிரம்மன். நானும் திருமாலும் அழல் உருவான இம் மலையின் அளவை அறிந்து கொள்ள விரும்பினோம். அடியைத் திருமால் தேடிப் போனார். திருமுடியைத் தேடிக் காண நான் முற்பட்டேன். நீஎன்பொருட்டுத் திருமாலிடம் வந்து நான் சிவபெருமானின் திருமுடியைக் கண்டு, திருமுடியிலிருந்து உன்னைக் கொண்டு வருவதாகச் சாட்சி கூற வேண்டும்'' என்று தாழம்பூவிடம் தனக்காகப் பொய்ச் சாட்சி கூறுமாறு வலியுறுத்தினான் பிரம்மா.

தாழம்பூவுடன் திருமாலிடத்திற்கு வந்து நின்ற பிரம்மா ''சிவபெருமானுடைய திருமுடியைக் கண்டு வந்தேன். இதற்கு இத்தாழம்பூவே சாட்சி'' என்று கூறினார். தாழம்பூவும் ''உண்மைதான், பிரம்மா திருமுடியைக் கண்டார்'' என்று கூறியது.

அப்பொழுது படீரென்று தழல் மலை வெடித்தது. அவ்வெடிப்பிலிருந்து வெளிப்பட்டார் சிவபெருமான்.

''பிரம்மனே! ஆணவத்தால் நீகூறிய பொய் வார்த்தைகள் நன்று நன்று'' என்று கோபித்த சிவபெருமான் ''கண்டேன் எனப் பொய் புனைந்துரைத்த உனக்குப் பூமியில் கோயிலும், பூஜையும் இல்லாமல் போகட்டும்'' எனச்சபித்தார்.

தாழம்பூவையும் பார்த்து ''பிரம்மனுடன் சேர்ந்து பொய் சாட்சி கூறிய உன்னை இன்று முதல் யாம் தீண்டோம்'' என்று சபித்தார்.

தம்மைப் பரம்பொருள் எனக் கொண்டாடி மெய்யுரைத்த திருமாலைப் பூரிப்புடன் பார்த்த சிவபெருமான் ''எமக்குச் சமமாகப் பூமியில் உமக்கும் கோயிலும் பூஜையும் உண்டாகும்'' என்று வரம் அளித்தார்.

மேலும் சிவபெருமான் திருமாலையும், பிரம்மாவையும் நோக்கி ''யாம் இத்தலத்தில் உமக்கு அருள் பாலித்துக் காட்சி நல்கியமையால் பிரளய காலத்திலும் அழிவின்றி இம்மலையும், நகரமும் அழிவின்றி நிற்பதோடு, இவ்வண்ணாமலையை நினைப்பவர்க்கெல்லாம் முத்தியும் சித்திக்கும்'' என்று திருவருள் புரிந்தருளினார்.

மேலும் சிவனருளால் அகண்ட ஒளிவடிவாய் சிவபெருமான் தோன்றிய அந்த அழல்மலை இன்றுள்ளது போல் சிறிய உருவம் கொண்ட மலையாக மாறி அமைந்தது.

திருமாலும், பிரம்மாவும், ஏனைய தேவர்களும் முனிவர்களும் ''இறைவா! தாங்கள் மலைவடிவமாக இருப்பின் யாங்கள் எவ்வாறு நீராட்டி அருச்சிக்க இயலும். இம்மலையின் கீழ் இலிங்க வடிவாய் எழுந்தருள வேண்டும்'' என்று வேண்டினார்கள்.

சிவபெருமானும் உலகனைத்தும் வழிபட்டு உய்யும்வகையில் மலையின் கீழ் ஓர் லிங்கமாய்த் தோன்றினார்.

மேலும் சிவபெருமான் திருவருளால் நகரும், முந்நூற்றறுபது திருக்குளங்களும் தோன்றின.

பிரம்மாவும், திருமாலும் அத்தீர்த்தங்களில் மூழ்கி மரவுரி அணிந்து சடையை லிங்க வடிவாகக் கட்டித் திருநீறணிந்து உருத்திராக்கம் பூண்டு, திருவண்ணாமலையை வலம் வந்து வணங்கிப் போற்றினர்.



**★★ சிவபெருமானும் ''கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில் மலையின் உச்சியில் ஒரொளி காண்பிப்போம். அவ்வொளியைக் கண்டு வழிபடுவோர் தம் இருபத்தி ஓர் தலைமுறையில் உள்ளவர்களுக்கும் வீடுபேறு வழங்குவோம்'' என்று திருவாய் மலர்ந்து திருவருள் புரிந்தார். ★★**

காலச்சுவடுகள்

## அருள்நிறை அம்மணி அம்மாள் கட்டிய

# திருவண்ணாமலை வடக்குக் கோபுரம்

- நிறைமதி பி.எல்.



கயிலையில் ஒருநாள் உமாதேவியார் ''சிவபெருமானை நோக்கிப் பெருமானே! சூரியனும் சந்திரனும் யாவர்?'' என்று கேட்டார்.

''நங்காய்! அந்த இரு சுடர்களும் எம்கண்கள்'' என்று பதிலுரைத்தார் பரமர்.

பார்வதி தேவியார் உடனே விளையாட்டாகத் தம் திருக்கரத்தினால் சிவபெருமானின் இரு கண்களையும் மூடினார்.

அதனால் அனைத்துத் திசைகளும் இருண்டன. திருமால், பிரம்மா, தேவர், முனிவர், மண்ணுலக மாந்தர் யாவரும் கண்ணொளியற்றுப் பிறவிக் குருடர்போல ஆயினர்.

அப்பொழுது சிவபெருமான் ''அஞ்சற்க'' என்று தம் நெற்றிக் கண்ணைத் திறக்க ஏழுலகும் இருள் நீங்கி ஒளி பெற்றது.

உமாதேவியார் பரமசிவனுடைய கண்களைப் பொத்திய தம் இருகரங்களையும் விலக்கி ''சுவாமி! ஏழுலகும் இருள் உண்டாகும்படி திருக்கண்களை மூடிய பாவம் நீங்கக் கடல் சூழ்ந்த பூவுலகில் தவம் செய்தற்குத் தகுதியான இடம் ஒன்றினைக் கூறுக'' என்று வேண்டினார்.

''உமையே, உன்னைப் பாவம் வந்து சேராது என்றாலும் பூவுலகோர் மேன்மைக்காக நீதவம் செய்யவிரும்புகிறாய். பூவுலகில் சிறந்த காஞ்சி மாநகரம் சென்று பூசையுடன் அரிய தவம் செய்'' என்று விடை கொடுத்தனுப்பினார்.

அவ்வாறே காஞ்சிக்கு வந்து கம்பை நதிக்கரையில் மணலைக் குவித்துச் சிவலிங்கமாக்கி வழிபாடு புரிந்த உமையின் தவவலிமையைக் கண்டு மகிழ்ந்த சிவபெருமான் தேவியின் முலைத் தழும்பும், வளைத்தழும்பும் பெற்று இடபவாகனத்தில் காட்சியளித்து ''உனக்கு வேண்டிய வரம் யாது?'' என வேண்ட ''உமது இடப்பாகத்தைத் தந்தருளும்'' என்று வேண்டினார் உமை.

''காஞ்சிக்குத் தென்பால் ஒரு நகரம் உண்டு. அது நினைத்தாலே முத்தி தரும்திருவண்ணாமலைத் திருத்தலம். அங்கு வந்து எம்மை வழிபாடு செய்தால் உமக்கு இடப்பாகம் தந்தருள் புரிவோம்'' என்று திருவாய் மலர்ந்தார் சிவபெருமான்.

சிவபெருமான் திருவாய்மலர்ந்தவாறே உமையம்மை திருவண்ணாமலையில் சிறப்புறப் பூசைகள் செய்ய சிவபெருமான் திருக்காட்சி வழங்கினார். ''நீஎன்றும், நான் என்றும் வேறான இரண்டு பொருள் இல்லை. பெண்ணே! நம் இடப்பாகத்தில் சேர்ந்திடு'' என்று தம் இடப்பாகத்தை உமாதேவிக்கு வழங்கியருளியனார். அத்தகைய ஒப்பற்ற திருத்தலம்தான் திருவண்ணாமலை திருத்தலம் ஆகும்.

இதனையே ''சக்திக்கு இடப்பாகம் தான் கொடுத்து நின்ற மலை'' என்று கொண்டாடுகின்றார் குருநமசிவாயர். இத்தகைய சக்தித்திருத்தலத்தில் சக்தியின் திருவருள் பெற்று செயற்கரிய சாதனை புரிந்தவர் தாம் கி.பி.16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த அருள்மொழி அம்மணி அம்மாள் ஆவர்.

இருபத்து நான்கு ஏக்கர் பரப்பளவில் பரந்து விளங்கும் இன்றைய திருவண்ணாமலை ஆலயத்தின் நான்கு திசைகளிலும் நான்கு உயரமான கோபுரங்கள் வானோங்கி விளங்கக் காணலாம்.

கிழக்குத் திசையில் உள்ள கோபுரம் இராஜகோபுரம், மேற்குத் திசையில் உள்ள கோபுரம் பேய்க் கோபுரம், தெற்குத் திசையில் உள்ள கோபுரம் திருமஞ்சனக் கோபுரம், வடக்குத் திசையில் உள்ள கோபுரம் அம்மணி அம்மாள் கோபுரம் எனவழங்கப்படுகின்றன.

இவற்றின் வடக்குத் திசையில் உள்ள கோபுரத்தைக் கட்டி முடித்த அம்பிகையின் அருள் பெற்ற அறச் செல்வி தவச் செல்வி அருள் மொழி அம்மணி அம்மாள் பெருமை அளவிடற்கரிய ஒன்றாகும்.

திருவண்ணாமலைக்கு மேற்கில் சென்ன சமுத்திரம் என்ற சிற்றூரில் பிறந்தவர் தாம் அருள்மொழி அம்மணி அம்மாள். இவர்தம் பெற்றோரைப் பற்றிய வரலாறு ஒன்றும் அறியக் கிடைக்கவில்லை.

பிறந்ததிலிருந்தே உண்ணாமுலை உமையாள் உடனாகிய அண்ணாமலை இறைவன் மீது அளவுகடந்த பக்தி இவ்வம்மையாருக்கு இருந்து வந்துள்ளது.

''பிறந்து மொழி பயின்ற பின்பெல்லாம் காதல்
சிறந்து நின் சேவடியே சேவிக்கப் பெற்றேன்''

என்று பாடிய காரைக்கால் அம்மையாரைப் போன்றே இவரும் சிவபக்தியில் திளைத்திருந்த படியால் இவர்தம் பெற்றோர்கள் இவருக்கு மணம் புரிந்து வைப்பதில் பயன் இல்லை என்று நினைத்து இவர்தம் விருப்பப்படி திருவண்ணாமலை திருத்தலத்திற்கு அழைத்து வந்து ''அண்ணாமலையானே இனி உனக்கு யாவும்'' என்று கூறி விட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள்.

இவர் வந்த காலகட்டத்தில் நாயக்கர்

திருப்பணியில் வடக்குப் பெரிய கோபுரம் கருங்கல் கட்டுஅளவில் பணி நின்று போய் இருந்தது.

கல்லாரத்தோடு நின்றிருந்த வடக்குப் பெரிய கோபுரத்தின் மேல் செங்கற்கட்டினைக் கட்டிக் கோபுரப் பணியை நிறைவு செய்ய விழைவுற்றார் அம்மணி அம்மாள்.

அம்மணி அம்மாளின் திருக்கரங்களால் விபூதி பெற்று அணிந்து கொண்ட பலரும் தம் நோய் தீரவும், தம் வேண்டுதல்கள் விரைந்து நிறைவேறவும், தாம் மேற்கொண்ட தொழில் சிறக்கவும் கண்டு அம்மணி அம்மாளின் மேல் மிகுந்த மதிப்பினைக் கொண்டார்கள்.

கோபுரம் கட்ட நன்கொடை வேண்டி அம்மணி அம்மாள் பலருடைய மனைகளுக்கும் சென்ற போது ஒரு தெய்வமே தங்கள் வீட்டிற்கு எழுந்தருளியுள்ளதாக மக்கள் எண்ணி மகிழ்வுற்றார்கள்.

அம்மையாரே இல்லத்திற்கு எழுந்தருளித் திருக்கோபுரத் திருப்பணிக்கு நன்கொடை கேட்டபொழுதும், திருப்பணிக்கு உதவ மனமில்லாதவர்கள் பலரும் கூட இருந்தார்கள். அத்தகையோரையும் அம்மையார் கடிந்து கொள்ள மாட்டார்கள்.

''ஐயன்மீர்! உங்கள் பெட்டியில் பத்தாயிரத்து இருபது ரூபாய் இருக்கின்றதே! கோபுரத்திருப் பணிக்கு ஒரு நூறு ரூபாய் தருதல் கூடாதா?'' என்று அம்மையார் அன்போடு அருள்மொழி கூறி வினவுவார்.

தம் வீட்டில் எவ்வளவு பணம் உள்ளது என்று தமக்கே தெரியாதபோது இவ்வம்மையாருக்கு எப்படித் தெரியும் என்று நிகைப்புற்றவராய் வீட்டிற்குள் சென்று பணத்தை எண்ணிப்பார்க்க, அம்மையார் உரைத்தபடியே அவர் வீட்டில் பணம் இருக்கும்!

இறையருள் பெற்ற அருள்மொழி அம்மணி அம்மாளின் அருட்செயலை வியந்தவாறே வந்து அவர் கேட்ட தொகையைத் திருக்கோயில் கோபுரத் திருப்பணிக்குத் தந்து விடுவார்கள்.


இவ்வாறு அம்மணி அம்மாள் அடியவர்களிடம் பொருள்மிகப் பெற்று வடக்குப் பெரிய கோபுரத் திருப்பணியை நிறைவு செய்துள்ளார்கள்.

மைசூர் மன்னரைக் கண்டு இவர் திருப்பணிக்குப் பொருள் வேண்ட அவர் தம் முத்துமாலையை வழங்கியுள்ளார். அம்முத்து மாலையையும் விற்றுப் பொருளாக்கித் திருப்பணியை நிறைவு செய்துள்ளார்.

இவ்வாறு அரும்பாடுபட்டு வடக்குப் பெரிய கோபுரத் திருப்பணியை நிறைவு செய்துள்ளார்.

கோபுரத்திருப்பணியை நிறைவேற்றித் தந்த இவர் தம்அருஞ்செயலைப் போற்றியே திருவண்ணாமலை திருக்கோயிலின் வடக்குக் கோபுரத்தை மக்கள் வாஞ்சையுடன் ''அம்மணி அம்மாள் கோபுரம்'' என வழங்கி வருகிறார்கள்.

அருள்மொழி அம்மணி அம்மாளுடைய சமாதிக் கோயில் ஈசானிய குளத்திற்கு அருகில் இன்றும் சிறப்புறத் திகழ்ந்து வருகின்றது.



## கிரிவலம் வாகனத்தில் வரலாமா?


திருவண்ணாமலையைக் கிரிவலம் வரும் பக்தர்கள் காலினால் நடந்தே வரவேண்டும். வாகனத்தில் அமர்ந்தவாறு கிரிவலம் வந்தால் பலனில்லை.

அருணாசலப் புராணத்தில் வச்சிராங்கத பாண்டியன் சருக்கத்தில் இது விளக்கப் பெற்றுள்ளது.

அண்ணாமலையைக் காலினால் வலம் வந்த குதிரையும். புனுகுப் பூனையும் முன்னைச் சாபம் நீங்கிக் கந்தர்வர்கள் ஆயின. குதிரையில் வலம் வந்த வச்சிராங்கத பாண்டியன் குதிரையிலிருந்து விழுந்து காயப்பட்டு வருந்தினான்.

பின் தன் தவறுணர்ந்து, காலினால் வலம் வந்து வணங்க வச்சிராங்கதப் பாண்டியன் சாபம் நீக்கி. அவனைத் தேவேந்திரனாக அருள்புரிந்தார் அண்ணாமலையார்.


திருக்கோயில்
திங்கள் இதழ்



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ 10/ |
| ஓராண்டுச்சந்தா | ரூ 120/ |
| பத்து ஆண்டுச்சந்தா | ரூ 1000/ |
| ஆயுட்காலச்சந்தா | ரூ 1500/ |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!

திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :

| | |
|---|---|
| 1. பின் பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ 15,000/ |
| 2. முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 10.000/ |
| 3. பின்பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 7,500/ |
| 4. உள்புறம் முழுப்பக்கம் | ரூ 5,000/ |
| 5. உள்புறம் அரைப்பக்கம் | ரூ 3,000/ |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.




# இறைவன் திருப்பெயரை இடையறாது கூறுங்கள்

"எழுத்துச்சித்தர்" பாலகுமாரன்

''ஆனந்தாஸ்ரம்'' என்கிற ஒரு அழகிய ஆஸ்ரமம் கேரளாவில் உள்ள கஞ்சன் காட்டில் இருக்கிறது.

கேரளாவின் வட எல்லையில் மங்களூருக்குப் போகும் வழியில் இந்தக் கஞ்சன்காடு ரயில்வே ஸ்டேஷன் இருக்கிறது. அங்கிருந்து மூன்று கிலோமீட்டர் தொலைவில் ஒரு சிறிய மலையடிவாரத்தில் பசுமை சூழ்ந்த இடத்தில் மிக அமைதியான இந்த ஆனந்த ஆஸ்ரமம் இருக்கிறது.



அருள்மிகு தாயுமானசுவாமி அருள்மிகு மட்டுவார்குழலம்மை
மலைக்கோட்டை திருச்சிராப்பள்ளி

அந்த ஆஸ்ரமத்தில் காலையில் ஆறிலிருந்து இரவு ஒன்பது வரை இடையறாது ராமநாமம் சொல்கிறார்கள்.

திருவண்ணாமலை மகான் யோகிராம் சுரத்குமார் அவர்களின் குருவான பாப்பா ராமதாஸ் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது, மாதாஜி கிருஷ்ணாபாய் அவர்களால் தொடர்ந்து நடத்தப் பட்டு இடையறாது ராமநாமம் கொல்லிக் கொண்டு இருக்கிறது. கடவுள் நாமத்தைச் சொல்லுங்கள் என்று உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கிறது.

கடவுள் நாமம் சொல்கிறவரை ஆனந்தாஸ்ரமத்திற்கு வரச்சொல்கிறது. உங்கள் துணிகளை நாங்கள் துவைக்கிறோம், உங்களுக்கு உணவு போடுகிறோம். உறங்குவதற்கு நல்ல வசதிகள் செய்து கொடுக்கிறோம். ஆனால், இங்கு வந்து சிறிதுநேரமாவது ராமநாமம் சொல்ல முடியுமா என்று கைகூப்பி மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறது.

வேறு எந்த வேலையையும் நீங்கள் செய்ய வேண்டாம். சகலமும் எங்களுடைய பொறுப்பு. நாமம் சொல்வது மட்டுமே உங்கள் வேலை என்று அன்புக்கட்டளையிடுகிறது.

ஆனந்தாஸ்ரமத்திற்கு வருகிறவர்களை உள்ளங்கையில் வைத்துத் தாங்குகிறார்கள். அறுசுவை உணவு படைக்கிறார்கள்.

காலையில் காபி, பிறகு டிபன், பிறகு சாப்பாடு, பிறகுமாலை வேளையில் சிறிய சிற்றுண்டி, பிறகு இரவு நேரம் பலகாரம் என்று மிகக் கவனமாகப் பார்த்துக்கொள்கிறார்கள். ராமநாமம் சொல்கின்ற பணியைக் கொடுக்கிறார்கள். அந்தப் பணி சொல்லச்சொல்ல நமக்குள் வெறியாக மாறுகிறது. சில நாட்கள் தங்கி ஆனந்தாஸ்ரமம் விட்டு வெளியேறிய போதும் காதுக்குள், மனசுக்குள் ராமநாமம் ஒலித்துக் கொண்டருக்கிறது.

ஏன்நாம ஜபம் செய்யவேண்டும்? வேறு ஏதேனும் பெரிய பூஜைகள் செய்யலாகாதா?

கடற்கரையோரம் ஓட்டுவீடு. கடலுக்குள் போய் நல்ல வேட்டையோடு தோள்வலிக்கத் திரும்பி வந்து நன்றாக உண்டு உறங்கினார். எழுந்து பார்த்தால் வீடுமில்லை. மனைவியுமில்லை. மகளும் இல்லை. மகனும் இல்லை.

இத்தனை நாள் கடலுக்குப்போய் சம்பாதித்ததெல்லாம் அழிந்துபோயிற்று. இனி எதற்குக் கடலுக்குப் போகவேண்டும் என்ற கவலை வந்துவிட்டது. யாருக்காக உழைக்க வேண்டும் என்ற எண்ணம் வந்துவிட்டது. ஒரேயொரு சுனாமி அலை ஒரு விடியல் நேரத்தில் அவர் வாழ்க்கையை திசைமாற்றிவிட்டது.

இருபது வருட உழைப்பிற்குப் பிறகு மும்பையில் அந்த இளைஞனுக்கு ஒரு வீடுவாங்க முடிந்தது. வீடு என்றால் வீடு இல்லை. அது ஒரு கூடு. ஆனாலும் சுவர்வைத்துக் கட்டி மேலே கூரை எழுப்பி, பால்கனி வைத்து, உறுதியான மாடிப்படி வைத்துக் கட்டியிருந்தார்கள். பத்துக்கு பதினைந்தடி

என்ற அந்த இடத்தை அவர் நான்கு லட்சரூபாய் கொடுத்து வாங்கினார், ஹாலின் ஓரத்திலேயே சமையலறை. அருகே பூஜை அறை, குளிப்பதற்கு சிறியதொட்டி இருந்தது. கழிப்பிடம் மட்டும் பொதுக்கழிப்பிடம் போகவேண்டும்.

பம்பாயில் இப்படியொரு வீடு கிடைப்பது அற்புதம்.

பெரிய ஃபைவ்ஸ்டார் ஹோட்டலில் தட்டு கழுவுகிற வேலை. எச்சில் தட்டுக்கள் வந்து சேர்ந்த பத்தாவது நிமிடத்தில் சுத்தப்படுத்தப்பட வேண்டும் என்ற கட்டளையை அவர் தெளிவாக நிறைவேற்றினார். நிர்வாகம் அவரைக் கொண்டாடியது.

கப்பலில் வேலை செய்யப்போகிறாயா? கூடுதலாகக் காசு கிடைக்கும். ஆறுமாதத்திற்கு ஒரு தடவை ஊருக்கு வரலாம் என்று விவரித்தார்கள். உலகம் சுற்றிப் பார்க்கலாம் என்றார்கள். கூடுதலாகப் பணம் கிடைக்கும் என்றார்கள்.

இப்படிப்பட்ட நேரத்தில் வீடு என்று சொந்தமாக இருந்தால் நன்றாக இருக்காதா? அதனால்தான் கடன்வாங்கி வீடு வாங்கினார். வீடு வாங்கிய மறுநாள் மும்பையில் தொடர்குண்டு வெடிக்கப்பட்டது. தொடர்குண்டு வெடித்ததில் கலவரம் ஏற்பட்டது. கலவரத்தில் பல வீடுகள் தீக்கிரையாகின. அதில் அவர் வீடும் ஒன்று.

அவருக்குப் பைத்தியம் பிடித்தது. அவர் தனக்குத்தானே எப்போதும் தெருவில் நின்று பேசிக்கொண்டிருக்கிறார்.

ஒரு நாள் பாகிஸ்தானில் நிலம் நடுங்கியது, ஆயிரக்கணக்கான வீடுகள் தரையோடு தரையாயின. நல்லவர்கள், கெட்டவர்கள், வல்லவர்கள், வறியவர்கள் அத்தனை பேரும் அழிந்தார்கள்.

சர்வநாசம், கோரநாசம் என்பார்களே அதை பலர் கண்முன் பார்த்தனர். என்ன ஆயிற்று இந்த பூமிக்கு என்று நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதனர்.

சமீபத்தில் இரண்டு புயல்கள் தாக்கின. ஒன்றன்பின் ஒன்றாக மோதின.

வீடு முழுவதும் தண்ணீர்! நனையாத பொருள் எதுவுமில்லை. தோட்டம் பாழ், கூரை பீய்த்துக்கொண்டு போயிற்று. வீடு நிற்கும் என்று நம்பினர். இரவு நேரம் தடதடத்த சத்தம் கேட்டது. வெளியில் ஓடிவந்தனர்.

கண்ணெதிரே வீடு இரண்டாய் பிளந்து அமர்ந்தது. சில இடங்களில் நிலம் அரித்துப் போயிற்றாம். அதனால் கல்வீடு உட்கார்ந்து விட்டது.

உழைத்தால் உயரலாம் என்ற நம்பிக்கை, கடவுள் தேவையில்லை என்ற கொள்கை எல்லாமும் உட்கார்ந்தது. இன்னும் எவ்வளவு உழைக்க வேண்டும். எத்தனை நாள் உழைக்க வேண்டும் என்று கணக்கு போட்டபோது அந்தக் கணக்குக்கு முடிவேயில்லை என்று தெரிந்தது.

ஆஸ்திரேலியாவிலுள்ள காட்டில் பன்றி வேட்டை ஆடப்போன குடும்பத்தை நெருப்பு சூழ்ந்து கொண்டது. சில நிமிடங்களில் தாண்டிவிடலாம் என்று முழு மூச்சாய் காரை வேகத்தோடு கிளப்பித் தாண்டியபோது எரிகின்ற மரம் சரிந்து காரின் மீது விழுந்தது. கண்ணெதிரே மனைவியும், குழந்தைகளும் பொசுங்கினார்கள். அவருக்கு இயல்பாய் நடக்கமுடியாத அளவுக்கு தீக்காயம்.

சிறிய சந்தேகங்கள், பெரிய சண்டைகள். கணவன், மனைவு உறவுகளெல்லாம் எப்பொழுது வேண்டுமானாலும் கைகழுவிவிடலாம் என்ற நிலையில் இருக்கிறது. பாதிக்கப்படுவது குழந்தைகள் என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தும் அதைப் புறக்கணிக்கிறார்கள்.

சமூக அந்தஸ்தில் உணர்ச்சிவசப்பட்டு ஒரு வார்த்தை சொன்னாலும் அதற்குமிகப்பெரிய போராட்டம் வருகிறது.

மழை இல்லையே... மழை இல்லையே... என்று புலம்புகிறார்கள். மழை பெய்தால் தாங்க முடியாமல் தவிக்கிறார்கள். நிவாரணம் வேண்டுமென்று கேட்கிறார்கள். நிவாரணத்தை பங்கீடு போடமுடியாமல் அதிகாரிகள் திணற கும்பலாய் எதிர்க்கிறார்கள்.

நிவாரணத் தொகையை எடுத்துப்போய் குடித்துவிட்டு வந்து மனைவியையும், குழந்தைகளையும் அடிக்கிறார்கள். நிவாரணம் கிடைக்கவில்லையென்றாலும் அடிக்கிறார்கள்.



## தீபம் ஏற்றி வழிபடுவதன் பலன்

**சிவபெருமான் உமாதேவியாருடன் திருக்கயிலையில் எழுந்தருளியிருந்தபோது, அங்கு ஏற்றிவைக்கப்பட்டிருந்த நெய்விளக்குகளில் ஒன்று அணையும் தருவாயில் இருந்தது.**

**அதனைக் கண்ட ஒரு எலி, விளக்கிலிருந்த நெய்யை உண்ணச் சென்றது. எலிதன் மூக்கால் அணைய இருந்த திரியைச் தூண்டியது. அதனால் தீபம் சுடர்விட்டு எரிந்தது.**

**இதனைக் கண்ட சிவபெருமான் அந்த எலிக்கு மானிட உடலும், அரசும், மற்றைய பேறுகளையும் அருளிப் பூவுலகில் பிறக்கக் கட்டளையிட்டார்.**

**அந்த எலியே மகாபலிச்சக்கரவர்த்தி. திருக்கோயில்களில் தீபம் ஏற்றி வழிபட்டால் சக்கரவர்த்தி போல் வாழலாம்.**

அடித்து நொறுக்கிவிட்டு தூங்குகின்ற கணவனின் தலையில் கல்லைப் போட்டு மனைவி கொல்கிறாள். இனி மேலாவது நீங்க நிம்மதியா இருங்க என்று குழந்தைகளைக் கட்டிக்கொண்டு அழுகிறாள்.

உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் விதம்விதமாக துன்பங்களே பெருகிக் கொண்டிருக்கின்றன. இவை மனிதர்களால் ஏற்பட்ட துன்பங்கள். இயற்கைச் சீற்றம் ஒருபக்கமிருக்க மனிதர்களே தங்களைத் தாங்களே அடித்து வீழ்த்திக் கொள்வதும் நடக்கிறது. மதத்தின் பெயரால், கட்சியின் பெயரால், மொழியின் பெயரால் இடையறாது அடித்துக் கொள்கிறார்கள்.

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் என்று பல இடங்களில் இடையறாது வருடக்கணக்கில் கலவரம் நடந்து கொண்டிருக்கிறது. நிம்மதி என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. பண்டிகைகளைக் கொண்டாட பயமாக இருக்கிறது. கலவரங்கள் எப்பொழுது வெடிக்குமோ, எங்கே வெடிக்குமோ எவ்வளவு பெரிதாய் வெடிக்குமோ என்ற பயம் இருக்கிறது.

இதை நீக்க ஒரே வழி. மனிதர்கள் மனதை குளிரச் செய்வதுதான். மனதைக் குளிர்விக்க ஒரே வழி நாமஜபம்தான்.

எந்த மதமாய் இருப்பினும் சரி, இடையறாது கடவுள் நாமத்தைச் சொல்லுங்கள். அது சிவன், விஷ்ணு, கணபதி, முருகர், இயேசு, அல்லா என்று எவர் வேண்டுமானாலும் இருக்கட்டும். புத்தருடைய போதனைகளைப் பின்பற்றுபவராய், மகாவீரரின் சீடராய் நீங்கள் இருக்கலாம். அதில் தவறில்லை. ஆனால் அமைதியாய் உட்கார்ந்து ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் இரண்டாயிரம் முறை கடவுள் நாமத்தை ஜபிக்க முயற்சி செய்யுங்கள். அப்படி முயற்சிக்கிறபோது ஒவ்வொரு தனிமனிதரும் அமைதியாக நேர்மையாக இனிமையாக வாழ்வதற்கு நிச்சயம் வழி தெரியும். தனிமனிதர்கள் திருந்தி நேர்மையாக, இனிமையாக வாழ்ந்தால் உலகத்தினுடைய இந்த கூக்குரல்கள் குறையும்.

வன்முறையால் வன்முறையை அடக்கி வைக்க முடியாது. மீண்டும் வன்முறை வெடிக்கும். எனவே, ஒவ்வொரு தனிமனிதனும் தானே உணர்ந்து திருந்துகின்ற வழி நாமஜபம். கடவுள் நாமத்தை ஜபியுங்கள். ஜபித்த ஒரு கணக்கை ஆனந்தாஸ்ரமம் ஆனந்தாஸ்ரமம் போஸ்ட், கஞ்சன் காடு - 671531, கேரளா என்ற விலசத்திற்கு எழுதி அனுப்புங்கள்.

அவர்கள் தங்கள் கணக்கிலே சேர்த்துக் கொள்வார்கள். கிட்டத்தட்ட பதினாறாயிரம் கோடி நாமஜபம் செய்ய வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஏழாயிரம்கோடி பூர்த்தியாகியிருக்கிறதாம். மீதியும் பூர்த்தியாக வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். எனவே ஏதேனும் ஒரு கடவுள் நாமத்தை இரண்டாயிரம் முறை தினந்தோறும் சொல்லி இத்தனை நாள், இத்தனை ஜபம் செய்தேன் என்ற கணக்கை அவர்களுக்கு ஒரு போஸ்ட் கார்டில் எழுதி அனுப்பினால் போதும். இதுகூட செய்ய வில்லையெனில் நாம் என்ன சமூகநலவிரும்பிகள் என்ற கேள்வி எனக்கு வருகிறது.

## வாசகர் எண்ணங்கள்

முருகப்பெருமானை வழிபடும் முறைகளில் ஒன்றான காவடி எடுக்கும் வழிபாட்டைப் பற்றிப் பலரும் அறியாத தகவல்களை - அரிய ஆன்மீக உண்மைகளைச் சுமந்து வந்த ''காவடி'' கட்டுரை வெகு அற்புதம்.

காவடியின் சிறப்புக்களை, மகத்துவங்களை நேர்த்தியாக படம் பிடித்துக் காட்டிய இக்கட்டுரையை மறக்க முடியாது.

- த. சத்தியநாராயணன், அயன்புரம்.

''ஒரே கருவறையில் இரு சிவலிங்கங்கள்'', ''ஒரே சன்னதியில் இரண்டு வரதராஜர்கள்'' என் நவம்பர் இதழில் இடம் பெற்றிருக்கும் கட்டுரைகள் அருமை.

- சுரேஷ்குமார், திருச்சி

கந்தப்புராண அரங்கேற்றத்தில் நிகழ்ந்த தமிழ் விநோதம், ''காலச்சுவடுகள்'' - பகுதி சிறப்பிற்குரிய ஒன்று. முத்தமிழ்க் கடவுளாம் முருகன் செய்த தமிழ்த் திருவிளையாடலைச் சுவைத்து மகிழ்ந்தேன்.

- சந்திரகாசன், ஈரோடு

''தசரத சக்கரவர்த்தி வழிபட்ட தமிழகத் திருத்தலம்'' பற்றிய கட்டுரையைப் படித்து இன்புற்றேன். ''இந்தியாவிலேயே இந்த ஒரு சந்திதானத்தில் மட்டுமே தன் இருமனைவிகள், இரு குழந்தைகளுடன் தசரதர் கைகூப்ப, குடும்ப சமேதராய் சாந்த சொரூபமாய் அருள்மிகு சனீஸ்வர பகவான் அருள்புரிந்து வருகிறார்'' என்ற அரிய தகவலை வெளியிட்டிருப்பது பாராட்டிற்குரியது.

- ஆராஅமுதன், குடந்தை

இராமபிரான் அயோத்திக்குத் திரும்பிய வுடன் முடிசூட்டு விழாவிற்கான ஏற்பாடுகள் கோலாகலமாகத் தொடங்கின. விழாச் செய்தி எங்கும் அனுப்பப் பெற்றது. மூவுலகத்தோரும் அயோத்திக்கு வந்து குழுமினர்.

புண்ணிய நதிகளுக்குச் சென்று புனித நீர் கொணரும் பொறுப்பு அனுமனுக்கு வாய்த்தது. அவனும் காற்றினும் கடுகி எங்கு உலவிப் புனித நீர் கொணர்ந்தான்.

''ஏழ்திரை நீரும் தந்தான்
இருந்து உய்ய மருந்து தந்தான்''

(திருமுடிசூட்டு.30)

என்று மாருதியைப் பாடுகிறார் கம்பர்.

திருமுடி சூட்டு விழா தொடங்கிற்று. இராமபிரானும் சீதா பிராட்டியும் அரியணையில் அமர்ந்தனர். அங்கதன் உடைவாள் ஏந்தினான். பரதன் வெண் குடை பிடித்தான். இலக்குவனும் சத்ருக்கனனும் கவரி வீசினர். வசிட்டரே முடிசூட்டினார்.

இதில் அனுமனுக்கு என்ன பணி?

# அரியணை தாங்கிய அனுமன்

பேராசிரியர் முனைவர் த. அகரமுதல்வன்

அரியணையைத் தாங்கும் பணி அனுமனுக்கே கிடைத்தது. போரில் தன் தோளையே அரியணை ஆக்கிய அரிக்குலத்து அனுமன் இன்று தன் கரங்களால் அரியணையைத் தாங்குகிறான்.

அறங்காக்க வந்த அனுமன், அறத்தை அரியணையில் ஏற்றி வைத்து அதனைக் காக்கிறான். அடியவருள் சிறந்தவருக்கே கிடைக்கும் திருவடி தாங்கும் பெரும் பேறு அனுமனுக்கே கிடைத்தது!

''அரியணை அனுமன் தாங்க,
அங்கதன் உடைவாள் ஏந்த
பரதன் வெண்குடை கவிக்க
இருவரும் கவரி பற்ற,
விரை செறி குழலி ஓங்க,
வெண்ணையூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி,
வசிட்டனே புனைந்தான் மௌலி''

(திருமுடி சூட்டு. 38)


முடி சூட்டு விழா முடிந்தது. இராமபிரான் சக்ரவர்த்தி ஆகிவிட்டான். விழாவுக்கு வந்திருந்தோருக்கெல்லாம் வரிசையாகப் பரிசில்களை வாரி வழங்குகிறான். சுக்ரீவன் அங்கதன் - என அனைவரும் பரிசில் பெற்றுச் செல்கின்றனர்.

அனுமனை இராமபிரான் அருளுடன் நோக்குகிறான். அவன் வாயைப் பொத்திய கையுடன் வணங்கிய நிலையில் பணிந்து நிற்கிறான்.

இராமபிரான் கண்கள் நீர் பனிக்கின்றன. கடந்த கால நினைவுகள் நெஞ்சில் வந்து நிறைகின்றன.... இதே பணிவுடன் அனுமன் அறிமுகமானது; பேச்சால் கவர்ந்தது; பேருருவைக் காட்டியது; சுக்ரீவனை நட்பு செய்வித்தது; வாலியைக் கொல்ல வழி செய்தது; சீதையைத் தேடிச் சென்றது; அவள் ஆருயிர் காத்தது; எண்ணற்ற அரக்கரை அழித்தது; இராவணனை எச்சரித்தது. இலங்கையைக் கொளுத்தியது. சீதையைக் கண்டு வந்த செய்தியைச் சீராகச் சொல்லியது; வீபிடணனைச் சேர்த்தது; போரில் தம்மைச் சுமந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக மருந்து மலை கொணர்ந்து இறந்தவர்களை எழுப்பியது; இலக்குவன் உயிரை இருமுறை காத்தது; தீயில் விழவிருந்த பரதனைக் காத்தது - இப்படித் தசரதன் குலத்தை வாழ்வித்த அவ்வள்ளலுக்கு என்ன பரிசு கொடுக்க முடியும்? எந்தப் பரிசு கொடுத்தாலும் அது அவனுடைய தூய தொண்டுக்கு இணையாகுமா?

ஆதலின் இராமபிரான், ''மாருதி உனையன்றி இத்தகைய உதவிகளைச் செய்வதற்கு யாருளர்? நீசெய்துள்ள பேருதவிகளுக்கு இணையாக யான் திரும்பச் செய்வதற்கு எதுவும் இல்லை. ஆதலின் போரில் வெற்றிக்கு உதவிய நின் திண்மையான தோள்களால் என்னை நீஆரத் தழுவிக் கொள். அப்பனே!'' என்று தன்னையே பரிசிலாகத் தருகிறான்.

''மாருதி தன்னை ஐயன் மகிழ்ந்து,



இனிது அருளின நோக்கி,
ஆர் உதவிகளுக்கு ஒத்தார்,
நீயலால்? அன்று செய்த
பேர் உதவிக்கு யான் செய் செயல்
பிறிது இல்லை; பைம்பூண்
போர் உதவிய திண்தோளாய்!
பொருந்துறப் புல்லுக என்றான்''

(விடை கொடுத்த. 20)

அனுமன் பெற்ற பேற்றினை யார் பெறுவார்? முதலில் இராமபிரானின் திருவடி தீண்டப் பெற்றான். பின்னர் மூவரும் ஒருவனாய் வந்த மூலமாம் இராம பிரானின் திருமேனி தழுவப் பெற்றான்!

பெரியவரே சிறியவரைத் தழுவி ஆசி கூறுவர். இங்கு இராமபிரான் தூய தொண்டனுக்கு முன் தாம் சிறியவனாகித் தொண்டனைப் பெரியவனாக்கித் தம்மைத் தழுவிக் கொள்ளச் சொல்கிறார். தொண்டே பெரியது; தொண்டரே பெரியவர் என்பதை இராமபிரானும் மெய்ப்பிக்கிறார்.

'தொண்டர்தம் பெருமை சொல்லவும் கூடுமோ?'

வாலி கூறியது போல் 'தம்மையே தமர்க்கு நல்கும்' தலைவன் அல்லவா இராமபிரான்? இங்கு தம்மையே தம் தொண்டனுக்குத் தந்து விட்டான்.

தன்னலம் கருதாத தூய தொண்டனுக்குத் தலைவனும்- ஏன்? இறைவனும் கூடத் தலை வணங்குவான் என்பதை ஆஞ்சநேயன் உலகுக்குக் காட்டிவிட்டான்.

தூய தொண்டால் பிறரை வாழ்விக்கும் கடமை வீரன் என்றும் வாழ்வான் என்பதைத் தான் அனுமன் பெற்ற பெறலரும் பேறான 'இறவாப் பெருவாழ்வு' (சிரஞ்சீவித்துவம்) உலகுக்குக் காட்டுகின்றது.

# நூல் மதிப்புரை



| | |
|---|---|
| நூல்பெயர் | : உண்மை விளக்கம் |
| நூலாசிரியர் | : புலவரேறு ந.ரா.முருகவேள் |
| பக்கங்கள் | : 64 |
| விலை | : ரூ 25.00 |
| வெளியீடு | : இராமலிங்கர் பதிப்பகம், 7, இரண்டாவது தெரு அண்ணாநகர், வேளச்சேரி சென்னை. - 600 042 |

தமிழர்களின் தத்துவக் கருவூலங்களாய் விளங்குவன மெய்கண்ட சாத்திரங்கள்' எனும் 14 ஞான நூல்கள் ஆகும். அவற்றை முறையாகப் பயிலத் தொடங்குவோர், முதலில் **மனவாசகங்கடந்தார்** இயற்றியருளிய உண்மை விளக்கம் நூலைக் கற்றுணர்ந்த பிறகே பிற நூல்களைப் பயிலத் தொடங்குவர்.

புலவரேறு ந.ரா. முருகவேள் அவர்கள் இத்தகைய சிறந்த நூலுக்கு எழுதியுள்ள எளிய, இனிய சாரமிக்க விளக்க உரையாக இந்நூல் அமைந்து விளங்குகின்றது.

''மகன் தந்தைக் காற்றும் உதவி
இவன்தந்தை
எந்நோற்றான்கொல்எனும்சொல்''

என்றகுறள்கருத்திற்க்கிணங்க தமிழகாகரர் புலவரேறு ந.ரா. முருகவேள் அவர்களின் புதல்வர் முருக. இராமலிங்கம் அவர்கள் இந்நூலைச் சிறந்த முறையில் பதிப்பித்து வெளியிட்டிருப்பது பாராட்டிற்கு உரியது.

இப்பயன்மிகு நூலை மெய்யன்பர்கள் யாவரும் பயின்று இன்புறலாம்.

| | |
|---|---|
| நூல்பெயர் | : செந்தமிழில் ஒரு நந்தவனம் |
| நூலாசிரியர் | : இலக்கியமாமணி பி.வி.கிரி |
| பக்கங்கள் | : 288 |
| விலை | : ரூ 70.00 |
| வெளியீடு | : சாந்தா பதிப்பகம் 13/5 ஸ்ரீபுரம், 2வது தெரு இராயப்பேட்டை, சென்னை - 600 014 |

இதழ்கள் பலவற்றிலும் வெளிவந்த தம்முடைய தலைசிறந்த கட்டுரைகளைக் குறள்மலர்கள், இயற்கை மலர்கள், கவிதை மலர்கள், பன்னிற மலர்கள், மழலை மலர்கள் எனும் ஐந்து வகைகளில் தொகுத்துத் தமிழ்கூறு நல்லுலகம் பயன் கொள்ளும் வகையில் வழங்கியுள்ளார் **'எழுத்துச் செம்மல்' கவிஞர் பி.வி.கிரி** அவர்கள்.

''நந்தவனம்!
நறுமலர்களின் பிறப்பிடம்
மந்த மாருதம் வீசும் மலர்த்தோட்டம்
மனதுக்கு மகிழ்ச்சியைத் தரும்
மலர்க்கூட்டம்''

இந்த வகையில் இந்த நூல் செந்தமிழ் மணக்கும் பைந்தமிழ் நந்தவனம். இலக்கிய ஆர்வலர்களுக்குத் திகட்டாத தெள்ளமுத நந்தவனம். இலக்கிய அமைப்புகள் பலவும் பரிசளித்துப் பாராட்டத் தக்க பைந்தமிழ்க் கருவூலமாகத் திகழ்கின்ற இந்நூலைப் படைத்துள்ள ஆசிரியருக்கு நம் பாராட்டுக்கள்.

# திருப்புகழில் மாருதி

திருப்புகழ் மாமணி மு. அருணகிரி



உலகிலே எங்கும் எப்போதும் எதைச் செய்தாலும் தன் சுயநலத்துக்காக அன்றி பிறர்க்காகவே வாழ்நாளை தியாகம் செய்பவர்களை மக்கள் போற்றுவர். அத்தகு மரபிலே வாழ்ந்து காட்டியவரே மாருதி.

அனுமன் இராமனது போருக்கு உதவியதைப் பற்றி அருணகிரியார், ''தோலொடுமூடிய'' எனத்துவங்கும் திருப்புகழ்ப் பாடலில்

'பாரிய மாருதி தோள்மிசைகொண்டுற் - றமராடிப்
பாவியிராவணனார்தலைசிந்திச்
சீரிய வீடணர்வாழ்வுற - என்று கூறுகின்றார்.

கருத்து :- அனுமாரின் தோள்மேலே வீற்றிருந்து போர் செய்தவனே! பாவிராவணன் தலைகள் சிதறவும் வீடணர் வாழ்வு பெறவும், சீதாதேவியின் தோளை சேர்ந்த மாமனாம் திருமால் மருகனே என்று போற்றுகின்றார்.

இராம கதையில் அயோத்யா காண்டம் முதல் யுத்த காண்டம் வரையுள்ள நிகழ்ச்சிகளை, அருணகிரியார் ''குனகிபொருமயில்'' எனும் பாடலில் பின்வருமாறு 4 சீர்களில் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதைப் பார்க்கலாம்.

''எனது மொழி வழுவாமல் நீயேகு கான் மீதில்
எனவிரகு குலையாத மாதாவு நேரோத
இசையு மொழி தவறாம லேயேகி மாமாது - மிளையோனும்
இனிமையோடு வருமாய மாரீசமானாவி
குலையவரு காதூஷணாவீரர் போர்மாள
இறுகி நெடுமரமேழு தூளாகவே வாலி - யுயிர்சீறிஃ
அனுமனொடு கவிகூட வாராக நீராழி
யடை செய்தணை தனிலேறி மாபாவி யூர் மேவி
அவுணர்கிளை கெட நூறி யாலால மாகோப - நிருதேசன்
அருணமணி திகழ்பாரவீராக ராமோலி
யொருபது மொர் கணைவீழவே மோது போராளி''

என்று பாடுகின்றார்.

கருத்து :- என் பேச்சுத் தட்டக்கூடாது. நீகாட்டுக்குப் போவாயாக எனக் கைகேயி இட்ட கட்டளையை நிறைவேற்ற, சீதாதேவியுடன், தம்பி இலக்குவனையும் அழைத்துச் சென்றார். மாயமானாக வந்த மாரீசனை வதைத்தார். மாமரங்கள் ஏழும் பொடிபடச் செய்தார். வாலி உயிரை அழித்தார். அனுமனோடு, குரங்குக் கூட்டங்களும் கடலாகிய நீராழியை அணை கட்டியதும், அதன் மீது சென்று இராவணனுடைய இலங்கையை ராமன் அடைந்தார். மகா கோபத்துடன் எதிர்க்க வந்த இராவணன் தலை பத்தும் ஒரே அம்பால் வீழ்த்தினார் போர்வீரனான திருமால் - என்பதாகும்.

அசோகவனத்தில் இருந்த சீதையை அனுமன்சிறை மீட்கக் கருதியதை ''அலங்காமுடி'' எனும் அருணகிரியார் பாடலில் 5-வது சீரில் பாடியுள்ளதை பார்க்கலாம்.

''இலங்கேசர் வனத்துள் வனக்குரங்கேவி யழற்புகையிட்
டிளந்தாது மலர்த்திருவைச் - சிறைமீளும்
இளங்காள முகிற்கருமைச் சரங்கோடு கரத்திலெடுத்
திருங்கானநடக்குமவற் - கினியோனே''

கருத்து : இராவணனுடைய அசோக வனத்திற்கு அனுமனை அனுப்பி, இலங்கையை நெருப்பிட்டு, செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமியான சீதையை சிறை மீட்ட கரிய மேகம் போன்றவரும், சொல் தவறாது வனவாசம் செய்தவருமான இராமர் என்பதாகும்.

அனுமன், கூர்த்த மதிநுட்பம் கொண்டவன். ஒன்றை குறிப்பால் அறியும் திறனும், வீரமும் பெற்றவனாவான். இதனைக் குறித்து அருணகிரியார், ''உடுக்கத்துகில்'' எனும் பாடலில் பாடியுள்ளார்.

அனுமன் சீதையிடம் கணையாழி தந்து உயிர் காத்ததையும் இவ்வாறு பாடியுள்ளார்.

''குடக்குச்சிலதூதர்தேடுக
வடக்குச்சிலதூதர் நாடுக
குணக்கு சிலதூதர் தேடுக - எனமேவிக்
குறிப்பிற்குறிகாணும் மாருதி
யினித்தெற்கு ஒருதூது போவது
குறிப்பில் குறியோன் போதிலும் - வரலாமோ
அடிக்குத்திரகாரராகிய
வரக்கர்கிளையாகதீரனு
மலைக்கப்புற மேவிமாதுறு - வனமே சென்று
அருட்பொற்றிருவாழிமோதிரம்
அளித்து உற்றவர்மேல் மனோகரம்
அளித்து கதிர்காம மேவிய - பெருமாளே''

# தியாக சமுத்திரம் ஜடாயு

டாக்டர். டி . செல்வராஜ்

**தெய்வீகக் கருடன் ;**

நாராயணனின் வாகனம் கருடன். வைணவ மரபில் இவரைக் கருடாழ்வார் என்றும், பெரிய திருவடி என்றும் கூறுகின்றனர்.

பந்தளத்திலிருந்து ஸ்ரீ ஐயப்பன் சன்னிதிக்கு நகைப் பெட்டியைப் பக்தர் ஏந்தி வரும் போதும், சபரி மலை சோதி தரிசனத்தின் போதும் அங்கங்கே கருடன் ஆகாயத்தில் வட்டமிடுவதைத் தரிசிக்கலாம்.

ஏதேனும் ஒரு கோயிலுக்குக் கும்பாபிடேகம் நடைபெறுகின்ற போது, அக்கோயிலை ஒரு கருடன் வலம் வருவது உத்தமம்; உறுதி.

கருடன் ஒரு குழந்தை பிறந்த வீட்டை மையமாகக் கொண்டு, அதை வட்டமிட்டால், அக்குழந்தை எதிர் காலத்தில் பெருமை படைத்த சான்றோனாகச் சிறப்படைவான் என்று நம்புகின்றனர்.

கருடன் எளிதில் கண்களுக்குப் புலப்படாது. கருடன் தரிசனம் அபூர்வமாகக் கிடைக்கும் போதெல்லாம், அதை உடனே வணங்கி வழிபடுவது வழக்கம். வியாழனன்று கருடனைத் தரிசிப்பது நல்லது. அது ஒருவரது வலமிருந்து இடம் செல்வது நல்ல சகுனம்.



ஆகவே, கருடன் ஒரு தெய்வீகப் பறவை என்பதும் அது வணக்கத்திற்கும், வழிபாட்டிற்கும் உரியது என்பதும் புலனாகின்றன.

**சம்பாதியும், சடாயுவும் :**

கருடாழ்வாரின் தம்பி அருணன். அருணனுக்கும், அரம்பைக்கும் சம்பாதி, சடாயு என்ற இரு மகன்கள் பிறந்தனர். கழுகினத்தில் இவர்கள் இருவரும் புகழ் பெற்ற அரசர்கள் ஆவர். இவர்களைப் பற்றிய புராணக்கதைகள் பல உள்ளன.

**சம்பாதி :**

இவனை மணிமேகலை முதன் முதல் குறிப்பிடுகின்றது. ஒரு முறை இவன் ஞாயிற்று மண்டிலத்தைச் செருக்குடன் நெருங்கிச் செல்ல ஞாயிற்றுக் கதிர்களின் வெப்பம் தாங்காமல் தன் விரி சிறகுகள் எரிந்து, கரிந்து விழுந்தான். அவன் விழுந்த வனம் சம்பாதி வனம் என்ற பெயரைப் பெற்றது. (மணிமேகலை 3:53,54)

**கழுகுமலை :**

சம்பாதி கழுகு மலையில் ஒரு முருகன் கோயிலை அமைத்தான். இது குடைவரைக் கோயில். சம்பாதி என்ற கழுகின் பெயரோடு வழங்கும் கழுகு மலை சிறந்த முருகன் தலமாகத் திகழ்கிறது. இது கோயில் பட்டியிலிருந்து சங்கரன் கோயில் செல்லும் வழித்தடத்தில் உள்ளது.

**சடாயு :**

இனி சடாயுவைப் பற்றிக் காணலாம்.

**தேசங்கள் :**

**திருப்புட்குழி**

இது காஞ்சியிலிருந்து வடமேற்கே 12. கி.மீ தூரத்தில், வேகவதி ஆற்றின் வடகரையிலுள்ள திவ்ய தேசம்.

| | |
|---|---|
| இறைவன் | - விசயராகவப் பெருமாள் |
| இறைவி | - மரகதவல்லி |
| தீர்த்தம் | - சடாயு தீர்த்தம். இது கோயிலுக்கு எதிரில் வலப்பக்கம் இருக்கிறது. |

திரு +புள் + குழி. இராமன் சடாயுவைக் குழியிலிட்டுச் சமஸ்கரித்த திருத்தலத்திற்குத் திருப்புட்குழி என்ற பெயர் அமைந்தது. இங்கு இராமன் சடாயுவுக்கு மோட்சமளித்தான்: அவனுக்குச் செய்ய வேண்டிய ஈமச்சடங்குகள் அனைத்தையும், முழு மனத்துடன் நிறைவேற்றினான்.

மூலவர் தமது தொடையின் மீது சடாயுவை வைத்துக் கொண்டு சமஸ்காரம் செய்யும் நிலையில் சேவை சாதிக்கின்றார். இந்தத் துன்பங்களைத் தாங்காத திருமகளும், நிலமகளும் இட வலமாக மாறி வீற்றிருக்கின்றனர்.

பெருமாள் திருவீதி உலாவரும் போது சடாயுவுக்கும் எல்லா மரியாதைகளையும் செய்கின்றனர். கோயில்களில் இராமாயணத்தில் வரும் சிறந்த பாத்திரங்களுக்குத் தனிச் சன்னிதிகள் இருப்பதைத் தனிச் சிறப்பாகக் கருத வேண்டும்.

திருப்புட்குழியில் சடாயுவுக்குத் தனிச் சன்னிதி இருக்கிறது. சடாயு கழுகு அலகுடன் கருடாழ்வரைப் போலவே காட்சி தருகின்றார். சடாயுவுக்கெனத் தனிச் சன்னிதி வேறு எந்தக் கோயிலிலும் இல்லை. இதே போலத் திருக்கண்ணபுரத்தில் விபீடணனுக்குத் தனிச் சன்னிதி இருப்பது இங்குக் குறிக்கத்தக்கது.

குழந்தைப் பேறு இல்லாதவர்கள் சடாயு தீர்த்தத்தில் நீராடி, மடியில் வறுத்த பயிற்றைக் கட்டிக் கொண்டு, கோயில் வளாகத்தில் படுக்க வேண்டும். மறுநாள் தாயாரின் அருளால் வறுத்த பயிறு முளைத்திருக்குமானால், குழந்தைப் பேறு கிடைப்பது உறுதி. இது இத்திருத்தல அதிசயமாம்.

அமாவாசைமுதலிய தர்ப்பணக் காலங்களில் பக்தர்கள் சடாயு தீர்த்தத்தில் நீராடித் தர்ப்பணம் செய்து மூலவரை வழிபடுகின்றனர்.

**திருப்புள்ளம் பூதங்குடி:**

இத்திவ்ய தேசம் கும்பகோணத்திலிருந்து

வடமேற்கே 11 கி.மீ.தூரத்திலும், சுவாமி மலையிலிருந்து 5கி. மீதூரத்திலும் இருக்கிறது.

இறைவன் - வல்வில் இராமன்: புஜங்க சயனம்.

இறைவி - பொற்றாமரையாள்

தீர்த்தம் - சடாயு தீர்த்தம்.

இராமன் சடாயுக்கு மோட்சமளித்து ஈமச்சடங்குகளை நிறைவேற்றிய பின், இத்திவ்ய தேசத்தில் சிரம பரிகாரமாக சயனித்திருக்கிறார். இவர் வல்வில்லை ஏந்தாமல் சங்கு, சக்கரத்தை ஏந்தியவர். சீதையைப் பிரிந்த கோலம் என்பதால், இராமனுடன் சீதை எழுந்தருளவில்லை: நில மகள் தரிசனம் தருகின்றார்.

**சைவம்:**

வைணவத்தில் மட்டுமல்லாமல் சைவத்திலும் சடாயுவுக்குத் தனி மதிப்பும் மரியாதையும் இருக்கின்றன. இதற்குத் தேவாரத் திருத்தலங்கள் இரண்டினைச் சான்றுகளாக எடுத்துக்காட்டலாம்.

**சிவத்தலங்கள்**

**புள்ளிருக்கு வேளூர் வைத்தீசுவரன் கோயில்:**

இது சீர்காழிக்கு அருகிலுள்ள திருத்தலம்.

இறைவன் - வைத்திய நாதர்

இறைவு - தையல் நாயகி.

இறைவனைச் சம்பாதியும், சடாயுவும் வழிபட்ட திருத்தலம் புள்ளூர் : இருக்கு வேதம் வழிபட்ட திருத்தலம் இருக்கூர்; முருகன் வழிபட்ட திருத்தலம் வேளூர். இவை மூன்றும் ஒருங்கே பொருந்தப் புள்ளிருக்கு வேளூர் என்ற பெயர் அமைந்தது. இதனை வைத்தீசுவரன் கோயில் என்றும் அழைப்பர்.

சம்பாதிபுரம், சடாயு புரி முதலிய வேறு பல பெயர்களும இதற்கு உரியன. தசரதனின் உயிர் நண்பன் சடாயு. இவர்கள் இருவரும் நண்பர்களான வரலாறு புள்ளிருக்கும் வேளூர்த்தல புராணத்தில் காணப்படுகிறது.

ஒரு முறை தசரதன், வீரர்களுடன் தண்டகாரணியத்தில் வேட்டையாடச் சென்றான். அப்போது களைப்புடன் இருந்த அவன் ஒரு மரத்தினடியில் தனியாக ஓய்வெடுத்தான். மெல்ல உறங்கத் தொடங்கினான்.





உறங்கும் போது அவனது கால் பட்டு அருகிலிருந்த ஒரு புற்று சிதைந்தது. அதிலிருந்து சீறி எழுந்த ஒரு பாம்பு அவனைத் தீண்ட முற்பட்டது.



இந்த நிகழ்ச்சிகளைக் கண்ட சடாயு விரைவாகப் புறந்து வந்து பாம்பினைத்தாக்கிக் கொன்றார். விழித்தெழுந்த தசரதன் சடாயுவைப் பாராட்டினான். நண்பனாக ஏற்றான். சகோதரனாக உறவு கொள்ளத் தொடங்கினான்.

**புள் - சடாயு:**

புள் என்பது பொதுவாக எல்லாப் பறவைகளையும் சுட்டுகின்ற ஒரு பொதுப் பெயர். திருப்புட்குழி, திருப்புள்ளம் பூதங்குடி, புள்ளிருக்கு வேளூர் என்ற திருத்தலங்களின் பெயர்களில் புள்' என்ற சொல் சிறப்பாக சடாயுவைக் குறிப்பிடுவது ஒரு தனிச்சிறப்பு.

**இராமாயணத்தில் சடாயு:**

பஞ்சவடி : அகத்தியர் ஆஸ்ரமத்திலிருந்து இராமன், இலக்குவன், சீதை ஆகியோர் மூவரும் பஞ்சவடிக்குப் புறப்பட்டனர். வழியில் சடாயுவைக்கண்டனர்.

இராம இலக்குவனர் தசரதனின் மகன்கள் என்பதையும், அவரது இறப்பையும், சீதையின் வரலாற்றையும் சடாயு அறிந்தார். தசரதனின் இறப்பைக் குறித்து மிகவும் வருந்தினார். அவர்களுக்குத் துணையாக வந்து பஞ்சவடிக்கு வழிகாட்டினார். மூவரும் கோதாவரி நதி தீரத்திலுள்ள பஞ்சவடியில் தங்கினர்.

**போர்:**


இராவணன் சீதையைத் தீண்டாமல், அவள் இருந்த நிலத்துடன் அகழ்ந்தெடுத்து, வஞ்சகமாகக் கவர்ந்து செல்ல முனைந்தான். சீதையின் அலறலையும், அபயக்குரலையும் கேட்ட சடாயு விரைந்து வந்து இராவணனைக் கடுமையாக எதிர்த்தார். அவன் சடாயுவைப் பல கருவிகளால் தாக்கினான். அவர் அவனை அலகால்கொத்தியும் சிறகுகளால் அடித்தும், நகங்களால் சிறியும் போரிட்டார். அவனது முடிகள் சிதறின: கைகள் அறுபட்டன: வில் ஒடிந்தது; தேர் முறிந்தது; சாரதியும் இறந்தான்.

**தியாகம்:**

பல காயங்கள் பட்ட இராவணன் போரில் பின் வாங்கித் திணறினான். சடாயு களைப்புடன் சற்று ஓய்வெடுத்தார். உடனே அவன் சிவன் அருளிய வாளால் அவரது சிறகுகளையும், கால்களையும் துண்டித்து எறிந்தான். அவர் செயலற்று விழுந்து, மயங்கி மூர்ச்சையானார். அவன் சீதையைக் கவர்ந்து சென்றான்.

# கார்த்திகை தீபம்

கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்



அண்ணா மலைதனில் அருள்தரும் தீபம்,
உண்ணா மலையொடு ஒன்றிடும் தீபம்,
மலையே லிங்கமாய் மங்கள ஜோதியாய்,
தலைமுதல் அடிவரைத் தந்திடும் தரிசனம்,
கிரிவலம் சுற்றிக் கேட்டிடும் வேண்டுதல்
பரிபூர்ணமாகப் பலித்திடும் அற்புதம்,
அருணாச்சலத்தின் அரோகரா நாதம்,
தருமம் தழைத்திடத் தரணியின் கீதம்,
சித்தர்கள், ஞானிகள் தேடிவந்துறையும்,
எத்திசையும் எட்டிடும் இறைவனின் காந்தம்,
காந்த மலையில் கார்த்திகை தீபம்,
சாந்தி என்றும் தரணியில் தழைத்திட,
கார்த்திகைத் தீபத்தைக் காண்போர் முக்திபெற,
ஈர்த்திடும் சக்தியாய் ஈசனின் சொரூபம்,
தோன்றிடும் பேரொளி துன்பம் துடைத்திடும்,
ஆண்டாண்டு தோன்றும் அற்புதத் தீபமே.

இராம இலக்குவனர் சீதையைத் தேடி வந்தனர். குற்றுயிராய்க் கிடந்த சடாயுவைக் கண்டு மிக வருந்தினர். இராவணன் சீதையைக் கவர்ந்து பறந்து சென்ற விவரத்தை அவர் கூறத் தெரிந்து கொண்டனர்.

ஆனால் இராவணன் சீதையைத் தூக்கிக் கொண்டு எந்த திசைநோக்கிப் போனான் என்ற விவரங்களை விளக்கமாகக் கூறும் முன் சடாயுவின் உயிர் பிரிந்தது. அவருக்குச் செய்ய வேண்டிய ஈமச்சடங்குகளை இருவரும் நிறைவேற்றினர். சீதையின் இழப்பாலும், சடாயுவின் இறப்பாலும் உண்டான சொல்ல முடியாத, சொல்லி முடியாத அவலத்துடன் இருவரும் சீதையைத் தேடிச் செல்லத் தொடங்கினர்.

மேற்கண்ட நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் சில கருத்துகளைச் சிந்திக்கலாம்.

**சிந்தனைக்கு :**

1. தசரதனின் உயிர் நண்பர் சடாயு. இவர் தம் உயிரைச் சீதைக்காகத் தியாகம் செய்ய இந்த நட்பின் திறமே விதையாக அமைந்தது.

2. சீதையை இராவணன் கவர்ந்து சென்ற நிகழ்ச்சியை நேரில் கண்ட ஒரே சாட்சி சடாயு.

இதனை இராம இலக்குவரிடம் தெரிவித்தவரும் இவரே. ஆகவே, இவர் இராமாயணத்தின் மிக முக்கியமான பாத்திரமாவர்.

3. சீதையை இராவணன் தீண்டவில்லை என்று கூறி, அவளது கற்புக்கு எந்த விதமான இழுக்கும் ஏற்படவில்லை என்பதை இவரே உறுதியாக இருவருக்கும் புலப்படுத்தினார்.

4. தந்தைக்குச் செய்ய வேண்டிய ஈமச்சடங்குகளை இராமன் செய்யவில்லை என்ற குறை இருந்தது. சடாயுவுக்கு ஈமச்சடங்குகளைச் செய்து அக்குறையை நிறைவேற்றினான்.

5. இராவணன் இளமைப் பெருமிதத்துடனும், பல கருவிகளுடனும் சடாயுவை எதிர்த்துப் போரிட்டான். மாறாக, சடாயுவோ முதியவர், போதிய கருவிகளும் அவரிடம் இல்லை. எனவே, இராம இராவணன் போரை விடச் சடாயு, இராவணன் போர் கடுமையானது, மேலானது எனலாம்.

6. இராம, இராவணன் போரைச் சீதை பார்க்கவில்லை, ஆனால் இராவணனை எதிர்த்த சடாயுவின் வீரம், தீரம், தசரதன் மீது அவர் கொண்ட நட்பு, பக்தி, சீதையை எப்படியும் மீட்க வேண்டும் என்ற அவரது முயற்சி, ஆர்வம், அவலம், கடமை, பொறுப்பு, நன்றியுணர்வு முதலியவற்றை அவள் கண்கூடாகக் கண்டாள். அவலக்கடலுள் ஆழ்ந்தாள்.

7. இராவணன் சீதையைக் கவர்ந்து சென்ற வரலாற்றைச் சடாயு உயிர் நீத்த படலத்தில் கம்பர் புனைந்துரைத்தார். இப்படலத்தில், சீதை கவரப்பட்டதால் ஏற்படும் துன்பங்களை விடச் சடாயு கொலைக்களப்பட்டதால் விளையும் துன்பங்களே அதிகமாக உள்ளன. மேலும் மூலக்கதையின் இந்த அடிப்படைத் திருப்பு முனைகள் இரண்டும் ஒரே படலத்தில் நிகழ்கின்றன. எனவே, கம்பர் 'இராவணன் சீதையைச் சிறையெடுத்த படலம்' என்பது போலச் சீதையின் பெயருடன் படலத்திற்குப் பெயர் சூட்டவில்லை. அவள் சிறைப்பட்டதைப் படலத்தின் பெயரால் உணர்த்தாமல் மறைத்துச் சடாயுவுக்கு உயர் உச்சநிலை மேன்மையை அளிக்கச் 'சடாயு உயிர் நீத்த படலம்' என்று அவருடைய பெயருடன் படலத்திற்குப் பெயர் சூட்டினார். சீதையின் பிரிவு தற்காலிகமானது. சடாயுவின் பிரிவு நிலையானது. சடாயுவுக்கு ஏற்றம் தருவது பொருத்தமே.

**தியாக சமுத்திரம் :**

சடாயு சீதைக்காகத் தம்முயிரை ஈந்த தியாக சமுத்திரம். தெய்வ நிலைக்கு உயர்ந்தவர். பாகவத பக்தர்கள் சடாயுவைச் சிறந்த பக்தராகப் போற்றி வழிபடுகின்றனர். பரதனை ஓர் ஆழ்வானாக உயர்த்திக் கூறுவதைக் போலச் சடாயுவையும் ஆழ்வாராகச் சிறப்பிக்கின்றனர்.

# திருவிசலூர் கிணற்றில் பொங்கிய கங்கை

ஏ. கிருஷ்ணன்



நம் பாரத தேசத்தில் எத்தனையோ மகான்களும், சித்தர்களும் தோன்றி மறைந்துள்ளார்கள், அவர்கள் மனித வாழ்க்கைக்கு தேவையான வழிகளையும், ஆன்மீகப் பயன்களையும் தெளிவுபடுத்தி பல அற்புதங்களையும், அதிசயங்களையும் ஆற்றியுள்ளார்கள் என்பது வரலாறு. அவர்களுள் ஒருவர்நீர்வளம், நிலவளம் நிரம்பிய சோழநாட்டில் காவிரிக் கரையில் 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இல்லறத்துறவியான திருவிசலூர் ஸ்ரீ ஸ்ரீதர வேங்கடேசஐயாவாள் என்ற மகான் ஆவார்.

ஸ்ரீதரனின் தகப்பனார் லிங்கார்யர், மைசூர் ஸமஸ்தானத்தில் ஆஸ்தான வித்வானாக இருந்து வந்தார். ஸ்ரீதரன், அவர்களுக்கு ஏக புத்திரனாக அவதரித்தார். சிறுபிராயம் கொண்டே சிவபக்தனாகவும் சகலவித்யா பாடங்களையும் கற்று எதிலும் பற்றுதலற்றவராக சிவ நாம ஜபத்திலேயே சதாகாலமும் கழிப்பவராக விளங்கினார். மேலும் மகா தேஜஸ்வியாக இருந்த ஸ்ரீதரனுக்கு விரைவில் நல்ல குடும்பத்தில் விவாகம் நடைபெற்றது.

சில காலம் கழிந்து லிங்கார்யர் சிவபதம் அடைந்தார். தகப்பனாருக்குச் செய்ய வேண்டிய கிரியைகளைச் செய்தபிறகு ஸ்ரீதர் பலவிதத்திலும் சிறப்புடன் விளங்கிவந்தார். அவரை திவான் பதவியில் இருக்கும் படி மைசூர் மன்னன் கேட்டுக் கொண்டார். ஆனால் சிவபதவியின் முன்பாக எந்தப் பதவியும் இல்லை என்று பதவியை மறுத்து விட்டார் ஸ்ரீதர்.

தம் சொத்துக்கள் யாவையும் தம்முடையதல்ல என்றும், இந்த வீடு மற்றும் எல்லாம் ஜனங்களின் சொத்துக்கள் என்று கூறி அவரவர் எடுத்துக் கொள்ளலாம் எனக் கூறி தமது மனைவி லஷ்மி, மற்றும் தாயாருடன் மைசூர் சமஸ்தானத்தை விட்டுப் புறப்பட்டார்.

தேசங்கள், கிராமங்கள், என்பவற்றைக் கடந்து ஒவ்வொரு கிராமத்திலும் சில நாட்கள் தங்கி பகவான் நாமம், கீர்த்தனம், உஞ்சவிருத்தி முதலியவைகளைச் செய்து அந்தந்த இடத்து ஜனங்களுக்கு பக்தி உபதேசங்களையும், ஞானோபதேசத்தையும், பல தர்ம உபதேசங்களையும் சொல்லித் திருச்சி திருவரங்கத்தில் சிலகாலம் தங்கி வந்தார். சிவ பக்தியுள்ள ஸ்ரீதர் வைணவ பக்தியும், சிவபக்தியும் துவேஷமில்லாமல் இரண்டும் பிரசாரம் செய்து வந்தார்.

அக்காலத்தில் திருச்சியில் விஷ்ணு மதம் சேர்ந்த நாயக்கர் ஒருவர் அரசனாக இருந்து வந்தார். ஸ்ரீதரருக்குச் சைவத்தில் ஜாஸ்தி அபிப்பிராயமும், வைணவத்தில் சற்றுக் குறைவாக இருக்கும் என்ற சிலரின் வாக்கியத்தை நம்பி அய்யாவாளைப் பரீட்சிக்க, திருச்சி மலை கோட்டை அருள்மிகு மாத்ருபூதேஸ்வரரை ஸ்ரீ கிருஷ்ணனாக அலங்கரித்து வீதியில் வரும்படி செய்தார் அரசர்.

அந்தசமயம் பரமேசுவரனை பூஜை செய்து விட்டுத் தியானத்தில் இருந்த அய்யாவாள் மங்களவாத்தியம் கேட்டு வீதியில் வந்தார். அருள்மிகு மாத்ருபூதேஸ்வருக்குக் கிருஷ்ண அலங்காரம் செய்திருப்பதைப் பார்த்து ஏகபாவத்தோடு இருந்ததால் கிருஷ்ணனை ஸ்தோத்திரம் செய்தார்.

உலகத்தின் அநித்ய நிலையைப் புரிந்தவனாகவும், கர்வமில்லாதவனாகவும் வினயமுடையவனாகவும், எல்லா ஜீவராசிகளிடமும் இரக்கம் கொண்டவனாகவும் சுகதுக்கங்களில் சமபுத்தி உள்ளவனாகவும் உள்ள உன் பாத கமலத்தையே பூஜிக்கின்றவனாகவும், எப்பொழுதும் ஆக வேண்டும் என்று ''கிருஷ்ணத்வாதமஞ்சரி'' என்ற ஸ்தோத்திரத்தைப் பாடிப் பகவானுக்குச் சமர்ப்பணம் செய்தார். இதைப்பார்த்த மன்னன் இவரைச் சைவ வேஷம் பூண்ட கிருஷ்ணபக்தர் என்று அறிந்து கொண்டு தம் தவறை உணர்ந்தார் என்பது வரலாறு.

இது போல் அந்தக் கிராமத்தில் வெகு காலத்திற்குப் பிறகு குழந்தை இல்லாமலிருந்த தம்பதிகளுக்கு ஒரு புத்திரன் பிறந்தான். அவன் நீண்ட ஆயுள் பெற்றவன் என்று பல நிபுணர்களால் கணிக்கப்பட்டது. ஒரு நாள் அக்குழந்தைக்கு மாந்தம் என்ற வியாதி உண்டாகிக் காலகதியை அடைந்தது. அந்த நேரத்தில் அவ்விடம் வந்த ஐயாவாள் பகவானை தியானம் செய்து குழந்தை காலகதி அடையவில்லை என்றும், வியாதியின் ஆதிக்கம் தான் என்று சொல்லி பகவானை ஸ்தோத்திரம் செய்தார். பிறகு அக்குழந்தை உயிர் பெற்று எழுந்தது. எல்லாரும் மகிழ்ச்சி அடைந்தார்கள். இது போல் எத்தனையோ சம்பவங்கள் நடந்து உள்ளது என்பது வரலாறு.

பிறகு சிலகாலம் கழித்துஇவர் வாழ்வில்



## ஐந்து நிலைகளில் ஐயப்பன்

ஐயப்பன் குழந்தையாகக் குளத்துப் புழையிலும்,
இளமைப்பருவ ஐயனாக ஆரியங்காவிலும்,
அரசனாக அச்சன்கோவிலிலும்,
யோகியாக சபரிமலையிலும்,
ஜோதியாக காந்தமலையிலும்
திருவருள் புரிகின்றார்.

தாயார் மனைவியுடன் திருச்சியை விட்டுக் கிளம்பி வெகுதூரம் வந்து விட்டார். அவர்கள் அனேக ஷேத்திரங்களைத் தரிசித்து வரும் வழியில் ஒரு கிராமத்தில் அய்யாவாளுடைய தாயார் அகால மரணம் அடைந்தார்.

தாயாருக்குச் செய்ய வேண்டிய கிரியைகளையெல்லாம் செய்து விட்டுத் தம் மனைவியுடன் தஞ்சைக்கு வந்து சேர்ந்தார். பிறகு அவ்விடமிருந்து கிளம்பி கும்பகோணம் திருபுவனம், திருநாகேஸ்வரம் முதலிய ஸ்தலங்களைக் கடந்து காவேரி கரையில் வசிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மிகவும் அழகான சோலைகள் நிறைந்த திருவிசலூர் அக்ரஹாரத்தில் வசித்து வந்தார் ஐயாவாள். திருவிசலூரில் இருந்து கொண்டு ஸதா காலமும் பகவத் பக்தியில் ஈடுபட்டு வந்தார். பகவன்நாமத்தைக் கீர்த்தனம் செய்தும் உருக்கமான ஸ்தோத்திரங்களாகச் சொல்லிக் கதறிக் கதறி அழுவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் அவர் எழுதிய தயாசதகம், மாத்ருபூதசதகம், ஸ்துதிபத்ததி, சிவபக்தி கல்பலதா தாரவளி, நவரத்ன மாலிகா போன்ற அனேககிரந்தங்கள் உள்ளன.

அக்காலத்தில் ஸ்ரீதர அய்யாவாள் அவர்களும், பகவான் நாம போதேந்திராள் ஸ்வாமிகளும் அடிக்கடி சந்தித்து பல ஆன்மீக விஷயங்களைப் பேசியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீபோதேந்திராள் ராம நாம மகிமையை உணர்த்திய மகான் ஆவார். ஸ்ரீ போதேந்திராள் அதிஷ்டானம் திருவிடை மருதூர் அருகிலுள்ள கோவிந்தபுரத்தில் உள்ளது என்பது விசேஷமாகும்.

ஒரு நாள் ஐயாவாள் தாயாரின் சிராத்தம் (தெவசம்) அதற்கான ஏற்பாடுகள் செய்துவரும் பொழுது காவேரிக்கரைக்கும் போகும் பாதையில், ஒரு அன்னிய ஜாதியில் பிறந்த ஒருவன் பசியினால் துடித்து கொண்டு இருந்தான். இதைக்கண்ட ஐயாவாள் மிகவும் வேதனையடைந்து அவனை வீட்டுக்கு அழைத்துவந்து கொஞ்சம் கூட ஆலோசிக்காமல் தெவசத்துக்காகச் சமைத்து வைக்கப்பட்டிருந்த அன்னத்தை அவனுக்குப் பசியாறக் கொடுத்து விட்டார். ஏனெனில் அங்குவந்த அவன் தன் பக்தியை பரிட்சிக்க வந்த பரமேசுவரனே அந்த வேஷத்தில் வந்தது போல் அவருக்கு தோன்றியது.

அந்த அன்னிய ஜாதிக்காரனுக்குப் போஜனம் செய்து வைத்தார் என்பதால் புரோகிதர்கள் தெவசத்துக்கு வர மறுத்துவிட்டார்கள். வேறு சமையல் செய்தும் வரமறுத்துவிட்டபடியால் இதற்குப் பிராயச்சித்தமாக மகா அய்யாவாள் கங்காஸ்னானம் செய்து வந்தால் தெவசத்திற்கு மறுபடியும் வரமுடியும் என்று புரோகிதர்கள் கூறினார்கள்.


மிகவும் வேதனை அடைந்த அய்யாவாள் வெகுதூரம் யாத்திரை செய்ய முடியாத வயது ஆனதால் கங்கையை அழைத்து வருகிறேன் என்று சொல்லிக்கங்காஸ்டகம் என்ற தோத்திரத்தை மனம் உருகிப் பாடினார். அன்று கார்த்திகை மாதம் அமாவாசைதினம், உடனே வற்றியிருந்த கிணற்றில் இருந்து கங்கை வெள்ளம் கட கட வென்று பொங்கி வந்து வீதியில் ஓடியது. இதைப் பார்த்த ஊர் ஜனங்களும், புரோகிதர்களும் அதிசய மானார்கள். ஐயாவாளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு எல்லாரும் கிணற்றில் வரும் கங்கையில் ஸ்நானம் செய்தார்கள்.

மேலும் புரோகிதர்களும் சிரார்த்தத்தை (திவசம்) நடத்திவைத்தார்கள் என்பது வரலாறு.

இன்றும் திருவிசலூரில் கார்த்திகை மாதம் அமாவாசைஅன்று காலையில் பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் இதே கிணற்றில் கங்கை ஸ்நானம் செய்கிறார்கள். மேலும் பிற்பகல் தண்ணீர் வருவதில்லை என்பது அதிசயமாகும.

ஒரு நாள் திருவிடைமருதூரில் உள்ள அருள்மிகு மகாலிங்க சாமியை ஐயாவாள் பக்தி பரவசமாகப் பாடி மகாலிங்கத்தை ஆலிங்கனம் செய்து கொள்ளக் கர்ப்பகிரஹத்துக்குள் சென்றார். அவ்விடமே இறைவனோடு இரண்டறக் கலந்தார் என்பது வரலாறு.

# பதில்





(இந்த இதழில் வாசகர்கள் தொடுத்திருந்த வினாக்களுக்குத் திருக்கைலாயப் பரம்பரை திருக்கோவிலூர் ஆதீனம் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்தின் ஆதீனகர்த்தராகத் திகழ்ந்த மறைத்திரு ஞானியார் சுவாமிகளின் திருவாக்கிலிருந்து விடைகள் வழங்கப் பட்டுள்ளன என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.)

★★★ செந்தமிழ்ச்செல்வன், விழுப்புரம்

கேள்வி : விரத நாட்களில் நாம் எவ்வாறு வழிபாடு செய்ய வேண்டும்?

பதில் : விரத நாட்களில் மட்டுமன்றி எல்லா நாட்களிலும் நல்ல மனத்துடன், நல்ல வாக்குடன், நல்ல உடம்புடன் நாம் வழிபாடு செய்வதே சாலச்சிறப்புடையது.

நல்ல எண்ணங்களை எண்ணி, நல்ல சொற்களைக் கூறி, நல்ல செயல்களைச் செய்தால் எஞ்ஞான்றும் அவை நமக்கு நன்மையே தருதல் திண்ணமாகும்.

அவ்வாறு நடப்பின் இவ்வுலக இன்பம், சுவர்க்க இன்பம், வீட்டின்பம் என்பவற்றை முறையே எய்தி இன்புறலாம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

★★★ பழநியம்மாள், கோயமுத்தூர்

கேள்வி : ஆயிரத்தெட்டு போற்றி, நூற்றெட்டு போற்றி எனப் போற்றிகள் செய்ய நேரம் வாய்க்காத போது எவ்வாறு நாம் இறைவனைப் போற்றிச் செய்யலாம்?

பதில் : இறைவனுக்குப் பெயரும், உருவமும் இல்லை. ஆயினும் இறைவன் திருநாமங்கள் அளவிறந்தன. அவற்றுள்ளும் சிறந்தனவாக 10,000 திருநாமங்கள் கூறப்பட்டுள்ளன.

இவ்வளவு திருநாமங்களையும் சொல்லு வதற்கு அவகாசம் இல்லை எனச்சிலர் எண்ணலாம்.

அவர்கள் கைக்கொள்ள சகஸ்ரநாமம் (1000) நம் பெரியோர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஆயிரமும் பேரெண் என்னில் பெரியோர் திரிசதி (300) நாமம் வலியுறுத்தியுள்ளனர்.

இவற்றையும் சொல்ல இயலாது என்றால் நூற்றெட்டுப் போற்றி வலியுறுத்தியுள்ளனர்.

இந்நூற்றெட்டு போற்றிகளையும் கூற இயலாது என்றால் அவற்றுள் சிறந்த பதினாறு நாமங்களைக் கூறி இறைவனைப் போற்றுதல் செய்யலாம்.

★★★ வேல்முருகன், விருகம்பாக்கம்

கேள்வி : நான் வேலை என் மார்பில் அணிந்துள்ளேன். அதைக் கண்ணுற்ற என் நண்பன் ஒருவன் வேலைப் பூஜையறையில் வைத்து வழிபடுவதே முறை என்று கூறுகின்றான். நான் என்ன செய்வது?

பதில்: வேலினைக் கோயில், பூஜையறை முதலிய இடங்களில் வைத்து வழிபடுவதோடு உடலிலும் அணிந்து கொள்ளல் சிறப்பே.

உயிருக்கே பேரின்பத்தை நல்கவல்ல வேற்பெருமானை உடம்பில் ஏன் கொள்ளக் கூடாது?

செம்பினாலேனும், வெள்ளியினாலேனும், தங்கத்தாலேனும் உயரிய மணிகளால் இழைத்த வேலை ஒவ்வொருவரும் உடம்பில் அணிவதே மேன்மையாகும்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் குப்புசாமி பத்தர் என்ற அன்பர் தங்கப் பட்டைகளுடன் கூடிய வேலை எமக்குச் செய்து தந்தனர். இதனையாம் எப்போதும் எம்மார்பில் தரித்திருக்கின்றோம்.

கலக்கத்தை ஒழித்திடும் வேல், துன்பத்தை நீக்கும் வேல், இன்பம் தரவல்லது வேல், பசிநீக்கும் வேல், வழித்துணை ஆகும் வேல், எமபயம் அகற்றும் வேல், ஒப்பற்ற துணையாகும் வேல், அடங்காப் பெருமையது வேல்.

★★★ சிவகுமார், சேலம் -4.

கேள்வி : சிவபெருமானை ஏமாந்தவன் என்றும், யார் என்ன வரம் கேட்டாலும் வரத்தைக் கொடுத்து விட்டு அவதிப் படுபவன் என்றும் சிலர் கூறுகிறார்கள். சிவன் ஏமாந்தவனா? விளக்கம் தரல் வேண்டும்.

பதில் : ஆம். சிவன் ஏமாந்தவன்தான்.

'ஏம்' எனில் இன்பம் என்று பொருள்படும். 'மாந்தவன்' எனில் நிறைந்தவன் என்பதாகும். ஆகவே இன்ப உருவினன் சிவபெருமான் என்பது தெளிவுபடும்.

இன்ப உருவினனாகிய சிவபெருமான், எல்லாவற்றையும் சொத்தாகக் கொண்டு இருக்கிறான்.

அவன் தலைவன். பிற உயிர் முதலிய யாவும் அவன் அடிமைகள். இந்நிலையிலுள்ள அவன் வரம் தருதலில் தடை என்ன இருக்கின்றது?

சிவபெருமான் பின்னர் நிகழ்வதை எண்ணித் தான் வரமும் தருகின்றார். ஆதலின் யாவும் அறிந்த பரமன் வரங்களைத் தருவதில் என்ன குறை இருத்தல் இயலும்?

# மகாபாரதம்

முனைவர் த. அமிர்தலிங்கம்

**20**

சுவேதனின் வில்லிலிருந்து பலப்பல அம்புகள் பாய்ந்த வண்ணம் இருக்கின்றன. அவற்றில் ஒன்று வீடுமரின் தேர்க்கொடியை அறுத்துத் தள்ளுகிறது. மற்றொரு அம்பு தேர்ப்பாகனைக் கொல்கிறது, மற்றும் பல அம்புகள் தேர்க்குதிரைகள் மேல் பாய்ந்து அவற்றையெல்லாம் கொன்றழிக்கின்றன.

துரியோதனன் சல்லியனைக் காப்பாற்ற வீடுமரை அனுப்பப் போய், இப்பொழுது வீடுமரையே காப்பாற்ற பல மன்னர்களை அனுப்ப வேண்டி இருக்கிறது.

வீடுமரைக் காப்பாற்ற குருதேசத்தரசனையும், மற்றும் ஐந்து நாட்டரசர்களையும் அனுப்பி வைக்கின்றான் துரியோதனன். சுவேதனோ சற்றும் சளைத்திடாமல் தன்னை எதிர்த்து வந்த மன்னர்கள் எல்லாம் புறமுதுகிட்டு ஓடும்படியாக அம்புகளைத் தொடுத்த வண்ணமாக இருக்கின்றான். சுவேதனின் வீரத்தை அன்றைக்குப் பாராட்டிப் பேசாதவர்களே கிடையாது என்று கூறும் படியாக அவனைப் பாண்டவர் அணியினரும் பாராட்டுகிறார்கள். துரியோதனன் அணியினரும் பார்த்து மெய் சிலிக்கிறார்கள். பாரதப் போரினை வானில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் தேவர்கள் எல்லோரும் கூட சுவேதனின் வீரத்தைக் கொண்டாடுகிறார்கள்.

தேவர்களில் சிலர் சுவேதனைக் கொல்வதற்கு வஞ்சகமான ஒரு ஆலோசனையை வீடுமரிடம் கூறுகிறார்கள். ''சுவேதன் கையில் வைத்திருப்பது சிவ பெருமான் கொடுத்த வில். அந்த வில் அவன் கையில் இருக்கும் வரையில் அவனை வெல்லுவது இயலாது. அவனை வேறு வகையில் வஞ்சகமாகத்தான் கொல்ல வேண்டும்'' என்று தேவர்கள் சிலர் வீடுமருக்கு ஆலோசனை கூறுகிறார்கள்.



வீடுமரும் சுவேதனும் சேருக்கு நேர் நின்று போர் செய்து கொண்டிருக்கும் போது வீடுமருக்கு மட்டும் இத்தகைய ஆலோசனையைத் தேவர்கள் வழங்குகிறார்கள். என்றால் அதற்கான காரணத்தை நாம் இங்கே தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் ஆகும்.

முற்பிறப்பில் வீடுமர் மனிதர் அல்லர். அவரும் தேவரே. அத்வரன், அநிலன், ஆபன், சோமன், துருவன், பிரத்யூஷன், பிரபாஷன் இவர்கள் அஷ்டதேவர்கள் ஆவார்கள். இவர்களுள் பிரபாஷன் என்ற தேவனாகப் பிறந்திருந்தவரே வீடுமர்.

தன்னுடைய மனைவியின் தகாத வார்த்தையைக் கேட்டு வசிட்ட மகரிஷியின் வசமிருந்த காமதேனுப் பசுவைக் களவாடிய குற்றத்தைப் புரிந்தான் பிரபாஷன். அவனுடன் மற்ற ஏழுதேவர்களும் காமதேனுவைக் களவாடத் துணைபுரிந்தனர்.

வசிட்ட மகரிஷி காமதேனுவைக் களவாடிய குற்றத்திற்காக எண்மரையும் சபித்தார். மனைவியின் தூண்டுதலால் குற்றம் புரிந்த பிரபாஷன் பெண் இன்பம் அற்று, நீண்ட நெடுங்காலமாகப் பூமியில் மனிதனாய்ப் பிறந்து வாழ வேண்டும் என்பதும் மற்ற ஏழு தேவர்கள் பிறந்தவுடனேயே இறந்து மீண்டும் தேவராகலாம் என்பதும் வசிட்டர் தந்த சாபம்.

இவ்வாறு சபிக்கப்பட்ட பிரபாஷன் என்ற தேவனே தேவவிரதனாகப் பூமியில் வந்து கங்கையின் வயிற்றில் பிறந்தான். கங்காதேவி பூமியில் பிறக்க நேர்ந்ததும் ஒரு சாபமே.

ஒரு சமயம் பிரமதேவனால் கூட்டப் பெற்ற ஒரு கூட்டத்தில் கங்கை போய் கலந்து கொண்டிருந்தாள். அப்போது ஆன்றோர்கள் பலரும் கூடியிருந்த அந்த அவையில் வருணன், கங்கையைக் காதலுடன் நோக்க, கங்கையும், வருணனைக் காதலுடன் நோக்கினாள்.


அவைக்கு நாகரிகம் அல்லாத அவ்விருவரின் செயலைக் கண்ணுற்ற பிரமதேவன் பூமியில் மானிடராய் பிறக்கக் கடவீர் எனக் கொடுத்த சாபத்தால், வருணன் சந்தனு மன்னனாகப் பிறந்தான். கங்காதேவியும் கங்கை என்ற பெயரில் பூமியில் மங்கையாகத் தோன்றினாள். சந்தனு மன்னன் ஒரு நாள் வேட்டைக்குப் போன்போது கங்கா நதிக்கரையில் கங்கையைக்கண்டு காதல் கொண்டான்.

கங்கையை மணக்க விழைவதாகச் சந்தனு தன் விருப்பத்தைத் தெரிவிக்க, கங்கையும் அவனை மணக்க உடன்பட்டு ஒரு நிபந்தனை விதித்தாள். திருமணத்திற்குப் பிறகு நான் எத்தகைய கொடிய செயலைச் செய்தாலும் கூட, அதை ஏன் எதற்காகச் செய்கிறாய் என என்னிடம் கேட்பதில்லை என்று சத்தியம் செய்து தருவாய் ஆனால் உன்னை

மணப்பேன் : என்றைக்கு நீஎன்னுடைய எந்தவொரு செயலையும் தடுத்துக் காரணத்தையும் கேட்கிறாயோ அன்றைக்கே நான் உன்னைவிட்டு நீங்கிவிடுவேன். இதற்குச்சம்மதமானால் மட்டுமே உன்னை நான் திருமணம் செய்து கொள்வேன் என்பதாகக் கங்கை கூற சந்தனுவும் கங்கையின் மேல் கொண்ட எல்லையற்ற காதலால் அதற்கு இசைந்து திருமணம் புரிந்து கொண்டான்.

சந்தனு - கங்கை இல்லறத்தின் பயனாக ஆண் மகவொன்று பிறந்தது. குலம் தழைக்க கோமகன் பிறந்தான் என்று மன்னனும் மக்களும் மகிழ்ந்திருந்த நேரத்தில் கங்கையானவள் பிறந்த குழந்தையை உடனே தூக்கிச் சென்று கங்கையாற்றில் அமிழ்த்தி அக்குழந்தையைப் பிறந்தநாளிலேயே கொன்றுவிட்டாள். இவ்வாறு முதல் குழந்தையைக் கொன்றதோடு நில்லாமல் இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழாவதாகப் பிறந்த குழந்தை எல்லாவற்றையுமே கங்கையாற்றில் மூழ்கடித்துப் பிறந்த சற்று நேரத்திற்கு எல்லாம் கொன்று விட்டாள்.

எட்டாவது குழந்தை பிறந்தவுடன் அக்குழந்தையையும் கொல்வதற்காகக் கங்கை தூக்கிச்சென்ற பொழுது சந்தனுமன்னன், முன்தான் அவளுக்குச் செய்து கொடுத்திருந்த சத்தியத்தையும் மீறி ''நீயார்? பெண்ணா? பேயா? ஏழு குழந்தைகளைக் கொன்று தீர்த்த நீஅரக்கியும் தானோ? நீயாராயினும் இக்குழந்தையைக் கொல்ல அனுமதிக்க மாட்டேன். எதற்காக இப்படி எல்லாம் நடந்து கொள்கிறாய்?'' என்று கங்கையைத் தடுத்துக் காரணத்தை வினவியபோது தான், முன் கூறப்பட்ட பிரமதேவன் மற்றும் வசிட்ட மகிரிஷியின் சாப வரலாறுகளை எல்லாம் சந்தனு மன்னனிடம் கங்கை எடுத்துக்கூறி பிரபாஷன் என்ற தேவனே இப்பொழுது தன் வயிற்றில் பிறந்த இந்த எட்டாவது குழந்தை என்ற விவரத்தையும் தெரிவித்தாள்.



## குட்டிக்கந்தப்புராணம்

குமரகுருபரர் திருச்செந்தூர் முருகன் அருளால் தம் ஐந்தாவது வயதில் பேசும் வரமும், பாடும் வரமும் பெற்றுப் பாடிய முதல் நூல் ''கந்தர்கலி வெண்பா'' ஆகும்.

*122* கண்ணிகளைக் கொண்டு, சைவ சித்தாந்த சாரமாக அமைந்த இந்நூல், கந்தனின் அருள் வரலாற்றை எளிமையாகவும், சுருக்கமாகவும் கூறுவதால் ''கந்தர் கலிவெண்பா'' நூலினைக் கற்றவர்கள் ''குட்டிக்கந்தப்புராணம்'' என்று போற்றுகின்றனர்.



கங்கை, திருமணத்திற்கு முன்பு சந்தனு மன்னனிடம் விதித்திருந்த நிபந்தனையின் படியே தன் செயலைத் தட்டிக் கேட்டுவிட்ட மன்னனுடன் தான் இனி சேர்ந்து வாழ இயலாதென்பதையும் தெரிவித்து, தன்னுடைய எட்டாவது குழந்தையைச் சிறிதுகாலம் தானே வளர்த்துப் பின் வேந்தனிடம் ஒப்படைப்பதாக உறுதியும் கூறிக் குழந்தையுடன் கங்கையாற்றிற்குள் மாயமாக மறைந்து போனாள். மகனுடன் மறைந்த கங்கை தேவவிரதன் என்ற பெயரை அவனுக்கு இட்டு, யாருடைய சாபத்தால் அவன் பூமியில் பிறக்க நேர்ந்ததோ அதே வசிட்ட மகரிஷியிடம் அறிவு நூல் பயிற்சியும், பரசுராமரிடம் அத்திரப் பயிற்சியும் அளித்து அவனை வாலிபனாக்கிப் பின் மறுபடியும் சந்தனு மன்னனிடமே கொண்டு வந்து ஒப்படைத்தாள்.

**''வேந்தகேள் இவனுன் மதலையே<br>தேவவிரதன் என்றிவன் பெயர், பல்லோர்<br>ஆய்ந்த நூல் வெள்ளம் கடந்தனன் கரைகண்<br>டருந்தபதி திருவருளால்<br>பூந்துழாய் மாலைப்போர் மழுப்படை<br>யோன் பொன்னடி பொலிவுற வணங்கி<br>ஏந்துநீள் சிலையும் பலகணை மறையும்<br>ஏனைய படைகளும் பயின்றான்''**

(குருகுலச் சருக்கம், 87)

என்று கூறி, கங்கை தேவவிரதனைச் சந்தனுவிடம் ஒப்படைத்துத் தான் பூமியில் வாழ்ந்து கழித்தாக வேண்டிய காலக்கெடு தீர்ந்து போனபடியால் மறுபடியும் அமராபதிக்கே சென்று சேர்ந்து விடுகிறாள்.

கங்காதேவியால் தெரிவிக்கப்பட்ட இந்த வரலாறுகளின் படி பிரபாஷன் என்ற தேவனே, தேவவிரதனாகப் பூமியில் பிறந்திருப்பதை நாம் தெரிந்து கொள்கிறோம். இந்தத் தேவவிரதனே, தன் தந்தையான சந்தனுமன்னன் மீண்டும் யோசனகந்தி என்ற செம்படவர் குலத்தில் தோன்றிய மங்கை ஒருத்தியின் மேல் மையல் கொள்ள அவளைத் தன் தந்தைக்கு மணமுடித்து வைக்கும் பொருட்டு, ''யோசனகந்தியின் பெற்றோர் விதித்த நிபந்தனை களுக்கெல்லாம் உடன்பட்டு யோசனகந்திக்குப் பிறக்கும் மக்களே மகுடம் பூணுவர். நான் எனக்குரிய அரசுரிமையைத் தியாகம் செய்து விட்டேன். நான் திருமணம் செய்து கொண்டால், என் மக்கள் வருங்காலத்தில் அரசுரிமையைக் கேட்கவும் கூடும் என்பதால், நான் ஆயுள் முழுவதும் திருமணமே செய்து கொள்ளாமல் பிரம்மச்சரியம் பூண்டு நிற்பேன்'' என்று சத்தியம் செய்து தந்து, 'செயற்கரிய சத்தியம் செய்து தந்தவன்

என்ற பொருளில் 'வீடுமன்' என விண்ணோரும் மண்ணோரும் வாழ்த்தி வழங்கிய சிறப்புப் பெயரையே பின் தம் பெயராகக் கொள்ளுவதைக் காண்கிறோம்.

இவ்வாறு முற்பிறப்பில் பிரபாஷன் என்ற தேவனாக வாழ்ந்திருந்தார் வீடுமர் என்பதனாலேயே இனம் இனத்தோடு சேரும் என்ற பழமொழிக்கேற்ப, தேவர்கள் சுவேதனை வஞ்சனையால் வெல்லுமாறு வீடுமருக்கு ஆலோசனை கூறுகிறார்கள். முற்பிறவியில் மனைவியின் தீய ஆலோசனையால் காமதேனுப் பசுவைக் கவர்ந்து சாபத்துக்காளான வீடுமரே, இப்பிறவியிலும் தேவர்கள் சிலரின் தீய ஆலோசனைக்கிணங்கித் தீராத பழிக்கு ஆளாகப் போவதை இனிக் காணப்போகிறோம்.

''சுவேதா! உனக்கு வில்வித்தை ஒன்றுதான் தெரியுமோ? இரண்டு முறை என்னுடைய வில்லை முறித்து விட்டாய் என்ற மமதையில் இருப்பவனே! உனக்கு வீரம் இருந்தால் வாளெடுத்து வந்து என்னோடு மோதி உன் ஆற்றலைக் காட்டுப் பார்க்கலாம்''.

வீடுமர் இவ்வாறு கூற, மாபெரும் வீரனும், வாள் வலிமையிலும் வல்லவனான சுவேதன், வீடுமர் விரும்பியவாறே தன்னுடைய வாள் வலிமையைக் காட்ட விரும்புகின்றான். சிவபெருமானால் அளிக்கப் பெற்ற வில்லினைத் தேரிலே வைத்து விட்டு வாள், ஒன்றை ஏந்தியவனாக ''வீடுமரே வாரும் ! வந்து என் வாளாற்றலையும் பாரும்!'' என்பதாகக் கூறி தேரிலே இருந்து குதிக்கின்றான் சுவேதன்.

வலக்கையில் வாளேந்தி சுவேதன் வீடுமரை நெருங்கி வர, வீடுமரோ தாமும் வாளெடுத்துப் போர் புரிவதற்குப் பதிலாக, புதிய வில்லொன்றை எடுத்து, அதிலே கணையினைப் பூட்டி, சுவேதன் மேல் தொடுத்து, அவனுடைய வாளேந்திய வலக்கையைக் கொய்து வீழ்த்துகிறார் என்றால் அந்தக் கொடுமையை என்னவென்று சொல்லுவது?

தன்னுடைய வலக்கை அற்று வீழ்ந்ததோ அல்லது வீடுமரின் வீரமும் புகழுமே அற்று வீழ்ந்ததோ என்பதாக எண்ணி சுவேதன் ஒரு நொடி நேரம் திகைத்து நிற்கிறான்.

''வலக்கை போனால் என்ன? இடக்கை இருக்கிறதே ! இடது கையினாலேயே வீடுமருக்கு வாள் வீரத்தைக் காட்டலாம்'' என்பதாக எண்ணி இடக்கையினால் வாளினை மீண்டும் எடுத்துக் கொண்டு, வீடுமரை நோக்கிப் பாய்கிறான் சுவேதன்.

அப்பொழுதேனும் வீடுமர் வில்லை விடுத்து வாளெடுத்து வந்து, சுவேதனுடன் பொருதாரா என்றால் இல்லை. மீண்டும் மீண்டும் சுவேதன் மேல் அம்புகளையே ஏவிடும் வீடுமர், சுவேதனின் ஆருயிரையும் அநியாயமாகப் பறித்துக் கொள்கிறார்.

''எடுத்தவடி வாளினொடு எண்ணில்
பலபாணம்
தொடுத்துவரு வீடுமனை மாமுடி
துணிப்பான்
அடுத்துவரு போதகன் அழன்றொரு
சரத்தால்
நடுத்தகை உறாமல் அவன் நல்லுயிர்
கவர்ந்தான்''

(முதற்போர்ச் சருக்கம்.68)

இவ்வாறு வஞ்சகத்தால் சுவேதனுடைய நல்லுயிரை வீடுமர் கவர்ந்து, அவர்மேல் பலரும் கொண்டிருக்கும் பெருமதிப்பைப் பாழாக்கிக் கொள்கிறார். தம்பி உத்தரனைக் கொன்ற சல்லியனைப் பழி தீர்க்க முற்பட்ட சுவேதன், தன்னுடைய முயற்சியில் தோற்று வீடுமரின் வஞ்சகத்திற்குத் தன் ஆருயிரையும் பறி கொடுக்கும் சோகத்தோடு முதல்நாள் போர் இவ்வாறு நிறைவு பெறுகிறது.

முற்பகல் போரில் உத்தரனையும், பிற்பகல் போரில் சுவேதனையும் பலி கொடுத்த பாண்டவர்களுக்கு முதல் நாள் போர் தோல்வியையே தந்தது என்றாலும், ''தருமத்தின் வாழ்வதனை சூது கவ்வும், தருமம் வெல்லும்'' என்பதையே இனிவரும் போர்களில் நாம் பொறுத்திருந்து பார்க்கத்தானே போகிறோம்!

(தொடரும்)

## சந்தனமரத்தால் ஆன நடராசர்



திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலில் உள்ள நடேசர் சந்தனமரத்தால் ஆனவர்.

## ஓவிய உருவமாக உள்ள நடராஜர்

நடராஜருக்குரிய ஐந்து சபைகளில் திருக்குற்றாலத்தில் உள்ள சபை சித்திரசபை என வழங்கப்படுகிறது.



பொற்சபை, இரத்தின சபை, வெள்ளிசபை, தாமிர சபைகளில் விக்கிரமாகக் காட்சியளிக்கும் நடராஜர், திருக்குற்றாலத்தில் ஓவிய உருவமாகக் காட்சியளிக்கிறார். ஆகவே இச்சபை சித்திரசபை என வழங்கப்படுகிறது.

# ஓரணாவும் மாம்பழமும்



ஒரு முறை ஞானியார் சுவாமிகள் ஆன்மீக உரை ஆற்றிக் கொண்டிருந்தபோது மெய்யன்பர் ஒருவர் எழுந்து வினா ஒன்று தொடுத்தார். ''வாழ்நாளை வீணாக ஆக்கிக் கொண்டுள்ளோமோ என்ற வாட்டம் அவ்வப்போது என்னை வருத்திக் கொண்டுள்ளது. எவ்வாறு வாழ்ந்தால் மக்கள் வாழ்வு சிறக்கும்? என்பதை விளக்கவும்'' என்று அவ்வன்பர் வினவிய வினாவிற்கு நம் ஞானியார் சுவாமிகள் பின்வருமாறு விளக்கம் அளித்தார்.

அன்பர்களே ! நாம் வந்த காரியம் ஒன்று. இன்று செய்து கொண்டிருப்பது மற்றொன்று.

தலைவன் ஒருவன் இருந்தான். அவனிடம் வேலைக்காரன் ஒருவன் இருந்தான்.

தலைவனுக்கு மாம்பழத்தில் விருப்பம் மிகுதியும் உண்டு. ஆகவே தன் வேலைக்காரனிடம் ஓர் அணாவைக் கொடுத்து ''மாம்பழம் வாங்கிவா'' என்றான்.

தலைவர் கட்டளையை மனத்தின்கண் கொண்டு கடைத்தெருவை வேலையாள் அடைந்தான. அங்கே கொய்யாப்பழத்தைக் கண்டான்.

வேலையாளுக்குக் கொய்யாப்பழத்தின் மேல் விருப்பம் உண்டு. ஆதலின் அவன் விருப்பம் அதன்பால் சென்றது.

தன் நினைவே ஒழுங்கானது என எண்ணினான். ஓரணாவைக் கொடுத்துக் கொய்யாப்பழத்தை வாங்கினான், உண்டான்.

முதலாளியின் விருப்பத்திற்கு மாறாக நடந்தமையால் அவரைச் சென்று பார்க்கவும் நாணி இருந்தான்.

**இக்கதைதான் நம் கதை.**

**தலைவன் : கடவுள்**

**வேலையாள் : உயிர்**

**அணா : உடல்**

**மாம்பழம் : பக்தி**

**கொய்யாப்பழம் : மோகம்**

**கடைத்தெரு : பூலோகம்**


இவற்றை ஒப்புநோக்கிப் பார்க்கின் உண்மை நன்றாக விளங்கும்.

வாழ்நாளை வீணாளாகக் கழித்தல் ஆகாது.

பாற்கடலில் உள்ள மீன் பாலைக் குடித்துப் பசியாற வேண்டும்.

அவ்வாறு இன்றி இழிந்த புழு, பூச்சிகளைத் தின்று வாழல் வாழ்வாகாது.

அவ்வாறே இறைவன் அருட்பாலில் வாழும் நாம் இழிந்த பிறவற்றில் நம் கருத்தைச் செலுத்தல் தக்கதன்று.





# திருமந்திர உபதேசம்

திருமந்திரச்செல்வர் டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு)

**"களிம்பு அறுத்தான் இறைவன்"** என்கிறார் திருமூலர். களிம்பு செம்புடன் கலந்தே இருப்பது. செம்பின் குணத்தை - தன்மையைக் குறைப்பது.

செம்பு உள்ளபோதே களிம்பும் உண்டு. ஆனால் களிம்பு செம்பின் குணம் அல்ல. தன்மையல்ல.

செம்பைத் தூய்மைப்படுத்தி, களிம்பை அகற்ற முடியும். ரசவாத முறையால் நமது சித்தர்கள் செம்பையும், மற்ற உலோகங்களையும் தங்கமாக்கிக் காண்பித்தார்கள். தூய்மை செய்யப் பட்ட செப்புப் பொருளிடத்திலிருந்து, களிம்பை அகற்றினாலும, அவ்வாறு செய்யப்படாத பிற செப்புப் பொருள்களுடன் களிம்பு சேர்ந்தே இருக்கும். செப்புப் பொருளைப் பற்றிக் கொண்டு நிற்பது களிம்பின் இயல்பு. அதை நீக்கி, செம்பைத் தூய்மைப்படுத்துவதும் சாத்தியமே.

ஆணவமும் அதே போல அறிவற்றபொருள். ஆனாலும் உயிரைப்பற்றி நிற்கின்றது. மூலமலம் அல்லது சகசமலம் எனப்படுகிறது. ஆணவம் உயிரின் ஆற்றலைத் தடை செய்கிறது. தான் யார் என்று தெரிந்து கொள்ளாமல் இருக்கும் வகையில் தடை செய்கிறது.

இறைவனைப்பற்றிய சிந்தனைக்கு அது இடம் கொடுப்பதில்லை. தன்னை மையமாக வைத்து, உயிர் உலகத்தைப் பார்க்கும் வகையில் ஆணவம் செயல்படுகிறது. இவற்றின் காரணமாக உண்மை மறைந்து கிடக்கின்றது. பொய்ம்மை தலைதூக்கி நிற்கின்றது. எனவே, ஆணவம் இருள்மலம் என்றே பேசப்படுகிறது.

ஆணவம் உயிரைப் பற்றி நிற்கும். அப்போது, உயிர் தன்முனைப்பு எழுச்சிபெற, உலகை நோக்கி, உலகப் பொருள் அனுபவங்களை உண்மை எனக் கருதிச் சாதனை முயற்சிகளில் தன்னை ஈடுபடுததி, வினைகளை வளர்க்கும்.

ஆணவமலம் உயிர்களைச் சார்ந்த குற்றமாகும். அது மெய்ப்பொருளை உயிரினிடமிருந்து மறைக்கின்றது. "இருள் ஒளிர இருண்ட மேகம் ஆய்" என்கிறது சிவப்பிரகாசம். ஆணவமலம் இருளை விடக்கொடிது என்பார்கள் சான்றோர்கள்.

இருள் தன்னைக் காட்டிக் கொள்ளும். ஆணவம் தன்னையும் காட்டாது. உயிரையும் இறைவனிடத்திலிருந்து மறைத்து விடும். ஆனால் ஆணவம் உயிரின் குணமாகாது, உயிரினுடைய குணம் அறிவேயாகும்.

ஆணவமோ ஒரு சடப்பொருள். உயிரின் குணம் சடமாக ஒரு போதும் இராது. உயிரின் தன்மையான அறிவினை எவராலும் அழிக்க முடியாது. அறிவு விபரீத வழிகளில் சென்று, உண்மை விளக்கம் பெற இயலாமல் போய்விடுகிறது.

இங்கே தான் இறைவனின் கருணை தேவைப்படுகிறது. அது எப்போதும் எங்கும் நமக்குக் கிடைத்து வரும் வரப்பிரசாதம். ஆணவம் சடப்பொருளாயினும், தனது தன்மையினை வெளிக்காட்டுவதும் திருவருளின் செய்கையாலே தான் முடிகின்றது.

இறைவன் திரோதன சக்திவழியாக, ஆணவமலத்தை இயக்கி, உயிர்களுக்குப் பல்வேறு அனுபவங்களைக் கொடுத்து, மலபரிபாகம் அடையச் செய்து, பேரருள் காட்டி, தமது திருவடிகளில் உயிரைச் சேர்த்துக் கொள்கின்றான். மலபரிபாகம் ஆனநிலையில் திரோதன சக்தி அருட்சத்தியாய், உயிருக்குத் தன்நிலை விளக்கம் கொடுத்து மெய்யுணர்வைத் தீவிரப்படுத்தி பதிஞானத்தையும் நல்கச்செய்கிறது.

இறைவனுடைய மறக்கருணை திரோதானசத்தியாக நின்று இருவினைப் பயனை ஊட்டுவிக்கின்றது. உயிரைப் பேதிக்கின்றது. உலகவழியிலே போகச் செய்கின்றது, இறைவனுடைய திருவடிப் பேற்றிற்கும் வித்திடுகிறது.

> **"பேதித்து நம்மை வளர்த்தெடுத்த**
> **பெய்வளையாள் பாதத்தி றம்பாடி**
> **ஆடேலோர் எம்பாவாய்"**

என்கிறார் மணிவாசகப் பெருமாள்.

திரோதன சக்தி, அருட்சக்தி என்பது வேறு வேறு அல்ல. இறைவனுடன் தாதான்மியமாக கலந்துள்ள பராசக்தி. உலகத்தைத் தோற்றுவிக்க வேண்டி ஆதிசக்தியாகவும், திரோதன சக்தியாகவும், பின்னர் மலம் நீங்கிய உயிருள்ள இறைவன் திருவடிகளில் சேர்த்து வைக்கும் அருட் சக்தியாகவும் செயலாற்றுகிறாள். இறைவனே இதற்கெல்லாம் மூலகாரணன். அவன் கண்ணுதல் நந்தி. அவனுடைய நோக்கமெல்லாம் உயிரின் உய்தியே. அவனுடைய திருவிளையாடல் எல்லாம் தனது அருளை வெளிப்படுத்தி, தனது நோக்கத்தைச் செயல்படுத்துவதேற்கேயாகும்.

"கருணை கூர்ந்த அருள் திரு நோக்கம்" என்பார் சேக்கிழார் பெருமான்.

திருவருளின் வியாபகத்தை முற்றிலும் உணர்ந்தவர் காரைக்கால் அம்மையார். உலகம் செயல்படுவதும், உயிர்கள் உய்தி பெறுவதும், எல்லாம் இறைவன் திருவருளே என்பதை உணர்வினால் தெரிந்து கொண்டவர். இறைவனுடைய அருளையே துணையாகக் கொண்டு, மெய்ப்பொருளை ஆராயும் பண்பினைப் பெற்றவர்.

''அருளே உலகெல்லாம் ஆள்விப்பது, ஈசன்
அருளே பிறப்பறுப்பது; ஆனால் - அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன், எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவ(து) எனக்கு''

(அற்புதத் திருவந்தாதி)

''செம்மை நலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மை மலம் அறுவித்து முதலாய முதல்வன்தாள்
நம்மையும் ஒரு பொருளாக்கி நாய்ச் சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளிய வாறு ஆர் பெறுவார் அச்சோவே''

(திருவாசகம், அச்சோப் பதிகம்)

என்று பாடுகிறார் மணிவாசகப் பெருமான்.

உலகப் பொருளையே பொருளாக மதித்து வாழ்ந்து வரும் நம்மை உண்மைப் பொருள் ஆக்குபவன் இறைவன்.

திருஞான சம்பந்தர் ஞானப்பாலுண்டு மெய்ஞ்ஞானம் பெற்ற நிலையில், எப்பொருளையும் ஆக்குவான் ஈசனே என்ற உணர்வினைப் பெற்றார் என்பது சேக்கிழார் பெருமானின் திருவாக்கு.

இவையெல்லாம் திருவருள் உயிரில் பதியத் தொடங்கிய போது நிகழ்கின்றது. ஊனக்கண்கள் உறங்கச் செல்கின்றன. அருட்கண்கள் விழிப்படைகின்றன. ஒரு பிறவியில் அவை விழிக்கத் தொடங்குகின்றன என்றால் அது முழுவதும் திருவருளின் செயல்பாடேயாகும்.

ஆணவக் கலப்பு உள்ளவரை, கண்ணோட்டமெல்லாம் தன் முனைப்பால் உந்தப்பட்டு, உலகை நாடிச் சென்று, உயிரைப், பிறவித் துன்பங்களில் ஆழ்த்துகிறது. ஆணவக் கலப்பு நீங்க நீங்க, அருளால் பார்க்கும் ஆற்றலும், இன்பமும் வளர்கிறது.

''அருளாலே எவையும் பார் என்றான் - அத்தை
அறியாதே சுட்டி என் அறிவாலே பார்த்தேன்''

என்பார் தாயுமானவர்.

எங்கு, எப்படி, எப்போது, இறைவன் திருவருளால் உணர்வுகள் மடை மாறுகின்றன என்பதை யாரால் சொல்ல இயலும்?

திண்ணனார் (கண்ணப்பர்) காளத்தி மலையைக் காண்கிறார். அங்கே செல்ல விரும்புகிறார். குடுமித்தேவர் அங்குக் குடியிருப்பதும் தெரிய வருகிறது. திண்ணனார் மலை ஏற, அவருடைய உள்ளத்திலிருந்த பெரும்பாரம் அகன்றது போன்ற உணர்வு ஏற்படுகிறது.

மேலும் செல்கிறார். கருணை கூர்ந்த அருள்திரு நோக்கம் திண்ணனார் மீது படுகிறது. அப்போதே, அவர் தத்துவப் படிகளையெல்லாம் கடந்தவரானார். அநாதியே அவரைத் தொடர்ந்து வந்த மலங்களெல்லாம் அவரை விட்டு நீங்கின என்கிறார் சேக்கிழார் பெருமான். கண்ணப்பர் ஒப்பற்ற அன்பு உருவம் ஆகிறார். அன்பே சிவமாதலால், நாயனார் சிவமாம் தன்மையைப் பெறுகிறார்.

''திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணாமுன்னே
அங்கணர் கருணை கூர்ந்த அருட்திரு நோக்கமெய்த்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்பு விட்டகல நீங்கிப்
பொங்கிய வொளியின் நீழற் பொருவில் அன்புருவமானார்''

என்கிறார் சேக்கிழார் பெருமான

அருட்கண் விழிப்பித்துக் களிம்பறுத்த பெருமானின் கருணைத்திறனை யாராலும் அளவிட இயலுமா?

''களிம்பறுத்தான் எங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பறுத்தான் அருட்கண் விழிப்பித்து-''

(திருமந்திரம் 114)

(தொடரும்)

## அம்மையை மகிழ்விப்பது அடியவர் கண்ணீர்



ஏழுகடல்களிலிருந்தும், கங்கை, காவிரி முதலான புனித ஆறுகளிலிருந்தும் நீரைக் கொண்டு வந்து திருமஞ்சனம் செய்தாலும் இறைவி அவற்றை விரும்பாமல், அன்பர்களின் கண்களிலிருந்து விழும் இரு சொட்டு கண்ணீருக்காக ஏங்கி நிற்கின்றார்.

''ஆறுகடல் ஏழிருந்தும்
என்னம்மை அன்பாளர்
கண்ணருவி ஆடுவது
திருவுள்ளம்''

என்பது திருவாசகம்.

## மார்கழியில் நாயன்மார் நட்சத்திரம்



| | | |
|---|---|---|
| சடையர் | - | திருவாதிரை |
| இயற்பகையார் | - | உத்திரம் |
| மானக்கஞ்சாறர் | - | சுவாதி |
| சாக்கியர் | - | பூராடம் |
| வாயிலார் | - | இரேவதி |

# பாம்பன் சுவாமிகள்

தா. சந்திரசேகரன், இ.ஆ.ப.
சிறப்புச் செயலாளர், தமிழ் வளர்ச்சி
பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை



பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்தவன், நம் வாக்கில் எங்கும் உறைந்திருக்கும் வாசவன் மருகன்.

நேசக் குறமகள் நாதன், பாசமலராய் வீற்றிருக்கும் பார்வதி பாலன், பரமன் மகன், பன்னிருகை வேலன்.

இவன் எல்லாம் அறிபவன். எல்லாத் திசைகளிலும் விளங்கியிருப்பதால் அவன் எங்கும் நினைப்போர்க்கெல்லாம் தோன்றி இன்னலை நீக்கிக் கன்னல் சாறு போல இன்பம் அளிப்பவன்.

அவனது அருள் எங்கிருந்தாலும் அருவி போல் சுரந்து கொண்டேயிருக்கும். அவ்வருள் எந்த இடத்தில், எந்த உருவத்தில் எப்படி வரும் என்று சொல்ல முடியாது.

ஒரு முறை தூத்துக்குடி விரைவு வண்டியில் செல்ல முருகன் என்ற அன்பர் ஒருவர் பயணச் சீட்டு வாங்கி வண்டி நிற்குமிடம் வந்தார். ஆனால் வண்டியோ அவர் வருவதற்கு முன் நகர்ந்து விட்டது. நகரும் போது முயன்று வண்டியில் ஏறலாமென்று கம்பியைப் பிடித்தார். அதற்குள் அங்கிருந்த அதிகாரி அவரை இழுத்து நிறுத்தி விட்டார். வண்டியோ போய் விட்டது. அந்த அன்பருக்கு மிக வருத்தம் தான். ஆனால் மறுநாள் செய்தித்தாளிலே தூத்துக்குடி விரைவு வண்டி அரியலூரில் தடம் புரண்டது. இரண்டொரு பெட்டிகள் பூமிக்குள் புதைந்தன என்று செய்தி வந்தது. இதைக் கேட்டு அதிர்ச்சியுற்றார் அந்த அன்பர்.

முருகப் பெருமானின் திருவருளால் அதிகாரி உருவில் வந்து தன்னைத் தடுத்து விட்டமையை வியந்து மகிழ்ந்தார். ஆகவே எல்லாம் வல்ல நம் வள்ளல் முருகப் பெருமானின் திருவடியிலே நம்பிக்கை வைத்துவிட்டால் அவன் நம்மை எவ்வாறாகிலும், எங்கேனும் யார் மூலமாகினும் வந்து காப்பாற்றுவான். அந்த திருவருளில் திடமான உறுதி கொண்டவர் நம் குருநாதர் பாம்பன் சுவாமிகள். அவர் சமாதான சங்கீதத்தில் பின் வருமாறு கூறுகின்றார்.

**''சஞ்சல மேன் மனமே - சிவனடித்**
**தஞ்சமான பினுமே**
**வானமிடிந்து தலையில் விழும்படி**
**வம்பு வந்தாலு மென்ன? அந்தக்**
**கானமயில் முருகையன் திருவருள்**
**கைவிட மாட்டாதே''**

ஒரு முறை இராமநாதபுரத்திலிருந்து சுவாமிகள் ஒரு குதிரை பூட்டிய தபால் வண்டியில் ஏறினார். அது மானாமதுரைக்கு அருகில் வந்தது. எதிர்பாராமல் வண்டி குடை சாய்ந்து விட்டது. சுவாமிகளுக்கு ஒரு பாதம் தரையில் தாக்கி வளைந்து வீங்கிற்று. நோயோ பெரிதாகியது. உடனே சுவாமிகள் வண்டியிலிருந்து அங்கேயே இறங்கி விட்டார்.

வேறொரு வண்டியில் ஏறி ஆற்றிற்கு அந்தப் பக்கத்திலிருந்த அன்பர் அறம் வளர்த்த நாதபிள்ளை என்பவர் வீட்டிற்குச் சென்றார். அவர் உப்புத் தணிக்கை அதிகாரி அலுவல் பார்ப்பவர். அவர் தம் வேலை நிமித்தமாக சிவகங்கை என்ற ஊருக்குச் சென்றிருந்தார். சுவாமிகள் அவர் இல்லத்தை அடைந்தவுடன் அந்த அன்பரின் அன்னையார் சுவாமிகளை வணங்கித் திண்ணையின் மேல் அமரச் செய்தார். அந்த நாளில் இரவில் சிவகங்கை சென்ற அதிகாரி கனவில் ''உன்னுடைய வீட்டில் குமரகுருதாசர் காலில் விபத்தால் தாக்குண்ட வீக்கத்துடன் வந்துள்ளார். நீ அவரை உடனே பார்'' என்ற உத்தரவு கிடைத்தது.


இது யாருடைய உத்தரவு? நம் முருகப் பெருமான் உத்தரவன்றோ! அந்த அதிகாரியும் அவ்வாறே புறப்பட்டு மறுநாள் காலையில் சுவாமிகளைத் தம் இல்லத்தில் கண்டார். முருகப் பெருமான் திருவருளை நினைத்துச் சுவாமிகளுக்கு ஆங்கில மருத்துவரைக் கொண்டு சிகிச்சைசெய்து குணப்படுத்தினார். ஒரு வாரத்திற்குள்ளாக சுவாமிகள் முற்றிலும் குணமானார். பின்னர்த் தம் பயணத்தைத் தொடங்கினார். இந்தச்சிறப்பை

**''அம்பிறங்கு நாடு ஆலவாய் செல்முன்**
**அடல்கொள் பண்டியால் அடி மடங்கியே**
**வெம்பி வாடலிற் காத்த நீயிங்ஙனம்**
**விடுகை என்கொலோ முருக நம்பியே!''**

எனக் கூறியுள்ளார்.

நம்முடைய குருநாதர் பாம்பன் சுவாமிகள் மழவனேந்தல், திருவாதவூர், திருஆலவாய் என்ற தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்தார். பின்னர் சென்னைக்கு வரவேண்டும் என்ற நினைவு தோன்றியது. ஆனால் சுவாமிகள் இதற்கு முன்னர்ச் சென்னையை ஒரு போதும் கண்டதில்லை. முன்பின் அறியாத இடமாதலால், இங்கு உதவி செய்வார் எவரும் இல்லாததினால் சிறிது வருத்தப்பட்டு வேலேந்திய விமலா ! மயிலேறிய மன்னா ! இனி யான் செல்லும் நகரம் எவ்வாறு இருக்குமோ என்று கூறி முருகப் பெருமான் திருவருளைச் சிந்தித்து இரயில் ஏறினார்.

வண்டியும் மறுநாள் காலை சென்னைக்குச் சுவாமிகளைச் சேர்ப்பித்தது. எழும்பூர் இரயில் நிலையத்திற்கு வந்தவுடன் ஒருவர் அங்கு வந்து நம் குருநாதர் பாம்பன் சுவாமிகளுடன் மிக்க அளவளாவி மகிழ்ந்தார். அவரைத் தம்முடன் அழைத்துச் சென்னை வைத்தியநாத முதலியார் தெருவில் 41வது எண்ணுள்ள வீட்டிற்குள் விட்டுச் சென்றார்.



# பொன்மழைத்தாயே வருக

## (கனகதாரா தோத்திரம்)

### வெண்பா

- கவிஞர் சீ. சோதி
உதவி ஆணையர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
திருநெல்வேலி

1. தமலா மரஞ்சூழ் தளிர்வண்டு என்ன
நிமலன் திருமேனி நேர்ந்த - கமலவிழி
தேவி ! திருவே ! திருமகளே ! தாமரை
மேவி உறைபவளே ! பார்.

2. நீலவண்ணப் பூமேல் நெடிதாடும் வண்டு
போல்
மாலவண்ணன் மேனி திகழுறும் - கோலமாதே
பாற்கடற் தோன்றிய பைம்பொன்னே !
லட்சுமியே
ஆரமுதே எங்களைப் பார்.

3. இந்திர போகமும் ஈண்டரசபோகமும்
தந்திடுவான் கண்ணன் விளையாட்டாய் -
வென்றிருந்தான்
அந்த முரனை! ஹரி என்னும் கண்ணன் மேல்
வந்திருக்கும் தேவியே பார்.

4. திருமால் பெருவழகில் திக்கித் திணறும்
திருமகளே! தேவி! திருவே - ஒரு முறை
என்னைக் கருணையிற் காண வருவாயே
அன்னையே! என்னையும் பார்,

5. கௌத்துப மணியெனக் காட்சி அளித்து
மதுஎனும் தீயோனை மாய்த்து - மதுஎன
மாயவன் உளத்தில் மலர்ந்தவளே தெள்ளமுதே!
தாயவளே! சீதேவி பார்.

6. கார்முகில் மேனியிற் காணும்மின்
னற்கொடியே
பார்க்கவச் செல்வியே பார்த்தருள்வாய் -பாரின்
உயிர்க்கெல்லாம் தாயே! பரந்தாமன் தேவீ!
உயர்வளிப்பாய் என்றும் உவந்து.

7. மதுஎனும் தீயோனை மாய்த்த மலர்க்கண்
மதன்எனும் சீரோனை வளர்கண் - எது எது
இன்பவளம் ஈயும்கண் னோஅத்திருக்கண்ணே
என் அகமும் நோக்கட்டும் ஈந்து.

8. திருமகள் கண்கள் திறக்கட்டும் இந்த
வறுமைப் பறவைமேல் செல்வக் - கருணை
மழைபொழி யட்டும்ஃ கனகதாரா தன்னால்
அழிக வினைகளின் வேர் .

9. உன் கருணை மாமழை ஊட்டந் தரும்; தேவி
உன் கருணைப் பார்வையால் ஆட்சிவரும் -
பொன்மழை
தந்தவளே போற்றி போற்றி தாயே
நற்பாற்கடலில்
வந்தவளே தாராய் வரவு.

10. தவமும் தெரியேன்; தமியேன் தழைக்க
அவியும் சொரிந்திலேன் வேள்வி; - புவியே
புகழும்என் பொன்மழைத் தாயே ! வருக
நிகழும் வளமே நிலைத்து.

---

இந்த இல்லத்திற்கு வந்தபோது பங்காரம்மை என்ற ஒரு மூதாட்டி இருந்தார். அந்த அம்மையார் முருகப் பெருமானிடம் தணியாத பக்தி உடையவர். அறுமுகனின் அடியாரைக் கண்டார். அன்பு கொண்டு உபசரிக்கும் அருமையான மூதாட்டி. இந்தப் பெருமை வாய்ந்த அம்மையார் ஒரு நாள் ஒரு கனவு கண்டார். அந்தக் கனவிலே நமது குருநாதர் பாம்பன் சுவாமிகள் - அவருடைய தவக்கோலம் மாட்சி மையுற்ற தவக்கோலத்தைக் கண்டார். மேலும் அந்தப் பெரியவர் ''எனக்கு உணவு தருக!'' என்று அம்மையாரை வேண்டி மறைந்தார். அந்த தவக்கோலமுடையவர் யாரோ என்று உறக்கம் கலைந்து அம்மையார் மிகவும் கவலை கொண்டார்.

அதேபோல மறுநாள் காலையில் தாம் இரவில் கனவில் கண்ட காட்சியிலே வந்த முனிவர் தமது இல்லம் வரக் கண்டார். மகிழ்ச்சிப் பொங்க சுவாமிகள் முன் பணிந்து எழுந்தார். உள்ளே அன்புடனும், பய பக்தியுடனும் அழைத்துச் சென்றார். தன்னுடைய மகன் கோவிந்தராசமுதலியாருக்கும் மருமகள் ஜெகதம்மாள் என்ற இருவருக்கும், அங்குள்ள அனைவருக்கும் தாம் கனவில் கண்ட அந்த நிகழ்ச்சிகளை விரிவாக எடுத்துரைத்து முருகப் பெருமான் திருவேலைப் போற்றினார். மேலும் சுவாமிகளைத் தமது இல்லத்திலேயே இருக்க வேண்டினார்.

நமது குருநாதர் அவருடைய வேண்டுகோளை அங்கீகரித்து அங்கேயே எழுந்தருளியிருந்தார். செவ்வேள் திருவருளாணைப்படி அந்த அம்மைக்குத் திருவாறெழுத்தை உபதேசித்து அருளினார். அந்த இல்லத்தில் உள்ள அனைவரும் முருகப் பெருமானுக்கே ஆட்பட்டவராயினர்.

சில நாட்கள் கழிந்தன. அந்த மூதாட்டியின் தியானத்தில் மயில்வாகனர் முருகப் பெருமான் காட்சி தந்தார். அவருடைய ஆணைப்படியே காஷாய தாரணத்தை வேண்டிப் பெற்றார் இந்த மூதாட்டி. அதுமுதற் கொண்டு நமது குருநாதர் பாம்பன் சுவாமிகளிடம் அளவில்லாத ஆசிரிய பக்தி கொண்டு தொழுபவரானார். சென்னை சென்ற நமது குருநாதர் அனுபவங்கள் விரித்துக் கூறிடின் நமது நெஞ்சமெல்லாம் நெகிழ்ந்து உருகும். சுவாமிகளுக்குச் சீடர்கள் பெருகினர். அவருடைய புகழ் இமய மலைபோல் உயர்ந்தது. அவருடைய அருள் மல்லிகை மலர் போல் மணம் வீசியது. சுவாமிகள் சென்னைக்கு வந்து தன்னுடைய இறுதி கால அருள் வாழ்க்கைத் தொடர்ந்தார்; சிறந்தார்.

# தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை - கடுவெளிச் சித்தர்

முனைவர் இரா. செல்வக்கணபதி



தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரையில் ஒருவராகத் திகழ்பவர் கடுவெளிச் சித்தர். பதினெண் சித்தர்கள், நவநாத சித்தர்கள் என்ற பட்டியல்களில் கடுவெளிச் சித்தர் இடம் பெற்றிலர். மேற்குறித்த இரண்டு தொகைச் சுட்டுக்களும் உருவானதற்குப் பிற்பட்ட காலத்தவராக இவர் இருந்திருக்க வேண்டும்.

சித்தர் வரலாறு அறியாத தமிழ் மக்களில் பலரும்.

**''நந்த வனத்திலோர் ஆண்டி - அவன்**
**நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்**
**கொண்டு வந்தானொரு தோண்டி - அதைக்**
**கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி''**

என்ற பாடலை அறிந்தேயுள்ளனர். ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'', ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' முதலாகிய பல தொடர்களை அறிந்திருக்கும் தமிழர்கள் அவை முறையே கணியன் பூங்குன்றனாரும், திருமூல நாயனாரும் வழங்கிய கொடைகள் என்பதை அறியார். மேற்குறித்த 'நந்த வனத்திலோர் ஆண்டி' என்று தொடங்குவன முதலாய 34 கண்ணிகளாக அமைந்த 'ஆனந்தக் களிப்பை' வழங்கிய சித்தர் பெருமான் கடுவெளிச்சித்தர் ஆவார்.

அகன்று - பரந்து விரிந்த வான்வெளியைப் பரவெளி என்று குறித்தல் சமய மரபு; மன, வாக்குகளுக்கு எட்டாதது பரவெளி. விஞ்ஞானமும், மெய்ஞ்ஞானமும் இன்னும் பரவெளியை முற்றாகக் கண்டு காட்டியதில்லை. சித்தர் வரலாற்றுத் தரவுகளை முதன் முதல் தேடித் தொகுத்துப் பதிவுச் செய்தவர் திரு. ஆ. சிங்காரவேலு முதலியார். இவர் தொகுத்து 1910 இல் வெளியிட்ட தமிழ் உரைநடைக் கலைக்களஞ்சியம் 'அபிதான சிந்தாமணி'. இதனுள் ஆசிரியர்

> ''தம் ஆன்மானுபவத்தைப் பிறரும் அறிந்து அவ்வழி நடந்து சீர்பெறப் பிரபஞ்சத்தைச் சுத்த வெளியென்று கண்டு இப்பெயர் அடைந்தவர் என்று தெரிகிறது''

என்று குறித்துள்ளார். கடுவெளிச் சித்தர் பாடல் தொகுப்பில் 22 வது ஆனந்தக்களிப்பில்

**''எட்டும் இரண்டையும் ஓர்ந்து மறை**
**எல்லாம் உனக்குள்ளே ஏகமாய்த் தேர்ந்து**
**வெட்ட வெளியினைச் சார்ந்து - ஆனந்த**
**வெள்ளத்தின் மூழ்கி மிகக் களி கூர்ந்து-''**

என்று பாடுகின்றார். இதில் 'வெட்ட வெளியினைச் சார்ந்து' என்ற தொடர் ஒன்று காணப்படுகிறது. இதுவரை பரவெளி பற்றிய குறிப்பேதும் இவர் பாடல்களில் இல்லை. எனவே இது ஒன்று பற்றி மட்டும இவர் இப்பெயர் பெற்றார் எனக் கருதக் கூடவே இல்லை. வேறு பாடல்கள் காலவெள்ளத்தில் கரைந்து போயிருத்தல் கூடும்.

சிவநெறியில் இறைவன் பரம கருணையாளன். ஆணவ மலத்துடன் கட்டுண்டு கிடக்கும் உயிர்களின் ஈடேற்றத்திற்காக இறைவன் அவற்றுக்குத் 'தனு' எனப்படும் உடலை வழங்குகிறான்.

ஆனால், பிறப்பெடுத்த உயிர்கள் உடலோம்பி வாழ்ந்து மலநீக்கம் பெற்று இறைவன் சேவடிகளில் சார இயலாது. உலக இன்பங்களில் சிக்குண்டு, உடல் கெடச் செய்து அழிகின்றன. 'நந்தவனத்திலோர் ஆண்டி' என்ற பாடல் வழி கடுவெளிச் சித்தர் உரைக்கும் கருத்து இதுவேயாகும். சிவன் ஏவலில் உலகைப் படைக்கும் பிரம்மனைத் 'தட்டான்' என்று திருமூலர் குறித்தார். சித்தர் 'குயவன்' எனக் குறிக்கிறார். நாலாறு மாதம் என்பது கூட்டல் ; பத்து மாதம் என்பது கருத்து.

**'உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே'**

**'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்'**

என்றும் திருமூலர் குறித்தார். உடம்புக்கும் - திருவோட்டுக்கும் சிலேடைப் பொருள்பட, தெய்வச்சேக்கிழார், திருநீலகண்டத்துக் குயவனார் வரலாற்றில், உடம்பு என்பது

**''தன்னை ஒப்பரியது தலத்துத் தன்னுழை**
**துன்னிய யாவையும் தூய்மை செய்வது**
**பொன்னினும் மணியினும் போற்ற வேண்டுவது''**

என அறிவுறுத்திச் சென்றார். திருமூலர், சேக்கிழார் நெறியில் கடுவெளிச் சித்தரின் சிந்தனை உருபெற்றிருக்கலாம்.

ஒரு பல்லவியும், முப்பத்து நான்கு சரணங்களும் கொண்டன ஆனந்தக் களிப்பு என்னும் இச்சித்தர் கவிதை. பல்லவியைக் கடுவெளிச்சித்தர்

*''பாபம் செய்யாதிரு மனமே - நாளைக்*
*கோபம் செய்தே எமன் கொண்டோடிப் போவான்*
*பாபஞ் செய்யாதிருமனமே''*

*என்று அமைத்துப் பாடுகின்றார்.*

அறஞ்செய்து - பாபம் தவிர்க்க வேண்டித் தொடங்கும் ஆனந்தக்களிப்பில் அற்புதமான பல கண்ணிகள் இடம் பெற்றுள்ளன. சூது, பொய், மோசம் செய்தால் - செய்தவன் சுற்றம் கெட்டழியும் ; உடம்பு என்பது நீர் மேல் குமிழ் போல் நிலை இல்லாதது; மண், பொன், பெண் எனும் மூவாசைகளை விட்டு ஒழி; பிறரிடம் சென்று பிச்சைகேட்டு இரவாதே; வேத, வேதாந்த நெறிகளிலே பயணம் செய்; ஞான குழுவினைப் போற்றி அவர் சொல்வழி நில்: உடல் என்பது ஐந்து பொறிகள் என்னும் காட்டு மரங்கள் சூழ்ந்த காடு; அன்பு எனும் நல்ல மலர் தூவி பரமானந்தம் என்ற தேவியின் தாளை அடை என்றெல்லாம் கடுவெளிச் சித்தர் மனித குலத்திற்கு நன்னெறி பல புகல்கின்றார்.

*''எட்டும் இரண்டையும் ஓர்ந்து மறை*
*எல்லாம் உனக்குள்ளே ஏகமாய்த் தேர்ந்து*
*வெட்ட வெளியினைச் சார்ந்து - ஆனந்த*
*வெள்ளத்தின் மூழ்கி மிகக் களி கூர்ந்து-''*

வாழ்வாங்கு வாழ்க என வழிகாட்டி அருளுகின்றார்.

'சித்தர் போக்குச் சிவம்போக்கு' என்பது பழமொழி. கடுவெளிச் சித்தர் சிவநெறி நின்றவர். இறைநெறியினும் மேலாக அறநெறி போற்றி வாழ அறிவுறுத்தியவர். இம்மை வாழ்வில் சிறந்து வாழ்தல் வேண்டும் என்று அறிவுறுத்தியவர். அவர் கவிதைகளில் தாம் எத்தனை எத்தனை அரிய அழகிய தொடர்கள்:

*'நல்ல வழிதனை நாடு'*

*'வல்லவர் கூட்டத்தில் கூடு'*

*'மெய்ஞ்ஞானப் பாதையில் ஏறு'*

*'கூட வருவது ஒன்றில்லை'*

*'பாரில் உயர்ந்தது பத்தி'*

*'பொய்வேதம் தன்னைப் பாராதே'*

*'வைதாரைக் கூட வையாதே'*

*'சிவமன்றி வேறே வேண்டாதே'*

*'போற்றும் சடங்கை நண்ணாதே'*

*'கள்ள வேடம் புனையாதே'*

இத்தகு நல்லறிவு கொளுத்தும் பல அரிய தொடர்கள் கடுவெளிச் சித்தர் கவிதைகளிலே நிறைந்து காணப்படுகின்றன.

கஞ்சா என்ற ஒரு வகைச் செடியின் இலைகளைக் கொண்டு புகை பிடித்து மயங்கும் ஒரு சமூகம் சித்தர் காலத்தில் நிலவியிருந்திருக்க வேண்டும். மயக்கும் கள் குடிக்கும் கூட்டமும் வாழ்ந்திருந்த காலம் போலும்.



## கார்த்திகை சோமவார சங்காபிடேகச் சிறப்பு

அனைத்துச் சிவாலயங்களிலும் கார்த்திகை சோமவாரங்களில் சங்காபிடேகம் சிறப்புற நடைபெறுகின்றது.

புனிதமுடைய பொருளாய்ப் பூசனைக்குப் பயன்படும் சங்குகளால் புனிதத் தீர்த்தம் முகந்து மந்திரங்கள் ஓதி சிவபெருமானுக்குத் திருமுழுக்காட்டுவது பக்தர்களுக்கு அற்புதத் தரிசனமாகும்.

சங்காபிஷேகம் கண்குளிரக் கண்டு இறைவனை வழிபடுவதால் சகல குற்றங்களும் நீங்கிப் பக்தர்கள் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு பெறுகின்றனர்.

*''கஞ்சா புகைப்பிடி யாதே - நெறி*
*காட்டி மயங்கிய கட்குடி யாதே''*

என எச்சரிக்கிறார். இறைவன் என்பவன் தண்ணொளி மிக்கவன். அன்புடையார் இதயத்தில் குடி புகுந்து வாழ்பவன். மிக்க அடிமைத்திறம் கொண்ட அடியார்களுக்குத் தானும் தொண்டு பூணும் எண்ணம் மிக்கவன். தன்னைப் போற்றி உரைப்பார்க்குச் சிவலோகம் முதலான உயர் பதவிகள் வழங்குவான்.

*''எங்கும் சுயம்பிரகாசன் - அன்பர்*
*இன்ப இருதயத் திருந்திடும் வாசன்*
*துங்க அடியவர் தாசன் - தன்னைத்*
*துதிக்கிற பதவி அருளுவான் ஈசன்''*

இவ்வாறு பாடல் நெறி, குறிப்பிடப்பட்டுள்ள சில செய்திகள் சிலவகைத் தொடர்களை ஆளுதல் முதலியவற்றை ஒப்ப வைத்து ஆராய்ந்தால் இக் கடுவெளி சித்தர் 15 ஆம் நூற்றாண்டினராதல் கூடும் என அறிய முடிகிறது.

இவர் பாடியனவாக வேறு நூல்களோ பாடல்களோ கிடைத்தில. இவர் வரலாறு குறித்து ஒன்றும் தெரிந்திலது. அறநெறிக் கருத்துக்களைச் சைவ மரபுக் கருத்துக்களோடு இணைத்துச் சந்தக் கவிதை தந்தவர் இவர் என்றே தெரிய வருகிறது.

# திருவரங்கனைக் கண்ட திருக்கண்கள்

- திருமதி பத்மாவதி, பி.எஸ்.ஸி., எம்.எட்.,



திருப்பாணாழ்வார் கார்த்திகை ரோகிணியில் திருமாலினது ஸ்ரீவத்ஸத்தின் அம்சமாய், உறையூரில், ஓர் கழனியின் கண் நெற்பயிரிடமாக அவதரித்தார். அவ்வழியே வந்த பாணர் ஒருவர் இத்தெய்வீகக் குழந்தையைக் கண்டு, எடுத்து, தம் மனைவியிடம் கொடுத்தார். அவ்வம்மையாரும் இவரைப் **பாணர்** என்று பெயரிட்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்.

இவர் திருமால் அருளால் தோன்றியவர். ஆதலால் இயற்கையிலேயே உலகப்பற்று அற்று, எம்பெருமானுடைய திருவடித் தாமரைகட்குத் தம் மனதைச் செலுத்தி, தாம் வளரும் குடியினை நினைத்து, காவிரிக்கு அப்பால் நின்று தினமும் அரங்கனைப் பாடி வந்தார்.

பெருமாள் எடுத்த தசாவதாரத்தில் ஒன்பதாவதாகத் தோன்றியவர் கிருஷ்ணன். அபிநவ தசாவதாரத்தில் ஒன்பதாவதாகத் தோன்றியவர் நம் திருப்பாணாழ்வார். இருவரும் ரோகிணி நட்சத்திரத்தில் அவதரித்தவர்கள். கண்ணன் குழலூதி விண்ணோரையும் மண்ணோரையும் மயக்கினார். திருப்பாணாழ்வாரோ கானம் செய்து, அரங்கனையே, மயக்கித் தன்னை எம்பெருமானே அழைக்கும்படி செய்தவர்.

**நம்மாழ்வார் தமது திருவாய்மொழியில் இசைகாரர் என்று கூறுவது இவருக்குப் பொருந்தும். ''வாய்த்த புகழ் பாணர்'' என்று ஸ்ரீமந் மணவாள மாமுனிகளும் ''பாண்பெருமாள் நம் பாணநாதன்'' என்று ஸ்ரீவேதாந்த தேசிகரும் இவரைப் போற்றி யுள்ளனர்.**

அரங்கனை இவர் இவ்வாறு பாடுகையில் ஒரு நாள் திருவரங்கச் செல்வனுக்குத் தீர்த்த கைங்கர்யம் செய்கிற லோகசாரங்கர் என்னும் அந்தணர் தலைவர், தீர்த்தம் கொண்டு வரப் பொன்னித் துறையை அடைந்தார். கண்டார் பாணரை; அருவருப்புடன் ''எட்டச் செல், எட்டச் செல்'' என்றார்பலமுறை.

பாணரோ இவ்வுலகத் தொடர்பை மறந்து இறைவனையே நினைந்து பாடிக் கொண்டிருந்ததில் தம்மை மறந்திருந்தார்.

''என்னே இப்புலையன்! அந்தணர்கள் வருவார்கள், நாம் இங்கு இருந்தால் தகுமோ?'' என்று எண்ணாமல், இங்கு வந்து இருந்ததோடு அன்றி நாம் கை தட்டிக் கூவி, அப்பால் செல் என்று கூறியும், அசையாமல் நிற்கின்றானே! இவன் என்ன செவிடனா ! அன்றி இவன் சொல்லை நாம் என்ன கேட்பது என்று நிற்கின்றானோ ? என எண்ணி ஒரு கல்லை எடுத்து வீசினார். அது பாணப் பெருமானுடைய நெற்றியில் பட்டு உதிரம் பெருகச் செய்தது. இதனால் அச்சீரிய ஞானச்செல்வர் தெளிவுற்று, முனிவர் எதிர்புறம் நிற்பதைக் கண்டு மனமும் உடலும் நடுங்கி, அவ்விடத்தினின்று சென்று விட்டார்.

பிறகு லோக சாரங்க முனிவர் காவிரியில் நீர் முகந்து திருவரங்க நாதன் முன் சென்றார். அப்போது திருவரங்கநாதன் நெற்றியினின்று செந்நீர் பெருகி வந்தது கண்டு அவர் வருந்தினார். அன்றிரவு இறைவன் அவர் கனவில் தோன்றி, ''நீர் நாளை காலை நம் அன்பரான பாண் பெருமாளை இழிவாக நினையாமல், அவரை உம் தோள்களில் எழுந்தருளப் பண்ணிவாரும் !'' என்று நியமிக்க அவர் அவ்வாறே செய்து பேறு பெறக் கருதி, அத்திருப்பதியில் உள்ள யாவருக்கும் தெரிவித்து, அவர்களுடன் பாணர் வழக்கமாக நின்று பாடும் இடத்துக்குச் சென்று, அவர் திருவடிகளில் தெண்டனிட்டு பெருமாளின் கட்டளையைக் கூறினார்.

பாணரோ தம் சாதி இழிவைச் சொல்லி மறுத்திட்டார். அப்பால் முனிவர், அது பகவத் நியமனம். தேவரீர், அதனை மறுத்தல் ஆகாது என்று கூற, பாண்பெருமான், நம்பெருமாள் திருவுள்ளம் அஃதாயின் அடியேன் அதனை மறுத்துக் கூறுதல் கூடுமோ? என்று வாளா இருந்தார்.

லோகசாரங்க முனிவர் மகிழ்ச்சி கொண்டு, பாண் பெருமாளைத் தம்முடைய தோளில் ஏற்றிக் கொண்டு, தம்முடன் வந்த மறையவர் சூழச் சென்று திருவரங்கநாதன் முன்னிலையில் விட்டனர்.

பாணர் பெருமாள் திருவரங்க நாதனுடைய அழகிய வடிவினைக் கண்டு, பிறவிக் குருடன் கண் பெற்றார்போல பெருமகிழ்ச்சி அடைந்து,

கண்களினின்று அருவி என நீர் பெருக நின்றார். அவர் மனம் முதலில் திருவரங்க நாதனுடைய திருவடியிலே செல்வதாயிற்று.

ஆதலின் அவர் அமலன், ஆதிபிரான் என்று தொடங்கி முதலில் திருவடியைப் பாடினார். அப்பாசுரம் முதலாகப் பத்து பாசுரங்களைப் பாதாதி கேசமாலையாகப் பாடி, பிரணவத்தில் உள்ள அகரம், உகரம், மகரம் என்னும் மூன்று திரு எழுத்துக்களுள் முதல் எழுத்தாகிய அகரத்தை முதற் பாசுரத்தின் முதலிலும், 2ம் எழுத்தாகிய உகரத்தை இரண்டாம் பாசுரத்தின் முதலிலும், 3ம் எழுத்தாகிய மகரத்தை 3ம் பாசுரத்தின் முதலிலும் முறையே அமைத்துப் பாடினார்.

அடியார்க்கு அவரை ஆட்படுத்தியவனும், திருமலையில் உள்ளவனுமான அரங்கனின் திருவடிகள்அவர்கண்களுக்கு இலக்காயின.

**''அமலனாதிபிரான் அடியார்க்கு என்னை ஆட்படுத்த**
**விமலன் விண்ணவர் கோன் விரையார் பொழில்வேங்கடவன்**
**நிமலன் நின்மலன் நீதிவானவன் நீண்மதிளரங்கத்தம்மான்திருக்**
**கமலபாதம் வந்து என் கண்ணினுள்ளன ஒக்கின்றதே''**

கரதூஷணர்களை முடித்த காகுத்தனுமான திருஅரங்கநாதனின் திரு பீதாம்பரத்தின் மீது தம் சிந்தனை சென்றது என்கிறார்.

மகிழ்ச்சியுடன் கூடிய மனத்தை உடையவனாய் மூவுலகங்களையும் அளந்தவனாய், பெரிய திருமுடி உடையவனாய் முற்காலத்தில் எதிர்த்து வந்த அரக்கர்களை உயிர் வாங்கிய ராமபிரானாய் இருப்பவன் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளி இருக்கும் அரங்கன் திருவரையில் சாத்திய பீதாம்பரத்தின் மேல் தன் நினைவு சென்றது என்கிறார்.

மந்திகள் பாய்கின்ற வேங்கடமலையில் வானவர்கள் துதி செய்ய நின்றவனைத் திரு அரங்கனின் அந்தி போல் நிறத்துப் பீதாம்பரத்திலும் திருநாபிக் கமலத்திலும் தம் உள்ளம் நின்று உலாவு கின்றது என்கிறார்.

இலங்கைக்கு மன்னனான இராவணனின் பத்து தலைகள் உதிருமாறு கணையைத் தொடுத்தவனும், குளிர்ந்த கடல் நிறமுடையவனும் ஆன அரங்கனின் உதர பந்தம் என் உள்ளத்துள் நின்று உலாவுகின்றது என்கிறார்.

பிறையைச் சிரசில் அணிந்த சிவபிரானுடைய பாதகத்தைத் தீர்த்தவனும், வண்டுகள் வாழும் பொழில் நிறைந்த அரங்கத்தில் கண் வளர்பவனும், எல்லா அண்டங்களையும் உடையவனுமான என் அரங்கனின் திருக்கழுத்தன்றோ என்னைச் சம்சாரத்தினின்றும் உய்யச்செய்தது என்கிறார்.

திருவாழி திருச்சங்குகளை உடையவனாய், திருத்துழா மாலையால் முடியினில் அலங்கரிக்கப் பட்டவனாய் திருவரங்கத்தில் அனந்தாழ்வான் மீது பள்ளி கொள்ளுபவனாய், நம் போன்றவர்களும் காணக்கூடிய அரங்கன் வாயின் அழகிற்கு இணை கிடையாது என்கிறார்.

பவள வாயைக் கண்டவர் அடுத்து அவனது கண்களைக் காண்கிறார்.

இரணியனின் சரீரத்தைக் கிழித்தவனும், தேவர்கட்கு அரியவனும், காரண பூதனும், தூய்மையான அழகிய மணவாளனுடைய திருமுகத்தில் கறுத்த நிறமுடையவனாய் விசாலமாய் செவ்வரி படர்ந்து இருப்பவையாய், (காது வரை) நீண்டிருப்பவையாய் பெருமை பொருந்திய கண்கள் என்னை மயக்கி விட்டனவே என்கிறார்.

**''கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய் உண்ட வாயன் என்னுள்ளம் கவர்ந்தானை**
**அண்டர் கோனணியரங்கன் என்னமுதினைக்**
**கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே''**

என்று இப் பிரபந்தத்தைத் தலைக் கட்டுகிறார்.

இவர் திரு நட்சத்திரம் கார்த்திகையில் ரோகிணி.

அனைத்து ஆழ்வார்களும் பல பாடல்களைப் பாடியிருப்பினும் திருப்பாணாழ்வார் நாவன்மை யால் பத்து பாடல்களில், சேவித்துள்ள எல்லா ஆழ்வார்களிலும் இவர்தான் பெருமாளை எப்படிச் சேவிக்க வேண்டும் (பாதாதிகேசம்) என்று பாடி அளித்துள்ளார்.

இவ்வாழ்வாரைப் போலவே நாமும் அவன் திருமேனி அழகில் ஈடுபட்டு அவன் பால் நம் சிந்தையைச் செலுத்தி வாழ்க்கை எனும் பெரும் கடலைக் கடந்து அவன் தாள் பற்றிப் பேறு பெறுவோமாக!

## இளையான்குடி ஈசர் கோயில்



சிவகங்கை மாவட்டத்திலுள்ள ''இளையான்குடி'' ஊரில் இளையான்குடி மாறநாயனார் வாழ்ந்திருந்த வீடும், கொல்லை முதலானவையும் இன்றும் உள்ளன. இங்குள்ள சிவன் கோயில் இளையான்குடி மாற நாயனார் புகழை அனைவருக்கும் உணர்த்தும் வகையில் **''இளையான்குடி ஈசர் கோயில்''** எனவே வழங்கி வருகின்றது.

# வைகுண்ட ஏகாதசி

எம்.என். ராஜா



அவன் ஒரு வேடன். அவன் கொண்ட துர் நடத்தையின் காரணமாக அவனைப் பிடித்த ரோகம், சரீரத்தில் ஏற்பட்ட கொடிய உபாதைகளைத் தாங்க முடியாமல் மனம் நொந்து தன் மனைவியுடன் கால் போன போக்கில் நடந்து போகின்றான்.

பசி, தாகம், மயக்கம்; யாரும் அவர்களுக்கு மனம் இறங்கி அன்னம் இடுவார்களில்லை. வழியில் ஒரு தாமரைத் தடாகத்தில் பூத்திருந்த சில தாமரைப் பூக்களை ஏனோ அவன் பறித்துக் கொண்டு செல்கின்றான். இருட்டி விட்டது.


மிகவும் களைத்துப் போன வேட தம்பதியினர் இரவைக் கழிப்பதற்கு ஒரு வீட்டு திண்ணையில் வந்து தங்குகின்றார்கள். அது ஒரு நாட்டிய மகளின் வீடு. இரவில் அவர்களுக்குத் தூக்கமே வரவில்லை. ஏனென்றால், வீட்டின் உட்புறத்தில் இருந்து கமகம வென்று புஷ்பம், அகில், தீபம் இவைகளின் உயர்ந்த நறுமணம் வீசுகிறது!

மங்கலகரமான இசைகாதுகளை நிரப்புகிறது. எழுந்து மெல்ல உள்ளே எட்டிப்பார்க்கிறான். அந்த வீட்டின் உட்புறத்தில் ஓர் உயர்ந்த வைர வைடூரியங்களால் இழைக்கப்பட்ட மஞ்சத்தில் மகாவிஷ்ணுவின் பதுமை புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டு இருக்கிறது. அதன் அருகில் அமர்ந்திருந்த நாட்டிய மகள் பயபக்தியுடன் பாடிக்கொண்டிருக்கின்றாள்.

இவ்வற்புதமான காட்சியினைக் கண்ட அவர்கள் மெல்ல உள்ளே நுழைந்து தாங்கள் கொண்டு வந்திருந்த புஷ்பங்களை நாட்டியமகளிடம் கொடுக்க அவளும் களிப்புடன் வாங்கி இறைவனிடம் சமர்ப்பிக்கின்றாள்.

பட்டினியால் வாடினாலும், இந்த காட்சி அவன்துன்பமெல்லாம் பறந்து போகும்படி செய்து விடுகின்றது! இரவு முழுவதும் நடந்த அந்த அமைதியான பூஜையில் மனம் லயித்திருந்த அவர்களிடம் விடிந்ததும் ''எதிரில் இருக்கும் குளத்தில் குளித்து விட்டு வாருங்கள், பிரசாதம் தருகிறேன்'' என்று நாட்டிய மகள் கூறுகிறாள்.

பிறகு துளசி தீர்த்தமும், பொங்கலையும் சாப்பிடுகின்றனர். இந்த நிகழ்ச்சிகள் நடந்த சில நாட்களுக்குப் பிறகு வேட தம்பதியினர் இறந்து விடுகின்றனர். ஆனால் என்ன ஆச்சர்யம்?



வேடன் மறுபிறவியில் புஷ்பவாகனன் என்னும் அரசனாகவும், அவன் மனைவி அரசியாகவும் பிறக்கிறார்கள். அவன் பெயருக்கேற்ப புட்பங்களால் அமைந்த விமானம் ஒன்றைப் பெற்றிருந்தான்.

ஒருசமயம் அவன் சபைக்கு ஒரு மகரிசி விஜயம் செய்தார். அவரைத்தக்க மரியாதைகளுடன் வரவேற்று உபசரித்தான். முனிவர் மகிழ்ச்சியடைந்து ''மன்னா! நீமுன் பிறவியில் ஒரு வேடனாகப் பிறந்தாய். ஒரு நாள் தாமரை மலர்களை அன்புடன் நாட்டியமகள் செய்த ஏகாதசி பூஜைக்கு அளித்து அன்று முழுவதும் கண்விழித்திருந்து, மறுநாள் காலை அவள் அளித்த அருட் பிரசாதத்தை உண்டனை. ஆகையால் நீஏகாதசி விரதத்தை முழுமையாக அனுட்டித்தாக ஸ்ரீமந் நாராயணனே ஏற்றுக் கொண்டுள்ளார். அதன் பலனாகத் தான் இன்று உனக்கு அரிய பதவி கிடைத்துள்ளது. புட்பங்களைக் கொண்டு பகவானுக்கு அர்ச்சனை செய்ய உதவியதால் உனக்கு புட்பவாகனன் என்ற பெயரும், விமானமும் ஐஸ்வரியமும் சுகவாழ்வும் கிடைத்துள்ளன'' என்று முனிவர் கூறினார்.

மிகப் பழைய கல்பம் ஒன்றில் நடந்த இக்கதை பீஷ்மருக்கு புலத்தியர் கூறியகதையாகும்.

ஒரு வருடத்தில் மொத்தம் 25 ஏகாதசிகள் வருகின்றன. அதில் மார்கழி மாதம் தோன்றும் ஏகாதசியே மிகவும் விசேடமானது. அம்மாதத்தில் கிருட்டிண பட்சத்தில் வருவது மோட்சஏகாதசி' எனப்படும்.

**''கங்கையை விடச் சிறந்த தீர்த்தமில்லை,**
**விட்டுணுவைவிட உயர்ந்த தேவரில்லை.**
**தாயிற் சிறந்த கோயிலுமில்லை.**
**காயத்திரியை விட உயர்ந்த மந்திரமில்லை.**
**ஏகாதசியைவிட சிறந்த விரதமில்லை''**
என்று போற்றப்படுகின்றது.

பத்ம புராணத்தில் ஏகாதசியின் தோற்றம் குறித்து ஒரு கதை இருக்கின்றது. கிருத யுகத்தில் முரன் என்ற பொல்லாத அரக்கன் ஒருவன் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் மிக கொடுமைகளைக் கொடுத்து வந்தான். அவர்கள் யாவரும் மகாவிட்டுணுவிடம் போய் தங்கள் குறைகளைக் கூறினர்.

திருமால் 'பயப்பட வேண்டாம்' என்று சக்ராயுதத்தை எடுத்துக் கொண்டு

முரனுடன போர் புரிய புறப்பட்டார். போர் கடுமையாக நடந்து கொண்டிருக்கும் வேளையில் திருமால் சிறிது களைத்ததுபோல் காணப்பட்டார். ஆனால் போர்களத்தில் எங்ஙனம் களைப்பாறுவது?

உடனே மாயமாக பதரிகாச்சிரமம் சென்று ஒரு குகையில் படுத்துக் கொண்டார். முரன் அங்கும் போய் தொந்திரவு செய்து போருக்கு அழைத்தான்.

அவ்வமயம் திருமாலிடமிருந்து ஓர் அபூர்வ சக்தி, அழகிய பெண் வடிவில் தோன்றியது. அவள் 'முரனை நோக்கி ''அசுரேந்திர! என்னுடன் சண்டைக்கு வா'' என்று கூற, அம்முரன் அசடு வழிய பெண்ணாயிற்றே என்று அவளிடம் விளையாடிப் பொழுது போக்க விரும்பி அவளை நெருங்க முற்படுகையில் சக்தியின் 'ஹுங்காரத்தால்' அப்படியே எரிந்து சாம்பலாகி விட்டான்.

திருமால் நித்திரை கலைந்து எழுந்தார். தன்னிடம் இருந்து தோன்றிய மங்கையை ''ஏகாதசியே என்று கூப்பிட்டு உன்னை வழிபடுவோர்களுக்கு வைகுந்தம் அளிப்பேன்'' என்றார்.

இறைவன் எப்பொழுதும் விழித்துக் கொண்டிருக்கின்றார். அதனால் சகலஜீவ ராசிகளும் உறங்கி விழித்து உறங்கி வாழ்ந்து வருகின்றன. மகாவிட்டுணு ஏகாதசி தோன்றிய அன்று ஒரு நாள் உறங்கியதால், வருடம் முழுவதும் இரவில் உறங்கும் மானிடர்களாகிய நாமெல்லாம் அவருக்காக அன்றொருநாள் மட்டும் கண்விழித்து அவர் புகழைப்பாடுவது அவருக்கு நன்றி தெரிவிப்பது போலுமாகும்.

மேலும் எந்த ஒரு காரியத்தையும் இரவு கண் விழித்துச் செய்தோம் என்று சொல்வதில் சற்றுப் பெருமை அதிகமாகவே இருக்கின்றது. அது போல் மற்ற எல்லா விரதங்களையும் காட்டிலும் ஏகாதசியின் போது 36 மணி நேரம் தூங்காது, உண்ணாமல் ஹரியின் நாமத்தினையே கூறிக்கொண்டு பக்தி செய்தால் அதன் பெருமை, பலன் நிறைவு இவற்றை சொல்லுதற்கியலாது, மிக மிக விசேஷம். முக்கோடி ஏகாதசிகளை அனுட்டித்தால் உண்டாகும் பலன் அனைத்தும் ஒரே முறையாகக் கிடைத்து விடுகிறதாம்.


புராணத்தில் ருக்மாங்கதன் என்ற மன்னன் செங்கோல் தவறாது ஆண்டு வந்தான். அவருக்கு சொந்தமான் ஓர் அழகிய நந்தவனம் இருந்தது. உலகில் உன்ன பேரழகு வாய்ந்த பூக்களையெல்லாம் அங்கே அவர் பயிர் செய்து வந்தார்.

ஒரு சமயம் தேவேந்திரன் தனக்குப் பூக்கள் வேண்டுமென்று கருதியபோது ருக்மாங்கதனின் தோட்டத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு தேவ கன்னிகைகளை அவன் அனுப்பிப் பூக்களைக் கொணரச் செய்தான். இங்ஙனம் சிறிது நாட்கள் நடந்தன. மன்னரால் பூக்களைத் திருடுபவர்களைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

இந்நிலையில் ருக்மாங்கதன் அவைக்கு வந்த ஒரு முனிவர் 'மன்னா! நான் தரும் இந்த மூலிகைகளை உன் தோட்டத்தில் எரித்துப் பார். திருட்டு வெளிப்பட்டுவிடும்'' என்று சொல்லிப் போய்விட்டார். மன்னரும் அப்படியே செய்தார். எரிந்த அம்மூலிகைகளின் மகிமையால் தேவன்னிகள் ஸ்தூலமாக அரசன் கண்களுக்குப் புலனாகிவிட்டனர். அவர்கள் நடந்ததை விவரமாகச் சொன்னார்கள். பிறகு அரசரிடம் விடை பெற்றுக் கொண்டு சொர்க்கம் போக முற்பட்டதும் அவர்களால் போகமுடியவில்லை.

''தக்கவர் ஒருவர் தம் புண்ணியத்தை எங்களுக்குத் தானமாக வழங்கினால் நாங்கள் எங்கள் சூட்சும மேனியில் பற்றிக் கொண்ட ஸ்தூல அம்சங்களை உதறித் தள்ளிவிட்டு அமரலோகம் போக முடியும். ஐயோ அந்த புண்ணியத்தை யார் வழங்கப் போகின்றார்கள்'' என்று தேவமகளிர் தவித்தனர்.

அந்த சமயத்தில் ஒரு வண்ணாத்தி வந்து ''நான் வைகுண்ட ஏகாதசி விரதத்தை முறையாக அனுட்டித்து வருகின்றேன். இதற்கு ஏதேனும் புண்ணியம் உண்டென்றால் அந்தப் புண்ணியத்தை இங்கே இவர்களுக்கு வழங்குகின்றேன்'' என்று




கூறியதும் அந்த தேவகன்னிகள் சிறகு முளைத்து அவர்களிடம் நன்றி கூறிவிட்டு பறந்து போய் விட்டனர். வண்ணாத்திக்கோ இருமடங்கு புண்ணியம். வைகுண்டத்திற்குப் போய்விட்டாள்.

ருக்மாங்கத மன்னர் மிகவும் ஆச்சர்ய மடைந்தார். உடனே தன் நாட்டு மக்கள் அனைவரும் இவ்விரதத்தினைப் பூண்டு, நற்கதியடைய உத்திரவிட்டார். அவ்வளவுதான் எல்லோரும் சொர்க்கத்திற்கு வந்து விட்டனர். நாட்டில் புல் முளைக்க ஆரம்பித்துவிட்டது. சொர்க்கத்திலோ ஒரே நெருக்கம். தேவேந்திரன் ஒரு சூழ்ச்சி செய்தான்

மோகினியை பூவுலகிற்கு அனுப்பினார். மோகினி அன்றைய தினம் விரதமிருப்போரை மயக்கித் தூங்கவைப்பாள். மற்ற நாட்களில் தொடர்ந்து 2 நாட்கள் வரை தூங்காதவர்கள் கூட அன்றைக்கு மட்டும் குப்பை மேடாகிலும் சரி என்று கும்பகர்ணத் தூக்கம் போட தயங்கமாட்டார்கள். அதையும் மீறி பரமபத சோபனம் விளையாடி, ஆலயத்தில் ஒன்று கூடி பஜனை செய்து விரதத்தை செம்மையாக முடித்தால் அதன் பயனை நம்மால் அளவிட்டுக்கூறவே முடியாது.

ஒரு அற்புதமான புண்ணியகதை! இராம பிரானுக்கு மூதாதையரான அம்பரீசன் என்ற மன்னர் ஏகாதசி விரதத்தை மிகவும் விமரிசையாக வருடா



வருடம் அனுட்டித்து வந்தார். ஒருவருடம் விரத பூஜையை நிறைவு செய்யும் சில நாழிகைக்கு முன், அவர்தம் அரண்மனைக்கு துர்வாசமகரிசி வந்துவிட்டார். இதை கவனித்த மன்னர் விட்டுணுபூஜை முடிந்ததும் அவரை வரவேற்கலாம் என்று எண்ணிப் பூஜை முடிந்ததும் அவரை வர விட்டு துளசி தீர்த்தம் அருந்தப் போகும் சமயத்தில் தன்னை அவமதித்ததாக கருதிய முனிவர் 'பிடிசாபம்' என்று கூறினார்.

ஆனால், எதையும் கவனிக்காமல் விட்டுணு மேலேயே வயித்திருந்தார் அம்பரீசமன்னர். ஆனால் துர்வாசரின் செயலால் இறைவருக்கே கோபம் வந்துவிட்டது. தன் பக்தன் தன்னை மறந்து பூஜிக்கும் போது மற்றவர்களால் இடர் உண்டாகும்படி வைப்பாரா? தன் சக்ராயுதத்தை ஏவினார். பாய்ந்து வந்த சக்ராயுதத்தை கண்ட முனிவர் அலறிஅடித்துக் கொண்டு ஓடினார்.

ஒரு நொடி நேரம் நின்றால் கூட தலை அறுபட்டு விடும். நேராக சத்யலோகம் சென்று அயனாரை சரண் அடைந்தார். அவர் கைவிடவே சிவபெருமானிடம் சென்றார். அவரும் கவனிப்பதாகத் தெரியவில்லை. சக்கரம் பின்தொடர்ந்தது.

கடைசியில் மகாவிட்டுணுடமே சென்று பாதங்களில் விழுந்தார். அவரும் ''என்னால் ஒன்றும் செய்ய முடியாது. அம்பரீஷன் காலில் போய் விழு'' என்றார். தப்பித்தோம், பிழைத்தோம் என்று அம்பரீஷன் பாதங்களில் வந்து விழுந்தார் துருவாசர்.


''துர்வாசமுனிவரே! வாருங்கள் இப்பொழுது தான் ஏகாதசி விரதம் நிறைவு செய்தேன். இந்தாருங்கள் துளசி தீர்த்தம்'' என்று தீர்த்தம் கொடுத்தார் மன்னர். துர்வாசர் துளசி தீர்த்தத்தை வாங்கிய வாறே பின்புறம் திரும்பிப்பார்த்தார். அங்கே அவரை விரட்டிய சக்கரத்தைக் காணவில்லை. அவருக்குக் கண்களில் ஜலம் வந்து விட்டது. துர்வாசர் தன்னைக் காப்பாற்றி யமைக்காக தன் தவவலிமையில் பாதியைக் கொடுத்துவிட்டு இனி நான் இறைவன் பக்தர்களிடம் என் செருக்கை காட்டமாட்டேன் என்று கூறிச்சென்றார்.

இவ்வளவு உயர்ந்த ஏகாதசி விரதத்தை நாமும் கடைப்பிடித்து நாராயணனின் திருவருளைப் பெறுவோமாக.

## குளிக்க வந்த இடத்தில் சேற்றைப் பூசிக் கொள்ளலாமா ?


இப்பூவுலகில் முன்னை வினைகளைத் தொலைக்கவே பிறவி எடுக்கின்றோம்.

மேலும் மேலும் பாவங்களைச் செய்து வினைகளை அதிகப்படுத்திக் கொள்வது குளிக்க வந்த இடத்தில் சேற்றைப் பூசிக் கொள்வதைப் போன்றதாகும்.



# திருவிளையாடல் புராணம்

இரா. அரங்கசாமி



### நாகம் எய்த படலம்

அனந்தகுணபாண்டியனும் தந்தையைப் போன்றே சோமசுந்தரக் கடவுளையே வணங்கி வழிபட்டு, அவரது திருவைந்தெழுந்து மந்திரத்தை உச்சரித்து, விபூதி, உருத்திராட்சம் ஆகியனவே மெய்ப்பொருள் என்று தெளிந்தான்.

மன்னனிடம் தோன்றிய சிவபக்தி நாட்டு மக்களிடமும் பரவியது. நாடெங்கிலும் திருவைந்தெழுத்தின் அரிய ஒலியும், திருவெண்ணீற்றின் ஒளியும் பொலிந்து திகழ்ந்தன.

பாண்டியநாடு முழுவதும் சிவநேயமுற்றுத் திகழ்வதைக் கண்ட சமணர்கள் எண்ணாயிரவரும் மிகுந்த கோபமுற்றுப் பொறாமையினால் ஒரு மாபெரும் வேள்வியைச் செய்தனர்.

குகையிலிருந்து எழுந்தவனைப் போல், படமுடைய இருள்படர்ந்த வாயையும், வாயின் இருபக்கங்களிலும் இருநச்சுப் பற்களையும், ஊழித்தீயை உமிழ்வது போல நெருப்புப் பொறி பறக்கும் கண்களையும் கொண்ட, ஒரு பெரிய மலையைப் போன்ற தோற்றமுடைய அவுணன் ஒருவன், வேள்வியின் முடிவில் அந்த வேள்விக் குண்டத்திலிருந்து வெளிப்பட்டான்.

வந்தவன் சமணர்களை நோக்கி, ''வடவைத் தீயைப் போலக் கடுமையான பசி என்னை வருத்துகிறது, நீர் வேட்கையோ அளவு கடந்து வாட்டுகிறது. எனக்கு இடும்பணி என்ன'?' என்றான்.

''நீவிரைந்து சென்று பாண்டிய மன்னனையும் மதுரையையும் எடுத்து விழுங்கி விட்டு வருவாயாக!'' என்றனர்.

அதைக் கேட்ட அவன் மிகப் பெரிய கொடிய பாம்பின் உருவம் கொண்டு மதுரையை நோக்கிச் சென்றான். அவனது பெருமூச்சால் காற்றும் தன் வலிமையை இழந்தது. விழிகளுக்கு எதிர்ப்பட்ட கதிர்கள் கருகின, காடுகளும், சோலைகளும் தீப்பற்றி எரிந்தன.

குடிமக்களின் மூலம் செய்தி அறிந்த அனந்த குணபாண்டியன் ஒன்றும் தோன்றாமல் திருக்கோயில் சென்று சோமசுந்தரக் கடவுளை வழிபட்டு, சிவபெருமானிடம் அனுமதி பெற்று, அம்பும் வில்லும் எடுத்துக் கொண்டு மேற்குப்பக்க எல்லையை அடைந்தான்.

அங்கு பெரும் சினத் தீ சிந்தும் கண்களை யுடைய பாம்பு எதிரே வருவதைக் கண்டான். கையில் வில்லை எடுத்து நாணைப் பூட்டி அக்கினி முகக்கணையைத் தொடுத்து எய்தான். பாம்பு வடிவெடுத்து வந்த அரக்கன் அவற்றையெல்லாம் கடித்துத் தடுத்து நிறுத்தினான்.

முடிவாக அனந்தகுணபாண்டியன், மிகுந்த சினத்துடன் சோமசுந்தரக்கடவுளைச் சிந்தித்து, பிறை போன்றதொரு கணையை எடுத்து எய்தான்.

பாம்புருவில் வந்த அந்த அரக்கனைப் பாண்டியன் விடுத்த கணையானது வீழ்த்தி அவன் உடலை இரு துண்டுகளாக்கிச் சிதைத்தது. இடி போன்ற பெருங்குரல் எழுப்பியும், இரத்தமானது ஆறாகப் பெருக்கெடுத்து ஓடவும், அவனது உடல் பூமியிலே புரண்டது. அவன் வாயிலிருந்து பொங்கி வெளிவந்த கொடிய நஞ்சு மதுரை நகரம் முழுதும் பரவி, மக்களையும் மிருகங்களையும் அழிக்கலாயிற்று.

அனந்தகுணபாண்டியன் மிகவும் அஞ்சி, திருக்கோயிலை அடைந்து ஆண்டவனை வணங்கி அந்தக் கொடிய நஞ்சினை நீக்கியருளும் படி வேண்டினான். அருட் கடவுளாகிய சோம சுந்தரப் பெருமான் தம் திருச்சடை மீது அணிந்திருந்த இளம்பிறையின் அமுதத்திலிருந்து சிறிதளவு சிந்தச் செய்தார்.

அச்சிறிய துளியானது மதுரை மாநகர் முழுவதும் பரவியது. அமுதம் பரவியதால் தீய நஞ்சு நீக்கப்பெற்ற உயிரினங்கள் மீண்டும் இன்ப முற்றன.

அனந்தகுணபாண்டியன் அரவணிந்த சடையையுடைய சோமசுந்தரக்கடவுளை நாள் தோறும் போற்றிப் புகழ்ந்து நெடுங்காலம் வாழ்ந்து வந்தான்.

(தொடரும்)

# ஆறுமுகமங்கலம் அருள்மிகு ஆயிரத்தெண் விநாயகர்



தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் வட்டம், ஏரல் ஊரிலிருந்து வடகிழக்கில் மூன்று கிலோ மீட்டர் தொலைவில் ஆறுமுகமங்கலம் என்ற சிற்றூர் உள்ளது. ஊருக்கு மத்தியில் கிழக்கு நோக்கி இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

தமிழ்நாட்டில் விநாயகர் பெருமானுக்குத் தனியே ஆகமவிதிகளின்படி பலிபீடம், கொடிமரம், அமையப் பெற்று மூலஸ்தானத்தில் விநாயகர் பெருமான் வீற்று இருக்கும் திருக்கோயில்கள் மிகவும் குறைவு. ஆறுமுகமங்கலம் அருள்மிகு ஆயிரத்தெண் விநாயகர் கோவில் மிகவும் சிறப்பு வாய்ந்தது. இங்கே அருகில் அம்மை அப்பருடன் விநாயகர் பெருமான் காட்சி கொடுக்கிறார். மேலும் ஐந்து முகத்துடன் பஞ்சமுக விநாயகர் பெருமான், தெற்கு நோக்கி தனிச் சன்னதியில் இருந்தும் பக்தர்களுக்கு அருள் வழங்குகிறார்.



இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் சித்திரை பெருந்திருவிழா பத்துநாட்கள் சிறப்பாக நடைபெறும். 9ம் நாள் திருவிழா அன்று தேரில் விநாயகர் பெருமான் ரதவீதியில் பவனி வருகிறார். அன்று சுற்றுப்புறக் கிராம மக்கள் புத்தாடை அணிந்து தேர்த் திருவிழாவைச் சந்தோசமாகக் கொண்டாடி வருகிறார்கள்.

இத்திருக்கோயில் பண்டைக் காலத்தில் கொற்கையைத் தலைநகரமாக கொண்டு ஆண்டு வந்த பாண்டிய மன்னனால் கட்டப்பட்டது. பாண்டிய மன்னனுக்கு ஆரம்பத்தில் வாரிசு இல்லாமல் இருந்தது. வாரிசு வேண்டி என்ன செய்யலாம் என முனிவரிடம் விசாரிக்க முனிவரும் ஆயிரத்து எட்டு தேசாந்திரிகளுக்கு அன்னதானம் வழங்கினால் புத்திரபாக்கியம் கிடைக்கும் என்று கூறினார். அதன்படி ஆயிரம் தேசாந்திரிகளைத் திரட்டினர். அவர்கள் எல்லோருக்கும் இலை போட்டு உணவு பரிமாறும் போது ஒருவர் எதிர்பாராது குறைந்து விட்டார். விருந்து உபச்சாரம் சிறப்பாக செய்திருந்தாலும் ஒருவர் குறைவு உள்ளதே என மன்னர் வருந்த, விநாயகப் பெருமானே மனித உருவில் வந்து விருந்தில் கலந்து கொண்டார்.

ஆயிரத்து எட்டு தேசாந்திரிகளை அழைத்து விருந்து படைக்கும் போது, எதிர்பாராது ஒருவர் குறைந்து போனதும், பின்பு ஆண்டவனை வேண்டி நினைக்கையில் ஒருவர் வந்து விருந்தில் கலந்து கொண்டதும் முனிவரின் வேண்டுகோள்படி ஆயிரத்து எட்டு தேசாந்திரிகளுக்கு உணவு படைத்த திருப்தியோடு, மன்னர் இரவில் தூங்கும் போது விநாயகர் பெருமான் மன்னர் கனவில் தோன்றித் தானே மனித உருவில் தேசாந்திரியாக விருந்து சாப்பிட வந்ததாகவும் உனது எண்ணப்படி வாரிசு பெறுவாய் என்றும் அதற்காக எனக்கு ஆறுமுகமங்கலத்தில் ஒரு கோவில் கட்ட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மன்னன் தனது கனவில் விநாயகர் பெருமானே வந்தது குறித்து மிகுந்த சந்தோசம் அடைந்தான். விநாயகர் பெருமானின் வேண்டுகோள்படி ஆறுமுகமங்கலத்தில் ஒரு கற்கோவிலைக் கட்டினார். மூலஸ்தானத்தில் விநாயகர் பெருமானோடு அம்மை அப்பரையும் பிரதிஷ்டை செய்து கோவிலை உருவாக்கினார். மன்னனின் எண்ணப்படி வாரிசும் அவருக்கு உருவானது. இன்றும் பக்தர்கள் தங்களது எண்ணம் நிறைவேற விநாயகர் பெருமானுக்கு ஆயிரத்து எட்டு தேங்காய் அல்லது நூற்றுஎட்டு தேங்காய் உடைத்து தங்களது பிரார்த்தனையை நிறைவேற்றி வருகின்றனர்.



# கார்த்திகைத் தீபச்சிறப்பு

**டாக்டர் பு.ஏ. இராமையா,இ.ஆ.ப.,**
அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை,
தலைமைச் செயலகம்

பிரம்மதேவன், திருமால் ஆகிய மூர்த்திகளுக்குகிடையே சிவபெருமான் ஜோதி உருவாய் எழுந்தருளித்தரிசனம்தந்ததலம்திருவண்ணாமலை.

உமா தேவியார் இறைவன் திரிநேத்திரங்களைப் புதைத்த பாவம் நீங்க பூசித்துப் பாகம் பெற்ற தலம்.

திருக்கோவிலை வலம் வந்த புனுகுப் பூனை, குதிரை முதலிய விலங்குகள் நற்பதவி பெற்ற தலம்.

அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நான்கு சைவ ஞானிகளால் பாடல் பெற்ற தலம்.

திருவாரூரில் பிறப்பவர்க்கு முக்தி கிடைக்குமாம். காசியில் இறப்பவர்க்கு முக்தி கிடைக்குமாம். சிதம்பரத்தில் வழிபாடு செய்பவருக்கு முக்தி கிடைக்குமாம். ஆனால் திருவண்ணாமலையை நினைப்பவர்களுக்கே முக்தி கிடைக்குமென்று சைவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். இதை எல்லப்ப நாயனார் பாடி அருளிய அருணாசல புராணத்தின் பின்வரும் பாடல் தெளிவாக விளக்குகிறது.

''தில்லையைக் காணக் காசியில் இறக்கச்
சிறக்கும் ஆரூர்தனிற் பிறக்க
எல்லையில் பெருமை அருணையை நினைக்க
எய்தலாம் முக்தி''


உலகத்தை இயக்குவது பஞ்சபூதங்கள். நீர், நிலம், காற்று, நெருப்பு மற்றும் ஆகாயம் என்று இறைவனால் படைக்கப் பெற்ற இயற்கை அமைப்புகள் தான் பஞ்சபூதங்கள். இவை நமது உடலோடுவெகுவாகசம்பந்தப்பட்டவை.

இவ்வுலகைச் சீர் செய்வதற்காக பஞ்சபூதங்களை ஆட்படுத்தும்தலங்களாக திருவாரூர்- பூமிக்காகவும், திருவானைக்கா - நீருக்காகவும், திருவண்ணாமலை - நெருப்புக்காகவும், திருக்காளத்தி - வாயுக்காகவும், சிதம்பரம் ஆகாயத்திற்காகவும் இறைவன் படைத்துள்ளான் என்பது செய்தி. இந்த அடிப்படையில் திருவண்ணாமலை பஞ்சபூதத் தலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

திருவண்ணாமலையில் கோயில் கொண்டு இருக்கும் மூலவரான அண்ணாமலையார், அருணாசலேசுவரர் என்றழைக்கப்படுகிறார். இத்தலத்தில் இறைவனுடன் வாசம் செய்யும் பார்வதி தேவியார் உண்ணாமலை நாச்சியார், அபிதகுஜாம்பாள், திருக்காமக்கோட்ட நம்பிராட்டியார் என்னும் திருநாமங்களால் அழைக்கப்படுகிறார் எனக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

தேவாரத்தில், சிவபெருமான் அண்ணல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். அண்ணலின் ஒளி வடிவே மலையாக உருவெடுத்து அண்ணல் மலை என அழைக்கப் பட்டு, காலப்போக்கில் திரு என்ற அடைமொழி சேர்ந்து திரு-அண்ணாமலை,





திருவண்ணாமலை என அழைக்கப்படலாயிற்று என்று கூறப்படுகிறது.

அசலம் என்றால் வடமொழியில் மலை என்று பொருள். அருண் என்றால் சூரியன். ஒளி கொண்ட அசலத்தில் சிவபெருமான் வாசம் செய்ததால் அருணாசலம் என்றும் அழைக்கப் படுகிறது.

இப்படிப் பேரும் புகழும் பெற்ற இப்புண்ணிய திருத்தலத்தில் திருஞான சம்பந்த பெருமான் -

''உண்ணாமலை உமையாளொடும் உடன் ஆகிய ஒருவன்
பெண் ஆகிய பெருமான்மலை திரு மா மணிதிகழ
மண் ஆர்ந்தன அருவித்திரள் மழலை முழவு அதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழவா வண்ணம் அறுமே''

''வந்தித்திருக்கும் அடியார் தங்கள் வரு மேல்வினையோடு
பந்தித்திருந்த பாவம்தீர்க்கும் பரமன் உறை கோயில்
முந்தி எழுந்த முழவின் ஓசை முதுகல்வரைகள்மேல்
அந்திப்பிறை வந்து அணையும் சாரல் அண்ணாமலையாரே''

என இறைவன் ஊன் உருகப் பாடி போற்றி மகிழ்ந்துள்ளார்.

அப்பரடிகளும் அகம் குழைந்து

''பைம்பொனே பவளக்குன்றே பரமனே பால் வெண்ணீற்றாய்
செம்பொனே மலர் செய்பாதா சீர்தரு மணியே மிக்க
அம்பொனே கொழித்து விழும் அணியணா மலையுளானே!
எம்பொனே உன்னையல்லால் ஏதும் நான் நினைவிலேனே''

என்று பாடிப் போற்றுகின்றார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும்.

''தேனைக் காவல் கொண்டு விண்ட கொன்றைச் செழுந்தாராய்
வானைக் காவல் கொண்டு நின்றார் அறியா நெறியானே!
ஆனைக்காவில் அரனே பரனே அண்ணாமலையானே!
ஊனைக் காவல் கைவிட்டு உன்னை உகப்பார் உணர்வாரே!''

என்று பாடிப் போற்றுகின்றார்.

திருவண்ணாமலையில் திருவெம்பாவையை அருளினார் மாணிக்க வாசக பெருமான்.

''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை
யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே ! வளருதியோ ? வன்செவியோ நின் செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே ! என்னே!
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்!''

என்று ஆதியும் அந்தமும் இல்லா அருளாளனைப் போற்றிப் புகழுவார்.

வடலூர் இராமலிங்க அடிகள் விண்ணப்பக் கலி வெண்பாவில் அண்ணாமலையாரின் புகழையும் பெருமையையும் பாடுகின்றார்.

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீ ரமண மகரிஷி இக்கோயில் அமைந்துள்ள பாதாள லிங்க ஆலயத்தில் தான் மெய்ஞானம் பெற்றார். அவருடைய சீடர் யோகி ராம்சுரத்குமார் அண்மைக்காலம் வரை வாழ்ந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தது நாம் அறிந்த ஒன்று.

இப்புண்ணிய தலத்தில் கார்த்திகை மாதத்தில் பரணி நட்சத்திர நேரத்தில் அண்ணாமலை தீபம் ஏற்றப்படுகிறது. அந்தத் தீப ஒளியைப் பார்க்கும் பக்தர்களுக்கு அவர்கள் வாழ்வில் ஏற்படும் தடைகள் மறையும் என்பது ஐதீகம்.

இது ஆன்மாவில் உள்ள இருளை நீக்கி ஒளியை அளிக்கிறது. புற வாழ்விலும் அக வாழ்விலும் ஒளியை ஏற்றி மனித வாழ்க்கையைப் பிரகாசிக்க செய்வது தான் இந்தத் தீபத் திருவிழாவின் தலையாய நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கோயில்களிலும் சிவனையும் பார்வதி

# திருமுறை முற்றோதல் விழா






சென்னை திருவான்மியூர் அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயிலில் 27.11.2005 அன்று காலை திருமறை முற்றோதல் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு த.பிச்சாண்டி இ.ஆ.ப. அவர்கள் இவ்விழாவிற்கு தலைமையேற்றுச் சிறப்பித்தார்கள். திருக்கோயிலின் செயல் அலுவலர் திரு தெ.ப.ஏகாம்பரம் எம்.ஏ. அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

தேவியையும் ஜோதி வடிவில் இந்துக்கள் உளமார வணங்குவதை உணர்த்துவதே கார்த்திகை தீபப் பெருவிழாவாகும். இத்திருவிழா திருவண்ணாமலையில் வெகு விமரிசையாக ஆண்டுதோறும் கோலாகலமாக நடைபெறுகிறது. அதுபோல் எல்லா கிராமங்களிலும் வீடுகளிலும் மக்கள் தீப ஒளி ஏற்றி இறைவனை வணங்குகிறார்கள்.

நீளமாக அகத்திக் கம்பில் ஓலைகளையும், இலை தழைகளையும் நாரால் இறுக்கக் கட்டுவதற்குப் பெயர் தான் சூந்து என்பது. இதைக் கொளுத்தி அந்த நெருப்பின் ஒளியோடு வாலிபர்கள் காடுகளில் வலம் வந்து இறைவனை வழிபடுவது திருநெல்வேலி, தூத்துக்குடி போன்ற மாவட்டங்களில் நடைபெறுகின்ற நிகழ்ச்சியாகும்.

இவ்வாறு வலம் வந்து இறைவனை வணங்கி கிராமத் தெய்வங்களான முனியப்பசாமி, சுடலை மாடசாமி, கருப்பசாமி ஆலயங்களை வலம் வந்து ஆலயத்தின் முன் அந்தச் சூந்துக்களை போட்டு அனைத்தையும் ஒளிப் பிழம்பாக எரியச் செய்வர். அதற்கு 'சொக்கப்பானை' என்றும் பெயர் வழங்கப் படுகிறது.

வீரத்தோடும், ஆவேசத்தோடும் தீயினைத் தாண்டுவதும், நெருப்புக் கட்டைகளை வானில் வீசுவதும் கண்கொள்ளாக் காட்சி. அது வீரத்திற்கு விடப்படும் சவால். இது மக்களின் வீரத்தையும் விளையாட்டுத் திறனையும் உலகுக்குப் பிரதிபலிக்கும் முக்கிய நிகழ்ச்சி. இத்திருவிழா உள்ளத்திற்கு மருந்தளிப்பது போல் உடலுக்கும் மருந்தளித்து அகத்தையும் புறத்தையும் பாதுகாக்கும் வரலாற்று சான்றாக விளங்குகின்றது.

இத்தகைய பெருமை மிகு கார்த்திகை தீபத் திருநாளில் ஜோதி வடிவில் தோன்றும் இறைவனை உளமார உணர்ந்து, மனமுருகிப் பாடி, வணங்குவோம். இவ்வையகம் செழித்துத் தழைக்க அனைவரும் நலமுடன் வாழ "நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க" என்ற மாணிக்க வாசகரின் சிவபுராண வரிகளை ஓதி, சிவாய நம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒன்றுமில்லை என்ற ஔவைப் பெருமாட்டியின் வாக்கினை வாழ்வியல் சாரத்தில் உட்படுத்தி வளம்

## அளவோடு உண்டால் நலமோடு வாழலாம்



"அரைவயிறு சோறு
கால்வயிறு நீரு
அவனியில் நோயில்லை பாரு"

என்பது சித்தர் வாக்காகும். அளவோடு உண்டால் நலமோடு வாழலாம் என்பதை வலியுறுத்தவே "குடலைக் கழுவி உடலை வளர்" என நம் முன்னோர்கள் தெரிவித்துள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை :

# ஓதுவார்கள், பூசாரிகள், அர்ச்சகர்கள் ஓய்வூதியம் ரூ. 750 ஆக உயர்வு



தமிழகத்தில் உள்ள திருக்கோவில்கள், மக்கள் இறை நம்பிக்கையுடன் கூடி வழிபடும் மையங்கள் என்பதோடு மட்டுமல்லாமல், நமது தொன்மையான வரலாற்றையும், பண்பாட்டையும் உலகுக்கு எடுத்துக் கூறுகின்ற உன்னதத் திருத்தலங்களாகவும் விளங்குகின்றன.

பத்தர்களுக்கு மன அமைதியையும், மகிழ்ச்சியையும் தருகின்ற நமது திருக்கோயில்கள், இந்து சமய பண்பாட்டுப்பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் கலைச் சிகரங்கள்- தமிழர்களின் கலை வளர்ச்சியை வெளிப்படுத்தும் பண்பாட்டுச் சின்னங்கள் என்றால் மிகையாகாது.

ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் பாடி பரவப் பெற்ற இந்தப் புகழ்மிகு புனிதத் திருத்தலங்களில் ஓதுவார்கள், அரையர்கள், திவ்வியப்பிரபந்தம் பாடுவோர் ஆகியோர் இறைவனைப் போற்றித் திருப்பாடல்களைத் தினமும் பாடி தெய்வீகத் தொண்டாற்றி வருகின்றனர்.

அதே போல், திருக்கோவில்களில் இறைவனைத் துதித்து, அர்ச்சனை முதலான தெய்வீகப் பணிகளை ஆற்றுகின்ற அர்ச்சகர்களும், வேதபாராயணர்களும், கிராமப்புறங்களில் உள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத சிறு சிறு திருக்கோவில் பூசாரிகளும், இறைவன் திருத்தொண்டில் தங்களை ஈடுபடுத்திப் பணியாற்றி வருகின்றனர். இப்பணிகளுக்கு அந்தத் திருக்கோவில்களில் பணியாற்றுகின்ற இசைக் கலைஞர்கள் உறுதுணையாக இருந்து வருகின்றனர்.

கோவில்களில் பணியாற்றி ஓய்வுபெற்ற ஓதுவார்கள், அரையர்கள், திவ்வியபிரபந்தம் பாடுவோர், அர்ச்சகர்கள், வேத பாராயணர்கள், இசைக்கலைஞர்கள் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத சிறு கோவில் பூசாரிகள் ஆகியோர் தற்போது ஓய்வூதியமாக மாதந்தோறும் 500 ரூபாய் பெற்று வருகின்றனர்.

பல்வேறு இறைவன் திருப்பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு பணியாற்றி வருகின்ற இவர்கள், அப்பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின் மன நிறைவுடன் வாழ்ந்திட ஏதுவாக இவர்கள் தற்போது பெற்று வரும் ஓய்வூதியத்தொகையை உயர்த்தி வழங்கிட நான் முடிவு எடுத்து உள்ளேன்.

இதன் படி, திருக்கோவில்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஓதுவார்கள், அரையர்கள், திவ்வியபிரபந்தம் பாடுவோர், அர்ச்சகர்கள், வேதபாராயணர்கள் இசைக்கலைஞர்கள் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத சிறு திருக்கோவில் பூசாரிகள் ஆகியோர் பெற்று வரும் ஓய்வூதியத் தொகையைக் கணிசமாக உயர்த்தி இனி இவர்களுக்கு மாதம்தோறும் 750 ரூபாய் ஓய்வூதியமாக வழங்கிட நான் தற்போது உத்தரவிட்டு இருக்கிறேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது உடனடியாக அமல்படுத்தப்படும்.

இதன்மூலம், இவ்வகையில் மொத்தம் 3,247 பேர் பயன் அடைவார்கள். இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் ஒரு கோடி ரூபாய் செலவாகும். இத்திட்டத்துக்கான மொத்த செலவு 2 கோடியே 92 லட்சம் ரூபாய் ஆக இருக்கும்.

## அருள்மிகு சமயபுரம் மாரியம்மனுக்குத் தங்கக்கவசம்

திருச்சி அருள்மிகு சமயபுரம் மாரியம்மனுக்குப் பக்தர் ஒருவர் உபயமாகத் தங்கக்கவசம் வழங்கியுள்ளார். தங்கக்கவசம் சாற்றிய திருக்கோலத்தில் சமயபுரம் மாரியம்மனைப் பக்தர்கள் வழிபட்டு மகிழலாம்.



சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் } திருமிகு **த. பிச்சாண்டி**, இ.ஆ.ப., ஆணையர்.
: தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034. தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் : கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929

# அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில், ஸ்ரீ வில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம்

தொலைபேசி எண். 04563 - 260254.





## ஸ்ரீ ஆண்டாள் திருஅத்யயன உற்சவம்

மார்கழி 16(31. 12. 2005) முதல் தை 7(20. 1. 2006) வரை.

## ஸ்ரீ ஆண்டாள் மார்கழி நீராட்ட உற்சவம்

மார்கழி 23(7. 1. 2006) முதல் தை 2(15. 1. 2006) வரை

## அழைப்பிதழ்

**''மாலே மணிவண்ணா மார்கழி நீராடுவான்**
**மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்**
**ஞாலத்தையெல்லாம் நடுங்க முரல்வன**
**பாலன்ன வண்ணத்துள் பாஞ்சசன்னியமே**
**போல்வன சங்கங்கள் போய்ப் பாடுடையனவே**
**சாலப்பெரும்பறையே பல்லாண்டிசைப்பாரே!**
**கோலவிளக்கே கொடியே விதானமே**
**ஆலினிலை யாய்! அருளேலோ ரெம்பாவாய்''**

மங்களாசாசன மறையுணர் திருவருளுடையீர்!

வராகக்ஷேத்திரம் என்று அழைக்கப்பட்ட ஸ்ரீவில்லிபுத்தூரில் எழுந்தருளி சேவை சாதித்துப் பெரும்புகழ் கொண்டிருக்கும் ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் மார்கழி நீராட்ட உற்சவத் திருவிழா கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. பகற்பத்து - திருமொழித் திருநாள் | - | 31. 12. 2005 முதல் 9. 1. 2006 வரை |
| 2. வைகுண்ட ஏகாதசி - பரமபதவாசல் திறப்பு | | 10. 1. 2006 முதல் |
| (இராப்பத்து) - திருவாய்மொழித் திருநாள் | | 20. 1. 2006 வரை |
| 3. நீராட்ட உற்சவம் | - | 6. 1. 2006 முதல் 15. 1. 2006 வரை |

திருமங்கை மன்னன் பெரிய பெருமாளிடத்தில் திருவாய்மொழிக்கு வேத ஸாம்யத்தை பிரார்த்தித்துப் பெற்ற அந்த உத்ஸவத்தை ஸாங்கோபாங்கமாக நடத்தக் கருதி சிறிய திருஅத்யயன உத்ஸவம் (பகற்பத்தும்) பெரிய திருவத்யயன உத்ஸவம் (இராப்பத்தும்) பெரியாழ்வார் திருமகளான அந்த ஸ்ரீ ஆண்டாள் திருவாய்ப்பாடியில் கோபிமார் அனுஷ்டித்த மார்கழி நோன்பைத் தானும் கோபிகா ஜன்மத்தை ஆஸ்தானம் பண்ணி அனுசரித்து அனுபவித்ததைப் பிற்காலத்திலும் அடியார்கள் ஸேவித்து உய்வு பெறுவதற்கும், பாலுண்ணும் குழந்தை நோய் தீர்வதற்குத் தாய் மருந்தை உள்கொள்வது போல் ''த்வம்மாதா ஸர்வலோகா நாம்'' என்றபடி ஜகன்மாதாவான தாம் ஸம்ஸாரிகளின் தாபத்திரயங்கள் தீருவதற்கு நீராட்டங்கண்டருளுகிற முறையையும் காட்டுகிற திருப்பாவை உத்ஸவமும் என்கிற மார்கழி நீராட்ட (எண்ணெய்க் காப்பு) உத்ஸவமும், ஸகலஜகத் ஜனனியான ஸ்ரீ ஆண்டாள் கண்டருளுவதாலும் பக்தப்பெருமக்கள் அனைவரும் குழாங்களாய்அடியவருடன்கூடிவந்து மண்ணும் மணமும் கொண்டு ஸ்ரீபெரிய பெருமாள், ஸ்ரீ ஆண்டாள், ஸ்ரீரெங்கமன்னார், திருமங்கை மன்னன், நம்மாழ்வார் முதலிய ஆழ்வார்கள் ஆசாரியாள் இன்னருளுக்கு என்றும் இலக்காகி நீங்காத செல்வம் நிறைந்து நன்மக்களைப் பெற்று இன்புற வேண்டுகிறோம்.

## நித்திய ஆராதனை கட்டளைத் திட்டம்

நித்திய ஆராதனை கட்டளைத் திட்டத்தில் ரூ5,000/- முதலீடு செய்து, தாம் விரும்பும் ஒரு நாளில் நித்தியப் பூஜை நடத்தி ஸ்ரீ ஆண்டாள் ஸ்ரீரெங்கமன்னார் பேரருள் பெற வேண்டுகிறோம்.

## நித்திய அன்னதானத் திட்டம்.

தமிழக முதல்வரின் நித்திய அன்னதானத் திட்டத்தில் 100 பக்தர்களுக்கு மதிய உணவு வழங்க ரூ1,200/- நன்கொடை செலுத்தி அன்னதானம் செய்யலாம். ரூ.15,000/- நிரந்தர வைப்பு நிதியாகச் செலுத்தி வட்டியைக் கொண்டு வருடத்தில் ஒரு நாள் 100 பக்தர்களுக்கு அன்னதானம் செய்து ஸ்ரீஆண்டாள் ஸ்ரீரெங்கமன்னார் திருவருள் பெற்று இன்பமுற வேண்டுகிறோம்.

**எம்.ஏ. சுப்பிரமணியராஜா,**
தலைவர், அறங்காவலர் குழு.

**க. இராஜமாணிக்கம்,** எம். காம்.,பி.எல்., பிஎட்.,
செயல் அலுவலர்.

அறங்காவலர்கள்

**வெ. சுகுமாரன், கு. திருப்பதி, இரா. துரைப்பாண்டியன், பெ. லெட்சுமி.**

பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 03-05 / WPP No. 451/03-05



# ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் வைகுண்டஏகாதசி மகோத்ஸவ



## அழைப்பிதழ்

108 திவ்ய தேசங்களில் முதன்மையானதும், பூலோக வைகுண்டம் பெரியகோயில் என்று அழைக்கப்படுகிற ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலி நடைபெறும் அனைத்து உற்சவங்களுமே சிறப்பு வாய்ந்தவை ஆகும்.

பிரதி வருஷமும் மார்கழி மாதத்தில் நடைபெறும் திருஅத்யயன உற்சவம் (வைகுண்ட ஏகாத திருமொழி, திருவாய் மொழித் திருநாட்கள்) முக்கிய திருவிழா ஆகும்.

பகல் பத்து இராப்பத்து 'இயற்பா' என்று 21 நாட்கள் நடைபெறும் இந்த உற்சவத்தில் பகல் பத்தில் போது நம்பெருமாள் அர்ச்சுன மண்டபத்திலும். இராப்பத்து திருநாளில் திருமாமணி மண்டபத்திலும் (ஆயிரங்கால் மண்டபம்), எல்லா ஆழ்வார்கள் ஆசாரியர்களுடன் எழுந்தருளிச் சேவை சாதிப்பது மிகவும் சிறப்பாகும்.

பகல் பத்தின் போது திருமொழிப் பாசுரங்களும், இராப்பத்தில் திருவாய்மொழிப் பாசுரங்களும் அபிநயங்களுடன் அரையர்களால் சேவிக்கப்படும். பகல்பத்து திருநாளில், பத்தாம் நாள் நம்பெருமாள் மோகினி அலங்காரத்துடனும். வைகுண்ட ஏகாதசி அன்று நம்பெருமாள் ரத்ன அங்கியுடனும், மூலவர் முத்தங்கியுடனும் சேவை சாதிப்பார்கள்.

வைகுண்ட ஏகாதசியன்று காலை நம்பெருமாள் பரமபதவாசல் வழியே வந்து திருமாமணி மண்டபத்தில் எழுந்தருளுவார். இராப்பத்து எட்டாம் திருநாளில், நம்பெருமான் குதிரை வாகனத்தில் எழுந்தருளி வேடுபறி கண்டருளுவார். இராப்பத்துச் சாற்று முறையன்று நடைபெறும் நம்மாழ்வார் மோட்சம் சேவிப்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாகும். இந்த உற்சவம் நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்திற்கும், ஆழ்வார்களுக்கும் ஏற்றமிகு உற்சவமாகித் திருமங்கையாழ்வார் காலம் தொடங்கி நடைபெற்று வருகின்றது.

இந்த உற்சவத்திற்கு அனைவரும் பெருந்திரளாக வந்திருந்து நம்பெருமாளைச் சேவித்து அருள் பெறும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நடப்பு 1415ம் பசலியில் வைகுண்ட ஏகாதசி திருவிழா 30.12.2005ல் துவங்கி 20.1.2006ல் முடிவடைகிறது:

வைகுண்ட ஏகாதசி முக்கிய திருவிழாக்கள்:

| | | |
|---|---|---|
| 30.12.2005 | - | திருநெடுந்தாண்டகம் |
| 31.12.2005 | - | பகல்பத்து முதல் திருநாள் |
| 9.01.2006 | - | மோகினி அலங்காரம் |
| 10.01.2006 | - | வைகுண்ட ஏகாதசி பரமபதவாசல் (திருவாசல்) திறப்பு அதிகாலை 4.30 மணி |
| 6.01.2006 | - | திருக்கைத்தல சேவை |
| 17.01.2006 | - | வேடுபறி |
| 20.01.2006 | - | ஆழ்வார் மோட்சம் |

குறிப்பு :- இத்திருக்கோயிலின் ''நித்திய ஆராதனை கட்டளைத்'' திட்டத்தில் நிரந்தரக்கட்டளை ஏற்படுத்துபவர்களுக்கு முதலீடு செய்வதற்காகத் தாங்கள் செலுத்தும் தொகைக்கு மத்திய அரசு வருமான வரிச்சட்டம் பிரிவு 80ஜி-ன் கீழ் வருமான வரி விலக்குச் சலுகை உண்டு.

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள 'அன்னதானத்திட்டத்தில்' தினமும் மதியம் 12.15 மணிக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது. ஒரு நா செலவுத் தொகை ரூ. 2,500/- நிரந்தர அன்னதானத் திட்டத்திற்கு ரூ. 30,000/- செலுத்துபவர்களுக்கு வருமானவரி விலக்கு உண்டு.

**திரு ராயர் கே.சுப்பாராவ்,**
அறங்காவலர்,

**திருமதி த. கஸ்தூரி,**
அறங்காவலர்

**திரு எஸ். சிங்கப்பெருமாள் உத்தமநம்பி.**
தலத்தார்/சுழல்முறை அறங்காவலர்.

**ப.சிவகுமார்.** பி.எஸ்.சி., பி.எல்.
இணை ஆணையர்/செயல் அலுவலர்